விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 13 ஞாயிற்றுக்கிழமை (26.04.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128

# நேபாளத்தில் அதி பயங்கர நில நடுக்கம்

## ஆயிரத்தை தாண்டியது உயிர்ப்பலி









15 ஆம் பக்கம் பார்க்க....

# காணாமல் போனோர் விசாரணை

## ஜனாதிபதி அனுமதியுடன் 4 குழுக்கள் விரைவில்

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நான்கு விசாரணைக் குழுக்கள் ஜனாதிபதியின் அனுமதியுடன் அமைக்கப்படவுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தீஸ்வரக் குருக்கள் இறையடி சேர்ந்தார்



(யாழ்ப்பாணம்)

காரைநகர் தந்த மூதறிஞர். சிவத் தமிழ் வித்தகர் கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள் தனது நூறாவது வயதில் நேற்று அதி காலை வேளை தேகவியோகம் அடைந்தார்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத் தின் குருமரபில் பிறந்த வைத்தீஸ் வரக் குருக். 16 ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளே...




## குடும்பஸ்தர் அடித்துக் கொலை

(கரணவாய்)

அடிகாயம் மற்றும் கூரிய ஆயுத் தால் கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாப மாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று இரவு 8.00 மணியளவில் அல்வாய் வடக்கு அல்வாயில் இடம் பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி திருச்செல்வம் (வயது 48) என்ற மூன்று பிள்ளை யின் தந்தையே உயிரிழந்தவரா வார்.

இது தொடர்பில் தெரியவருவதா வது அல்வாய் வடக்கு பிரதேசத்தில் நேற்று இரவு 8.00 மணியளவில் இளைஞர்கள் சிலர் மோதலில் ஈடு பட்டுள்ளனர்.

குறித்த மோதலை தடுக்க முற்பட்ட வேளையே மேற்படி குடும்பஸ்தர் கூரியஆயுதங்களால் கடுமையாகத் தாக்குதலுக்கு உள் ளாகி உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது. 16 ஆம் பக்கம் பார்க்க....

### ராஜபக்ஷக்கள் மீதான நடவடிக்கையாலேயே

## ஜனாதிபதி மைத்திரிபாலவை மகிந்த சந்திக்க மறுப்பு



(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவை சந்திப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ மறுத்தமைக்கான பின்னணி தொடர்பில் தகவல்கள் வெளியாகி யுள்ளன.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிராகவும், தனது ஆட்சிக்காலத் தில் முக்கிய பங்கு வகித்த அதிகாரி களுக்கு எதிராகவும் தற்போதைய அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாலேயே, மைத் திரிபால சிறிசேனவுடன் நேற்று சனிக்கிழமை 16 ஆம் பக்கம் பார்க்க....

## ஊழல் விசாரணைகள் நிறுத்தப்பட மாட்டாது!

### கைதுகள் தொடரும் என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

ஊழல், மோசடிகள் மற்றும் முறை கேடுகளை கண்டறிய மேற்கொள் ளப்பட்டு வரும் சட்ட ரீதியான செயற் பாடுகள் எந்த விதத்திலும் நிறுத்தப் பட மாட்டாது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட வர்கள் சட்டத்திற்கு முன் நிறுத்தப்படு வார்கள் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

கோடிக்கணக்கான அரச நிதி பாரியளவில் மோசடி செய்யப்பட்டமை தொடர்பாக நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு 52 முறைப்பாடுகள் கிடைத் துள்ளன. 15 ஆம் பக்கம் பார்க்க....

## இரட்டை பிரஜாவுரிமை வழங்கத் தீர்மானம்

(கொழும்பு)

வெளிநாட்டிலுள்ள 400 இலங் கைப் பிரஜைகளுக்கு இரட்டை பிரஜாவுரிமை வழங்குவதற்கு பொது அமைதிக்கான அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 30 ஆம் திகதி அவர்களுக்கான இரட்டை பிர ஜாவுரிமை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

இரட்டை பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு மேலும் ஆயிரக் கணக்கான விண்ணப்பங்கள் கிடைத் துள்ளதாக 15 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## விற்பனைக்கு

ஒரு கைப் பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள HA- XXXX இலக்க **Super cup 50** (Japan) மோட்டார் வாகனம் விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு: 0778536808, 0773212481

(192)

## தவறிவிட்டது

(194)

செல்வலிங்கம் பிரியதர்ஷினி என்பவருடைய கடவுச்சீட்டு இன்னும் பல ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கொக்குவில் சந்திக்கும் யாழ். நகரிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0771636337


# சென்னை வெற்றி

சென்னை அணி, பஞ்சாப் அணியை 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது. ஐபிஎல் சீசன் 8 தொடரின் நேற்றைய போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் அணிகள் மோதின. முன்னதாக நாணயச்சுழற்சியில் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய சென்னை அணி 20 ஓவர் முடிவில் 3 விக்கெட் இழப்பிற்கு 192 ஓட்டங்கள் எடுத்தது. 193 ஓட்டங்கள எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 95 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. எனவே சென்னை அணி 97 ஓட்டங்கள் வித் தியாசத் தில் வெற்றி பெற்றது.


## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?

இது ஒரு அரியசந்தர்ப்பம் தவறவிடாதீர்கள். விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/=-35000/= வரை. தங்குமிடம், உண்வு, பயிற்சி வழங்கப்படும். (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள்.

**தொடர்புகளுக்கு: 0766398366**

(C-817)



## JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING 2015

### *NOTICE OF MEETING*

Notice is hereby given that the **Annual General Meeting (AGM)** of the **Jaffna Medical Association** will be held on monday, **25th may 2015 at 11.00 pm at the Conference Hall Teaching Hospital, Jaffna.** for the following purposes;

1. To Receive and consider the Annual Report of the Committee of Management on the affairs of the Company and the Statement of Accounts for the year ended 31 st December 2014 and the Report of the Auditors thereon.
2. To approve the drafted new constitution
3. To Consider any resolutions proposed by members and committee where due Notice has been given.
4. Te Elect the committee of Management for year 2015/16
5. To Appoint the Auditors of the Association and to authorize the committee of Management to determine their remuneration.

By order of the Committee of Management,

**Hony. Secretary**
**24th April 2015**

(C-819)



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து

Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகலைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(த-802)



## வாழ்க்கையில் வெறுப்பா?

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(C-741)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**



## தேவை

அரசநிறுவனத்தில்பணியாற்றும்சிறிய குடும்பத்துக்கு **பணிப்பெண்** தேவை.

வயதெல்லை: 25-40

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு இலக்கம்: 0757181185

(C-810) வடமராட்சி



## கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி German Language Academy

ஜேர்மன்,சுவிஸ்,ஒஸ்ரியா நாடுகளுக்கான டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகம் கேட்கும் A1 சான்றிதழுக்கு ஏற்ற வகையில் Audio, Video மூலம் எங்கும் இல்லாதவாறு தமிழ் விளக்கத்துடன் கற்பிக்கப்படுகின்றது.

- கடந்த 17.03.2015 அன்று ஜேர்மன் தூதரகம் நடத்திய A1 பரீட்சையில் பெருந்தொகையான மாணவர்கள் 60 தொடக்கம் 80 வரையிலான புள்ளிகள் பெற்று கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.
- புதிய பிரிவுகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. தொடர்பு கொண்டு அறிவுறுத்தலின் படி நேரில் வரவும்.

(155)

**கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்**
**0779707322**



பாராட்டி

# வாழ்த்துகின்றோம்

**உயர்திரு. வீ. கே. அருந்தவநாதன்**
**(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)**



திருநெல்வேலி யாழ்கோ சங்கத்தின் பணியாளர்களாகிய
நாங்கள் இன்று எங்கள் சங்கத்தினரால் எடுக்கப்படுகின்ற
பாராட்டுப் பெருவிழாவிலே விழா நாயகன்
உயர்திரு.**வீ.கே.அருந்தவநாதன்**
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)
அவர்களுக்கு இச்சங்கத்தின் பணியாளர்களாகிய நாங்கள்,
எல்லா நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என
உள்ளம் மகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இச்சங்கத்தின் பணியாளர்களாகிய எங்களுக்கு மறுக்கப்பட்டிருந்த பல உரிமைகளைப் பெற்றுத் தந்ததுடன் இச்சங்கத்தின் முன்னாள் பெருந்தலைவர் **உயர்திரு.வி.ஆர்.ரஞ்சன்** அவர்களுடன் இணைந்து எங்கள் சங்கத்தினதும் பணியாளர்களினதும் பால் உற்பத்தியாளர்களினதும் பாவனையாளர்களினதும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அரும்பெரும் பணியாற்றிய இன்றைய விழா நாயகனாம் உயர்திரு.வீ.கே.அருந்தவநாதன் அவர்களை மனம் நிறைவோடு வாழ்த்தி வணங்குகின்றோம்.

**பணியாளர் : 'யாழ்கோ - சங்கம்' திருநெல்வேலி.**

(200)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருத்தங்களை ஏற்றுக் கொள்ளாவிட்டால் 19ம் திருத்தச்சட்டத்தை ஆதரிக்கமுடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

திருத்தங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் 19 ஆம் திருத்தச் சட்டத்தை ஆதரிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். நாளை 27 மற்றும் நாளை மறுதினம் 28 ஆம் திகதிகளில் 19 ஆம் திருத்தச் சட்டம் குறித்த நாடாளுமன்ற விவாதமும், வாக்கெடுப்பும் நடத்தப்படவுள்ளது.

சில திருத்தங்களை ஏற்றுக் கொண்டால் மட்டுமே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பின் ஆதரவு வழங்கப்படும் என்பது பிரதமருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரை பணி நீக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் மற்றும் அரசியல் அமைப்புச் சபையின் அங்கத்தினராக தொழில் நிபுணர்களுக்கு பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைகள் உள்ளடங்கிய கடிதமொன்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் நேற்று முன்தினம் தேசிய நிறைவேற்றுப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ்வாறான திருத்தங் களை முன்வைக்க வேண்டுமென ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற் குழுவோ அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மத்திய செயற்குழுவோ தீர்மானிக்கவில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அமைச்சர் ராஜித சேனாரட்னவும் தேசிய நிறைவேற்றுப் பேரவையில் தெரிவித்துள்ளனர்.

19ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)


உ
சிவமயம்



புத்தள மாவட்டம்
முந்தல்- கருங்காலிச் சோலை ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத
ஸ்ரீ கல்யாண முருகன் தேவஸ்தானம்
புனராவர்த்தன அஷ்ட பந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

மஹா கும்பாபிஷேகம்

கர்மாரம்பம்
சித்திரை 16 ஆம் நாள்
29.04.2015
புதன்கிழமை
காலை 6 மணிக்கு

மஹாயாகாரம்பம்
சித்திரை 16 ஆம் நாள்
29.04.2015
புதன்கிழமை
மாலை 6 மணிக்கு

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு
சித்திரை 17 ஆம் நாள்
30.04.2015
வியாழக்கிழமை
காலை 8 முதல் மாலை 3 மணிவரை

மஹா கும்பாபிஷேகம்
சித்திரை 18 ஆம் நாள்
01.05.2015
வெள்ளிக்கிழமை
காலை 9.30 மணிக்கு

இலங்கையில் முதலாவது இந்துமத குருபீடாதிபதி
சிவாகமஞானி- நாயன்மார்கட்டு
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

சங்கானை ஸ்ரீ முருகமூர்த்தி தேவஸ்தான ஆதீன குருமுதல்வர்
சிவாகமஞானி- பிரதிஷ்டா கிரியாரெத்தினம்
அருள்ஜோதி சிவா நித்தியானந்த சிவாச்சாரியார்

சிவாகம சிரோமணி சிவஸ்ரீ சாம்பசிவ கணேசக் குருக்கள் ஆகியோரின் விண்ணுலக குருவருளாசிகளுடன்

பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார்- மேற்படி ஆலயத்தில் மூன்றாவது முறையாகவும் மஹா கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக நடத்தி வைக்கும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி "சபரிமலை குரு முதல்வர்" ஆன்மீக அருள்ஜோதி "கலாநிதி" ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் J.P. அவர்கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

சர்வசாதகாசிரியர்கள்

சாதகபூஷணம்
சிவபிரம்மஸ்ரீ நித்ய.
சிவானந்தசிவாச்சாரியார்

ஆலய பிரதம குரு
பிரம்மஸ்ரீ
க.விஜயகுமாரசர்மா

அனைவரும் வருக கல்யாண
முருகன் அருள் பெறுக.

சாதக கலாபமணி
பிரம்மஸ்ரீ . நித்ய. சுதானந்த சர்மா
IDM சங்கானை.

சிற்ப வர்ண வேலை- ஸ்தபதி
R. சிவகுமார் குழுவினர்,
இரத்தினபுரி.
கோபிநாத் குழுவினர், இந்தியா.

இங்ஙனம்:-
ஆலய பரிபாலன சபையினர், முந்தல்காடு-
கருங்காலிச் சோலை, செம்புக்குழி ஊர் மக்கள்.


## இராசி பலன்

26.04.2015
(சித்திரை 13, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அட்டமி முன்னிரவு 9.42 மணிவரை
பூசம் முன்னிரவு 6.59 மணிவரை
இராகுகாலம் 4.29-5.59 மணிவரை
சுபநேரம் 8.59-10.29 மணிவரை

வளவன்

**மேடம்** தொலைபேசி மூலம் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க நினைப்பீர்கள்.

**இடபம்** குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள்.

**மிதுனம்** பேச்சில் கனிவு பிறக்கும், உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்பால் பொருளாதார விருத்திக்கு ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**கடகம்** பயணங்களால் பலன் கிடைக்கும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள், பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**கன்னி** எந்தக்காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும்,திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும்.

**துலாம்** சுப காரியங்கள் நடைபெறும் நாள், ஆற்றல் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**விருச்சிகம்** எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, ஆன் றோர்களின் சந்திப்புக்கள் இடம் பெறலாம்,இலக்குக் கட்டுப்பட்டு நடக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**தனுசு** திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், ஒருவகையில் சிக்கனமாக இருந் தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், பிரயாண பயமுண்டு.

**மகரம்** கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற் படுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும்.

**கும்பம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** அரைகுறையாக இருந்த பணி களை மீதியும் தொடர்வீர்கள், பிற ருக்கு உதவும் எண்ணம் உரு வாகும், வாக்கு மேன்மையுண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் கிடைக்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உடனடி தேவை

வாழ்க்கையை வசந்தமாக்க இன்றே எம்முடன் இணையுங்கள்: தனியார் துறைமுகம், விமானநிலையம் மற்றும் பிரதான தொழிற்சாலைகள் (ஜாம், ரொபி, பிஸ்கட், கோடியல், சொக்லட், பால்மா) மேசன், வெல்டர், காப்பென்டர், பெயின்ரர், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், ஹொட்டல் உட்பட பல வெற்றிடங்கள் 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 48000/= தொழில் அடிப்படையில் உணவு, தங்குமிடவசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

(சு-814)

**தொடர்புகளுக்கு:- 077 8176 234**

# தேவை

மாத சம்பளம் 25000-45000 பெற முடியும். துறைமுகம், விமானநிலையம், (தனியார்) இலற்றீசியன், வெல்டர், காப்பென்டர், பெயின்ரர், ஹொட்டல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் ஜாம், ரொபி, பால்மா, பிளாஸ்டிக் இன்னும் பல உற்பத்தி லேபல், பொதியிடல் பிரிவுக்கு 17-50 வயது முஸ்லிம், தமிழ், ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவீர்கள். உணவு, தங்குமிடம் சகாய விலைகளில் வருகை தரும் நாளிலே வேலை.

(சு-813)

**தொடர்புகளுக்கு:- 077 8430 179**

# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை
வட்டாரம்:-05, ஆதனஇலக்கம்:24, கல்லுண்டாய் வீதி

வட்டாரம் 05 கல்லுண்டாய் வீதி, ஆதன இலக்கம் 24 இல் அமைந்துள்ள உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று ஆனைக்கோட்டை இறை "தூக்கு மரக்காடு" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 05 கொண்ட இவ்வாதனமானது யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கை சேர்ந்த இறப்பியல் சுகனி கஸ்பர் ஆகிய இவர்களால் அறுதி உறுதி மூலம் ஆனைக்கோட்டை அடைக்கலமாதா கோவிலுக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.ஆ.குமாரசாமி முகதாவில் நிறைவேறிய 6138 ஆம் இலக்க 1918.05.16 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "தூக்குமரக் காடு" நிலப்பரப்பு 05 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் அடைக்கலமாதா கோவில் ஆனைக்கோட்டை என்ற பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய். (187)

8 ஆண்டுகளுக்கு முன் காணாமற்போன

# இலங்கைப் பெண் வேலூர் முகாமில்

(கொழும்பு)

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு காணாமற்போன முல்லைத்தீவைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தமிழகத்திலுள்ள வேலூர் அகதி முகாமில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

தனது மகளைக் காணவில்லையென முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவர் செஞ்சிலுவை சங்கத்தில் கொடுத்த முறைப்பாட்டிற்கமைய குறித்த பெண் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணைத் தேடும் பணியில் செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஈடுபட்டு, தமிழகத்தில் வேலூர் மாவட்டம் வாலாஜா, அணைக்கட்டு அகதிகள் முகாமை பார்வையிட்டுள்ளனர்.

மேலும், பொலிஸ் மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் காணாமற்போன இளம் பெண்ணை பற்றி விசாரித்துள்ளனர்.

இந் நிலையில் தற்போது அந்த பெண் அணைக்கட்டு அகதி முகாமில் இருந்ததை கண்டு பிடித்துள்ளனர்.

பின்னர் வேலூர் சங்க செயலர் இந்தர்நாத் அந்த பெண்ணிடம் அவரது தந்தை எழுதிய கடிதத்தை வழாங்கியுள்ளார்.

இதைத்தொடர்ந்து அந்த பெண்ணை 8 ஆண்டுகளுக்கு பின்னர் அவரது குடும்பத்தினருடன் சேர்த்து வைத்துள்ளனர். (இ-5)






# எமது இதயம் நிறைந்த நன்றிகள்

**மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வுப் பாதையில் வாழ**
**எங்கள் வாழ்வில் வளம்பெற்று உயர மங்கலம்**
**நோக்கி மகிழும் இதயத்தீர்!**

**மணமக்கள்:-**
**சுஜீவன் - நந்தினி**



10.04.2015 வெள்ளிக்கிழமை சரஸ்வதி திருமண மண்டபத்தில் (சேர்-பொன்.இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற்ற "இல்லறம் ஏற்புவிழா" வில் கலந்து கொண்ட அறிவுசால் பெரியோர்களின் அன்பு ஆசியினாலும், உற்றார், உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் நல்வாழ்த்துக்களாலும் பெரும் மகிழ்வு கொண்டோம். உங்கள் அன்பும், ஆசியும், என்றும் நிலைபெற்று நிலைக்க எமது இனிதான இல்லற சங்கமத்தில் கலந்து கொண்ட அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் உவகை பொங்க அன்புடனும், பண்புடனும் எமது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு.த.க.சுப்பிரமணியம்
குடும்பத்தினர்
ஆடியபாதம் றோட்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். யாழ்ப்பாணம்.
தொ.பே:-0775081775

திரு.திருமதி சிவ.ஆறுமுகசாமி
(JP- All Island) குடும்பத்தினர்
NO.42 "ஜெகா பவனம்"
கோணாவளை லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ.பே:0777299272 (126)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேசைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி; யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் மேசைப்பந்தாட்ட ஆண்,பெண் அணிகளும் இணைந்து நடத்துகின்ற அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான மேசைப் பந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். பல்க லைக் கழக உடற்கல்வி அலகில் நேற்றுக்காலை 8 மணிக்கு ஆரம்பமானது.

பெண்களுக்கான சுற்றுப்போட்டி 26 ஆம் திகதி நடைபெறும்.

இச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவில் 8 அணிகளும் ஆண்கள் பிரிவில் 8 அணி களும் பங்கு பற்றுகின்றன. (இ-3)


## வேலைவாய்ப்பு

மலர்ந்திருக்கும் புத்தாண்டில் கொழும்பை அண்மித்த பகுதிகளில் புதிய நிரந்தர தொழில் நியமனங்கள் பல.48000 வரையான மாதாந்த சம்பளத்தை தொழில் அடிப்படையில் பெற முடியும். கொழும்புத்துறை முகத்தில் வெல்டர்,இலற்றீசியன்,பெயின்ரர்,A/C மெக்கானிக் சாதாரண ஊழியர் உட்பட மற்றும் பல வெற்றிடங்கள். உணவு, தங்குமிடம் அனைத்து வசதிகளும் உண்டு.

(க-812)

தொடர்புகளுக்கு:- 077 9141 804


## ஜோதியிற் கலந்த ஜோதி



தத்துவ வித்தகர், அறவழி ஒழுகிய அந்தணப் பெருந்தகை,திருமுறைக் காவலர், மணிவாசகர் மேல் மாசற்ற பக்தி கொண்ட மாணிக்கம், மடங்கண்டும், அவர்தம் திருவுரு கண்டும் மகிழ்ந்த பெருந்தகை அமரர் கலாநிதி க.வைத்தீஸ்வரக் குருக்கள் மறைந்துவிட்டார் என்ற சேதியால் தமிழ் கூறும் நல்லுகமே நிலை குலைந்து போயுள்ளது.

திருநெறிய தமிழ் தந்த சம்பந்தர் அந்தணப் பெருமனாக இருந்தும் அந்தணப் பெருமக்கட்கும், இந்த உலகிற்கும் நற்றுணையாவது நமசிவாயவே என்று இடித்துரைத்தவர். இப்பெருந்தகையோ இவ்வுலகிற்கு அதைவிட ஒரு சற்றே மேலே போய் வேதத்தைவிட திருமுறை உயர்ந்தது என்று நிரூபிக்க திருமுறைப் பெருமை என்ற நூலை இந்த உலகுக்குத் தந்தவர். இன்று திருமுறைக்குஆலயங்களில் அளிக்கப்படும் நிலை கண்டு வருந்தியவர். பல நூல்களின் பதிப்பாசிரியர். திண்ணபுரத்தான் திருச்சரிதை கூறும் திண்ணபுர அந்தாதியை மீள் பதிப்புச் செய்ததோடு அப்பணியில் அடியேனையும் பங்குபெற வைத்த பெருங்கருணையாளன். அந்தண சிரேட்டன், ஆழ்ந்த புலமையாளன், உலகிற்கு ஜோதியாய்த் திகழ்ந்த ஜோதி என்றும் சிவஜோதியிற் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடைவதாக.

ஜோதியிற் கலக்கும் காலை கடும்புயலையும், மழையையும் சுன்னாகம் மண் கண்டிருக்க, பயத்தில் மகள் ஐயோ என்று அலற மகளே சிவனே சிவனே என்று கூறு என்று கடைசி நேரத்திலும் இச் சமூகத்திற்கு சிவ சிந்தனையை விட்டுச் சென்றது இங்கு நோக்கற்பாலதாகும்

க.கு.க.சிவபாலன் களபூமி, காரைநகர்.


## தேவை

தாஜ், சமுத்ரா, சுவிஸ், கலதாரி, சினமன், கிராண்ட், அமாயா, ஜோபா, கோல்பேஸ், ஹோட்டல்களுக்குக் குக், ரூம் போய், ஸ்டுவர்ட், பூச்சர், கிச்சன் ஹெல்ப்பர், பெல்போய், லேபர்ஸ் உயர்ந்த சம்பளத்துடன் (உள்நாட்டு, வெளிநாட்டு பயணங்கள்) இப்போதே.

தொடர்பு கொள்ளுங்கள்: 071 200 2057

## வீடு வாடகைக்கு

சங்குவேலி (மானிப்பாய்) சிவஞானப் பிள்ளையார் கோவிலுக்கு வடக்கே உள்ள கலைமகள் கல்வி நிறுவனத்துக்கு எதிராக உள்ள பேரம்பலம் அவென்யூவில் 2 அறைகள் Hall, Kitchen உடன் கூடிய Annexe வாடகைக்கு உண்டு. ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் விரும்பப்படுவர்.

தொடர்பு:- 077 911 2840


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

உழவு இயந்திரத்திற்குரிய அழைப்பின் பெயரிலான (On-Call Basis) சாரதி தேவை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அறிவியல்நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாயபீடத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரங்களைப் (இரண்டு மற்றும் நான்கு சில்லு) பல்கலைக்கழகம் கோருகின்ற நாட்களில் செலுத்துவதற்கு அழைப்பின் பெயரில் (On-Call Basis) சாரதி தேவை. சாரதியின் வதிவிடம் கிளிநொச்சி மாவட்டமாக இருப்பது விரும்பத்தக்கது.

***தகைமைகள்:***

1. தரம் 08 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 35 வயதிற்கு உட்பட்டவராகவும் உழவு இயந்திரம் செலுத்துவதில் 03 வருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகனங்களைச் செலுத்துவதற்குரிய சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருத்தல் வேண்டும்.
4. உழவு இயந்திரங்களை சுழலகலப்பை மற்றும் பெட்டி என்பவற்றின் இணைப்புடன் செலுத்துவதற்குரிய தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. பூரண உடல் ஆரோக்கியத்தினை மருத்துவப் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை 06.05.2015 நண்பகல் 12.00 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ நிர்வாகக்கிளை இடமிருந்து அல்லது பிரதிப்பதிவாளர்/ அறிவியல்நகர், கிளிநொச்சி இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " உழவு இயந்திரத்திற்கான அழைப்பின் பெயரிலான (On-Call Basis) சாரதிக்கான விண்ணப்பம்" என அடையாளமிட்டு 13.05.2015 பி.ப. 2 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் பதிவாளர், த.பெ. எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்

## 19 ஆவது திருத்தச் சட்டத்தால் ஊடகங்களுக்கு அச்சுறுத்தல்

19ஆம் திருத்தச் சட்டம் சுயாதீன ஊடகங்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளதாக சிரேஷ்ட சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார்.

சுயாதீனமாக நேர்மையாக கருத்துக்களை வெளியிடும் தனியார் ஊடகங்களுக்கு 19 ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக அழுத்தங்கள் பிரயோகிக்கப்படக் கூடும்.

அரச நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்படக்கூடிய அடிப்படை உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை தனிப்பட்ட நபர்களுக்கு எதிராக சுமத்தக்கூடிய வகையில் சட்டத் திருத்தம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இது மிகவும் ஆபத்தானது. தேர்தல் காலத்தில் அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் அதிகாரிக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப் படவுள்ளது.

நேர்மையாக செயற்படும் தனியார் ஊடகங்களின் ஊடகவியலாளர்களே இந்த புதிய முறைமையினால் பாதிக்கப்படுவர்.

எனவே இந்த புதிய உத்தேச சட்டம் ஊடக சுதந்திரத்திற்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடுமென சட்டத்தரணி கொமின் தயாசிறி தெரிவித்துள்ளார். (இ-5)

## தாய் கவலை

ஜனாதிபதி எனது மகளுக்கு பொது மன்னிப்பு வழங்கியும் இதுவரை எனது மகள் உதயஸ்ரீ விடுதலை செய்யப்படாதது பெரும் கவலையளிக்கின்றது எனசிகிரியா ஓவியத்தில் தனது பெயரை எழுதிய குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் மட்டக்களப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி உதயஸ்ரீயின் தாய் தெரிவித்தார்.

சிகிரியா ஓவியத்தில் தனது பெயரை எழுதிய குற்றத்திற்காக அநுராதபுரம் சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் மட்டக்களப்பு சித்தாண்டியைச் சேர்நத சின்னத்தம்பி உதயஸ்ரீயை அவரது தாய் எஸ். தவமணி கடந்த வியாழக்கிழமை சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார். ஜனாதிபதி எனது மகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கியதாக கூறியும் இதுவரை எனது மகள் உதயஸ்ரீ விடுதலை பற்றி எதுவும் அறிவிக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். (இ-5)


## காணி விற்பனை

மருதனார்மடப்பகுதியில் 4 பரப்புக்காணிவிற்பனைக்குள்ளது.

(088) தொடர்புகளுக்கு:077 328 8795

## மணப்பெண் அலங்காரம்

சாவகச்சேரி நகரில்

திருமண விழா பூப்புனித நீராட்டு விழா போன்ற சுப நிகழ்வுகளுக்கான மணப்பெண் அலங்காரம் மற்றும் அனைத்துவிதமான கேக் வகைகளும் மிகச்சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு 0775429630

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 71 செவ் 8 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/634 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 62 செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ ஆசிரியர்<br>தொ.இ: G/1079 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/635 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 33<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1081 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 13<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: B.COM/ வங்கி முகாமையாளர்<br>தொ.இ: B/636 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 52 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: HNDA<br>தொ.இ: G/1090 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 41<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA, MSC/ அரச தொழில்<br>தொ.இ: B/639 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 14 செவ் 12 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/1095 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சற்காரன் கவிதை நூல் வெளியீட்டுவிழா இன்று யாழில்

யாழ்.இலக்கிய ஓவியம் நடத்தும் நெடுந்தீவு நேதாமோகனின் துணிச் சற்காரன் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் கலை இலக்கிய சஞ்சிகையான ஜீவநதியின் பிரதம ஆசிரியர் க.பரணீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களா வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.என். விந்தன் கனகரத்தினம், நெடுந்தீவு புலவர் ஏ.டபிள்யூ. அரியநாயகம் மற்றும் ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தி யாலய அதிபர் சத்தியவரதன், யாழ். உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா. அருள்நேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில்நூல்வெளியீட்டுரையை யாழ்.இலக்கிய குவியத் தலைவர் வேலணையூர்தாஸ், நூல் வெளியீட்டின் முதற்பிரதியை யாழ்.நிஷானந்தா ஜீவல்லறி ஏ.ஆனந்தன் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

நூல் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.இரகுநாதன் வழங்கவுள்ளார். (இ




# நாடாளுமன்றக் கதிரைகள் மட்டுமே த.தே.கூ. தலைவர்களின் நோக்கம்!

## ஜி.ரி.லிங்கநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிலுள்ள கட்சிகள் தலைவர்கள் நாடாளுமன்ற கதிரையை மாத்திரமே நோக்கமாக கொண்ட அவர்களுடைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்கள் என வடக்கு மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.**

முற்போக்கு தமிழ்த்தேசிய கட்சியின் முதலாவது மாநாடு நேற்று யாழ்.லொயலாஸ் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

பல ஆண்டுகளாக ஜனநாயக ரீதியில் பெரும் தலைமைகள் இருந்தும் இதுவரை காலமும் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு தீர்வும் வரவில்லை. மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவில்லை.

1970 ஆம் ஆண்டு பாராளுமன்ற ஆசனங்களின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாது என்ற காரணத்தால் 1970 ஆம் ஆண்டு ஆயுதப் போராட்டம் உருவாகியது.

அன்று என்ன நோக்கத்துக்காக உருவாகியதோ அதே நோக்கத்துக்காக ஆயுதப் போராட்டம் உருவாகும் சூழல் தற்போது உருவாகி வருகின்றது.

புதிய அரசாங்கத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பகிரங்க ஆதரவு தெரிவித்திருந்தது.

ஆனால் இன்று வரை தமிழ் மக்களுக்கு என்ன செய்தது. தமிழ் மக்களுடைய விடயத்தில் எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் மிகத் தெளிவாக இருக்கிறது. தமிழ் மக்களை இரண்டாம் தர பிரஜைகளாக வைத்திருக்கும் பேரினவாத சிந்தனை அவர்கள் மத்தியில் தற்போதும் இருக்கிறது.

எனவே ஆற்றலும் ஆர்வமும் உள்ள இளைஞர்கள் தமிழினத்தின் பெயரால் ஒன்றிணைய வேண்டும். சிறிய கட்சிகள் என்ற வேறுபாடு இல்லாமல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களுக்காக செயற்படும் அனைத்து கட்சிகளையும் தனக்குள் உள்வாங்க வேண்டும்.

அனைவரும்ஒன்றிணைந்து ஜனநாயக வழியில் குரல் கொடுப்பதன் மூலம் சிங்கள தேசம் எங்களை ஒரு பொருட்டாக மதிக்கும். அப்போது நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியும் என அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விவசாய அமைச்சின் செயலாளர் வி.பி.சரத் தமிழன், விடுதலை கூட்டணியில் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)




## நேபாள ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

நேபாள பத்திரிகை பேரவையின் சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் மற்றும் அங்கத்தவர்கள் அடங்கிய குழுவினர் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர். யாழ்.விஜயம் செய்யும் அவர் கள் யாழ். ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடவுள்ளனர். (இ-3)

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் மாதாந்த ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணியளவில் கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் பொன்னையா இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பொருளாளர் க. அருணகிரியும் செயலாளர் ந.கனகசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## ஞாபகார்த்த மண்டப அடிக்கல் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

2016 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரிக்கென அமையவுள்ள ஞாபகார்த்த மண்டபமானது தந்தை செல்வா அறக் கட்டளை நிதியத்தின் முழுமையான பங்களிப்பின் மூலமாக கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு ஞாப கார்த்த மண்டபமாக அமைய வுள்ளது.

மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவானது நாளை 27 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும் என அதிபர் அறிவித்துள்ளார். (இ




யு.என்.டிபியின் 8 மில்லியன் ரூபா நிதியுதவியுடன் பால்பொருள் உற்பத்திக்கென கரவெட்டி பாற்சாலைக்கு அண்மையில் அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று இடம்பெற்ற போது... (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# ஆசிரிய கலாசாலைப் பரீட்சைகளில் சித்தியடையாதோருக்கான மீள்பரீட்சை

2011 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னரும் நடைபெற்ற ஆசிரிய கலாசாலைப் பரீட்சைகளில் சித்தியடையத் தவறிய ஆசிரியர்களுக்காக மள்பரீட்சை ஒன்றை இவ்வருடத்தில நடத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையூடாக ஏற்கனவே பரீட்சைக்குத் தோற்றி சித்தியெய்தத் தவறியவர்கள் மற்றும் நூன சித்தி பெற்றவர்கள் மீள் பரீட்சைக்காக விண்ணப்பங்களை அனுப்பும் பொருட்டு எதிர்வரும் 30.04.2015 இற்கு முன்னர் கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் வீ.கருணலிங்கம் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் 021 2230323 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## தேர்த்திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 2 ஆம்திகதி முற்பகல் 10.45 மணிக்கு தேர்த்திருவிழா இடம்பெறவுள்ள அதேவேளை மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ

# Computer Application Assistant NVQ Level-3 இற்கான விண்ணப்பம்

வடமராட்சி வலயக்கல்வி அலுவலகத்தின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகினால் நடத்தப்படும் Computer Application Assistant NVQ Level-3 கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் கல்வி பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்திருப்பதுடன் கல்வி பொதுத் தராதர (உயர்தர) கல்வி கற்றிருத்தல் வேண்டும். பாடநெறிகள் வாரநாட்களில் காலை 8மணி தொடக்கம் 2மணி வரை நடைபெறும். 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் சுயவிபரக் கோவையினை வலயக்கல்விப் பணிப்பாளர், (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அலகு), வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி, பருத்தித்துறை என்ற முகவரிக்கு 10.05.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய தாக அனுப்பிவைத்தல் வேண்டும். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ.அ.அட்டை பெறவுள்ளவர்களின் விண்ணப்பங்களை அனுப்புக

### வலயக்கல்விப்பணிப்பாளர்களுக்கு வ.மா.ஆட்பதிவு திணைக்களப் பதில் பிரதி ஆணையாளர் அறிவிப்பு

(மல்லாவி)

**வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் நடப்பாண்டில் நடைபெறவுள்ள க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த) ஆகிய பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு ஆட்பதிவு திணைக்களத்தினால் வழுங்கப்படவுள்ள தேசிய ஆள் அடையாள அட்டைகளுக்கான விண்னப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதாகவும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை உடனடியாக சேகரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணத்தின் கீழ் இயங்கும் 12 வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார். வடக்கு மாகாண ஆட்பதிவு திணைக்களத்தின் பதில் பிரதி ஆணையாளர் திருமதி.ச.மோகனாதன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள ஆட்பதிவு திணைக்களத்தின்வடக்கு மாகாண ஆட்பதிவு திணைக்களத்தினால் வடக்கு மாகாண கல்வித் திணைக்களங்களின் கீழுள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கு தேசிய ஆள் அடையாள அட்டை வழங்கும் விசேட வேலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் நடப்பாண்டில் க.பொ.த.(சா/த), க.பொ.த.(உ/த) ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் விண்ணப்பங்கள் யாவும் தேசிய ஆள் அடையாள அட்டை பதிவு திணைக்களத்தின் வடக்கு மாகாண ஆட்பதிவு திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டு பரீட்சார்த்திகளுக்கு துரிதகதியில் தேசிய ஆள் அடையாள அட்டை விநியோகிப்பதற்கு ஏற்றவகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே வலயக்கல்விப் பணிப்பாளர்கள் வலயக் கல்வித்திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் இருந்து இவ்வாண்டு மேற்படி இரு பரீட்சைகளுக்கும் தோற்றவுள்ள பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களினை உடனடியாக அனுப்பி வைக்க ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-15)

## மஹோற்சவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் தண்ணீருற்று ஊற்றங்கரை சித்தி விநாயகர் தேவஸ்தான மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் தொடர்ந்து 10தினங்கள் நடை பெறும்.

இதில் மே மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை காலை 8மணிக்கு தேர்த் திருவிழாவும் நடைபெறும்.

எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தத்திருவிழா இடம்பெறும். (2)

## கர்ப்பிணித் தாய்மாருக்கு பால்மா பொதிகள்

எதிர்கால சந்ததியை போஷாக்குள்ள சமூகமாக உருவாக்கும் நோக்கில், கர்ப்பிணித் தாய்மாருக்கு பால்மா பொதிகள் வழங் கும் வைபவம் அடம்பன் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில். நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரியின் பிரிவுக்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மாருக்கு முதற்கட்டமாக இப்பொதிகள்வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வை, வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

எதிர்கால சந்ததியை போஷாக்கு நிறைந்த சமூகமாக உருவாக்க வேண்டும் என்பதை இலக்காகக்கொண்டே மேற்படி விழிப்பூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. (2)

# மாணவர்களுக்கான அரை மரதன் ஓட்டப்போட்டி

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 12 கல்வி வலயங்களிலும் உள்ள பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்ட போட்டிகளின் ஓர் அங்கமாகிய அரை மரதன் ஓட்டப் போட்டி எதிர்வரும் மே மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை காலை 6மணிக்கு புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளதாக வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்)பி. செல்வின் எரேனியஸ் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

அரை மரதன் ஓட்டப்போட்டியானது 21 கிலோ மீற்றர் தூரத்தினைக் கொண்ட ஓட்டப்போட்டியாகும். போட்டியில் பங்கேற்கும் மாணவர்கள், முதல் நாளே வருகைதந்து தங்கியிருந்து போட்டியில் பங்கேற்பதற்கான ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய மாணவர்களுக்கு மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் மாணவிகளுக்கு மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்திலும் தங்குவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

போட்டியில் பங்கேற்கும் போட்டியாளர்கள் பின்வரும் விடயங்களைக் கடைப்பிடித்தல் அவசியமாகும்.

போட்டி நடைபெறும் இடத்தில் போட்டியாளர்கள் பொருத்தமான உடையுடன் சமுகமளிக்க வேண்டும். மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்படும் மருத்துவ சான்றிதழ் அட்டைகளை ஒவ்வொரு போட்டியாளர்களும் தனித்தனியாக வைத்திருத்தல் வேண்டும்.

மேலதிக விபரம் தேவைப்படுவோர் தங்களின் வலயக் கல்வித் திணைக்களத்தின் உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தரவுகளை பெற்றுக் கொள்ளமுடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# கடலில் தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தியவர்களுக்கு அபராதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரி கடலில் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்த 5 பேருக்கு தலா 3ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் பூநகரி பொலிஸாருடன் இணைந்து பூநகரி கடலில் நடத்திய சோதனை நடவடிக்கையில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த 5 மீனவர்கள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதுடன், அவர்களின் வலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அவர்களின் வலைகளை எரிக்குமாறு நீதவான் நீரியல் வளத்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். (2)




# பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 7ஆயிரத்து 500 ரூபாய் அபராதம் விதித்ததுடன், அவர்களுடைய சாரதி அனுமதிப்பத்திரங்களை ஒருவருட காலத்துக்கு இடைநிறுத்தி வைத்து கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.ஐ.வாகப்தீன், கடந்த வியாழக்கிழமை தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் மதுபோதையில் முச்சக்கரவண்டி செலுத்திய ஒருவரையும் பூநகரிப் பகுதியில் மதுபோதையில் மோட்டார சைக்கிள் செலுத்திய ஒருவரையும் கைது செய்த பொலிஸார் அவரகளை நீதிமன்றத்தில் ஆஜரப்படுத்தினர்.

கிளிநொச்சியில் கசிப்பு வைத்திருந்தமை மற்றும் அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களில் கைது செய்யப்பட்ட 4 நபர்களுக்கு 3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் தீர்ப்பளித்தார்.

வட்டக்கச்சிப் பகுதியில் 3 போத்தல் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபாவும், இராமநாதபுரம் பகுதியில் 5 போத்தல் கசிப்பு வைத்திருந்த ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபாவும், கிளிநொச்சி நகர்ப் பகுதியில் ஒரு லீற்றர் கசிப்பு வைத்திருந்தவருக்கு 75 ஆயிரம் ரூபாவும், முழங்காவில் பகுதியில் அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்தவருக்கு 30 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது.

கிளிநொச்சியில் மேலதிகமாக கள் வைத்திருந்தமை மற்றும் அனுமதியின்றி கள் விற்பனை செய்தமை தொடர்பாக கைது செய்யப்பட்ட 8 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து கிளிநொச்சி நீதவான் தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மதுவரித்திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில் மேலதிகமாக கள் உடமையில் வைத்திருந்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பாக கைது செய்த 8 பேருக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கைது செய்யப்பட்டவர்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டனர். (2)

# ஐந்து வீதிகளின் மிகுதி புனரமைப்பு வேலைகள் முடிவுறாமல் இடைநிறுத்தம்

## பொதுமக்கள் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் கே என்-35 கிராம அலுவலர் பிரிவின் யு என் ஹபிராட் நிறுவனத்தின் பல மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 5 உள்வீதிகளின் புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட் டன.

சிவநகர் கிராம அபிவிருத்தி சங்கம், கமக்கார அமைப்பு ஆகியவை ஐந்து வீதிகளைப் பகிர்ந்தெடுத்து வேலைகளை ஆரம்பித்து மணல் இட்டனர். மணல் இட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை வீதிகளுக்கான செப் பனிடும் மிகுதி பணிகள் நடைபெற வில்லையென பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

தற்போது பருவகால மழை பெய்து வருவதால் குறித்த வீதிகளில் கால்நடையாகவோ வாகனங்களிலோ செல்ல முடியாது சேறும் சகதியுமாக காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிரவலுக்கு அனுமதியில்லை. சுற்றாடலுக்கு கேடு என்று கூறுவோர் ஆரம்பத்திலேயே இதனை



சிந்திக்காதது ஏன் என பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பில் பொறுப்பான அதிகாரிகள் பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர்கள் ,பிரதேச சபையினர் ஆகியோர் முற்கூட்டியே திட்டமிட்டு இத்தகைய வேலைகளை நடைமுறைப்படுத்தினால் கூடுதலான நிதி வீணடிக்கப்படுவது நிறுத்தப்படுவதுடன் பொது மக்களுக்கு நன்மைகள் அடையக் கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே உரியவர்கள் இவற்றில் கூடிய கவனமெடுத்து வீதிகளின் புனரமைப்பை போக்குவரத்திற்கு ஏற்றவாறு சிறந்த முறையில் செப்பனிட்டுத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-254)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 13 அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து

# ஹலோ ரஸ்ட் நிறுவனத்தில் பணி புரியும் பணியாளர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஹலோ ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகின்ற சுமார் 450 பணியாளர்கள் நேற்றுக்காலை 8 மணியளவில் இந்நிறுவனத்திற்கு முன்பாக பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவர்கள் அனைவரும் 13 அம்சக்கோரிக்கைகளைமுன்வைத்துமேற்படி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது.

கிளிநொச்சி ஹலோ ரஸ்ட் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்திற்கான நிதியொதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமையால் பணியாளர்கள் குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிறுவனத்தில் 750 இற்கும் மேற்பட்டகண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களுக்கான ஒப்பந்த கால முடிவுறும் காரணத்தைக்காட்டியும் மேலதிக நிதியொதுக்கீடு கிடைக்காமையாலும் சுமார் 450 வரையிலான பணியாள்ர்களை வேலையில் இருந்து நிறுத்த வேண்டிய நிலை இந்நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது.

எனினும் இவ்விடயம் தொடர்பில் நேற்றைய தினம் குறித்த நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளருக்கு பணியாளர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நீண்டநேர கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது.

இக்கலந்துரையாடலில் சிறந்த முடிவுகள் கிடைக்கப்பெறாமையால் நாளை திங்கட்கிழமை இதற்கு தீர்வு வழங்கப்படும் என்பதற்கு அமைய பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பணியாளர்கள் கலைந்து சென்றனர்.

பணியாளர்கள் முன் வைத்த கோரிக்கைகள் வருமாறு,

இருக்கின்ற நிதிக்கமைவாக அனைத்து பணியாளர்களும் ஒரே காலத்தில் வேலைவாய்ப்பை வழங்குக, நிறு வனத்தில் வேலை நிறு த்தப்படும் சந்தர்ப்பத்தில்வேறுநிறுவனங்களில் எந்தவித பாகுபாடுமின்றிவேலை வாய்ப்பை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளவும், எமது வாழ்வாதாரத்தை நிலைப்படுத்திக்கொள்ள எமக்கு ஒரு தொகை பணத்தைபெற்றுத்தர வேண் டும், வடக்கு மாகாண சபையினரே எமக்காக உங்களின்குரல்ஒலிக்காதா?, வடக்கு மாகாண ஆளுநர் ஐயா அவர்களே! எம் நிலைக்கு முடிவு தாருங்கள்?, கைத்தொழில் பேட்டைகளில் எம்மையும் இணைத்துக்கொள்ளுங்கள், உயிரோடுபோராடி உழைத்துப் பணி செய்யும் எமக்கு நீங்கள்தரும்பரிசுஇதுதானா?, எம்மை நம்பி காத்திருக்கும் எம் குடும்பம் எங்கு செல்வது, கண்ணிவெடி அகற்றும் எமக்கு ஏன் மனிதாபிமானம் காட்டப் படவில்லை, கடந்த 2ஆம் மாதம் பணி நீக்கப்பட்ட 300 பணியாளர்களுக்கு மீண்டும் வேலை பெற்று த்தருவதாக உறுதி அளித்தும் இன்று வரை அவர்களுக்கு எந்த விதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் மீண்டும் 450 பணி யாளர்கள் வேலை நிறுத்தம் செய் யப்படவுள்ளனர், 2016ஆம் ஆண்டு வரை வேலை செய்வதற்கான பணம் இருப்பதாக இதற்கு முன்னுள்ள அதிகாரி கூறி இருந்த போதும் இது தற்போது பொய்யாகிப் போயுள்ளன என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2-271-277)

# அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

(வவுனியா)

வவுனியா மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலைகளின் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கு மாகா ணத்தில் இயங்கிவரும் அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் சமய அறிவினையும் வாண்மையினையும் விருத்தி செய்யும் நோக்கில் நடப்பாண்டின் செப்டெம்பர் மாத பிற்பகுதியில் பரீட்சை ஒன்றை நடத்தவுள்ளதாக இப்பேரவையின் தலைவர் திருமதி. நா.ஜெயகலாதேவி அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் முழுப் பெயர்,கற்பிக்கும் அறநெறிப் பாடசாலையின் பெயர், முகவரி, தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம், பிரதேச செயலர் பிரிவு ஆகிய விபரங்களை உள்ளடக்கி சுயமாக தயாரித்த விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து பிரதேச செயலாளினால் உறுதிப்படுத்தி மே மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை க. ஆனந்த கணேஸ், செயலாளர், இந்து அறநெறிப் பாடசாலைகளின் பேரவை, இல.37, குடியிருப்பு,வவுனியா எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்க வேண்டும்.

மாவட்ட ரீதியாக பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெறுகின்ற 10பேருக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

இது தொடர்பில் மேலதிக விபரம் தேவைப்படுவோர் 077 0691582 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)


# கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்தும் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப3மணியளவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி தேவ நந்தினி பாபு மற்றும் யாழ் பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இராகசுரபி, காரை பரமேஸ்வரி கணேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கௌரவ விருந்தினர்களாக கல்விக் காருண்யன் திரு. திருமதி ஈ.எஸ்.பி. நாகரத்தினம் தம்பதியினர்,காரைநகர் கிழவன்காடு கலாமன்ற கௌரவ உறுப்பினர் சண்முகம் சிவஞானம் மற்றும் யாழ்ப்பாணம் சிவகணேசன் ரெக்ஸ்ரைல் தொழிலதிபர் கனகசபை அருள்நேசன் ஆகியோரே கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)




- 1802 - நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினான்.
- 1805 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் லிபியாவின் டேர்ன் நகரைக் கைப்பற்றினர்.
- 1865 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோசப் ஜோன்ஸ்டன் தலைமையில் கூட்டமைப்புப் படையினர் வட கரோலினாவின் டேர்ஹம் நகரில் கூட்டணியினரிடம் சரணடைந்தனர்.
- 1865 - அமெரிக்க ஜனதிபதி ஆபிரகாம் லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றனர்.
- 1937 - ஸ்பானிய உள்நாட்டுப் போர்: ஸ்பெயினின் கேர்னிக்கா நகரம் ஜேர்மனியினரின் குண்டுத் தாக்குதலுக்குள்ளானது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் கடைசி வெற்றிகரமான தாக்குதல் போட்சன் என்ற இடத்தில் இடம்பெற்றது.
- 1954 - பிரெஞ்சு இந்தோசீனா, மற்றும் வியட்நாமில்வில் அமைதியைக் கொண்டுவரும் முகமாக ஜெனீவாவில் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாயின.
- 1962 - நாசாவின் ரேஞ்சர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் மோதியது.
- 1964 - தங்கனீக்கா, சன்சிபார் இரண்டு நாடுகளும் இணைக்கப்பட்டு தான்சானியா என ஒரு நாடாகியது.
- 1981 - மட்டக்களப்பில் பட்டித்திடலில் வயலில் வேலை செய்துகொண்டிருந்த 16 தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1986 - உக்ரைனில் செர்னோபில் அணுமின் உலையில் பெரும் விபத்து ஏற்பட்டது. உலகின் மிகப்பெரும் அணுவுலை விபத்து இதுவாகும்.
- 1994 - உச்சி குவார்க் (Top Quark) உபஅணுத் துணிக்கை ஒன்றைத் தாம் அவதானித்ததாக இயற்பியலாளர்கள் அறிவித்தனர்.
- 2005 - 29-ஆண்டுகால இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சிரியா தனது 14,000 இராணுவத்தினரை லெபனானில் இருந்து முற்றாக விலக்கிக் கொண்டது.

**பிறப்புகள்**

- 1564 - வில்லியம் சேக்ஷ்பியர், ஆங்கில எழுத்தாளர் (இ. 1616)
- 1762 - சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர் த்திகளில் ஒருவர் (இ. 1827)


**இறப்புகள**

- 1920 - சிறீனிவாச இராமானுசன், கணித மேதை (பி. 1887)
- 1897 - பெ. சுந்தரம்பிள்ளை, மனோன்மணீயம் என்ற நாடக நூலைப் படைத்த தமிழறிஞர் (பி.1855)
- 1977 - எஸ். ஜே. வி. செல்வநாயகம், இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி. 1898)

**சிறப்பு நாள்**

அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு தினம்

**எஸ்.ஜே.வி.செல்வநாயகம்**



"தந்தை செல்வா" என்று வடக்கில் மட்டுமல்ல கிழக்கு மாகாண மக்களாலும் அன்பாகவும் மரியாதை உணர்வுடனும் அழைக்கப்படுபவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அல்லது எஸ். ஜே. வி. செல்வநாயகம். இவர் மார்ச் 31, 1898 மலேசியாவில் பிறந்தார்.

தந்தை செல்வா எனப் பல இலங்கைத் தமிழர்களால் குறிப்பிடப்படுபவர். அவர் இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியமான தலைவராவார். ஒரு குடிசார் வழக்கறிஞரான இவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் தலைமையின்கீழ் இருந்த அகில இலங் கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மூலம் அரசியலில் நுழைந்தார்.

மெல்லிய உருவமும், அமைதியான தோற்றமும், வயது முதிர்ந்த காலத்தில் அவர் முன்னெடுத்த தீவிர அரசியல் போராட்டமும் அவரை தமிழ் மக்களின் தந்தையாக எல்லோரும் மனதார விழிக்க காரணமாயிற்று.

இலங்கை விடுதலை பெற்ற பின்னர் அமைந்த முதல் அரசாங்கத்தில் சேர்வது மற்றும் இலங்கை இந்தியர் பிரஜாவுரிமைச் சட்டம் முதலியன பற்றி எழுந்த கருத்து வேறுபாடுகளைத் தொடர்ந்து, வேறு சில தலைவர்களுடன் சேர்ந்து கட்சியை விட்டு விலகிய செல்வநாயகம் தமிழரசுக் கட்சியை உருவாக்கினார்.


1957 இல் நெற்காணிச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது தந்தை செல்வா என அழைக்கப்பட்ட இந்த மனிதர் எப்படி நடந்துகொண்டார்? சுருக்கமாகச் சொன்னால் இந்தச் சட்டமானது நிலமற்ற ஏழை மக்களின் காணிப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வினைத் தேடித்தரும் நன்நோக்கத்தினை மட்டுமே கொண்டிருந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக கூட்டாட்சி அரசியல் முறையை வற்புறுத்தி வந்தார். 50 களின் இறுதிப் பகுதியிலும், 60, 70 களிலும், தனது கட்சியை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் சென்றவர் இவர்.

சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற முழுப் பெயர் கொண்ட கிறிஸ்தவரான செல்வநாயகம், 90% க்கு மேல் இந்துக்களைக் கொண்ட காங்கேசன்துறை நாடாளுமன்றத் தொகுதியில் நீண்ட காலம் தொடர்ச்சியாக வெற்றிபெற்றுவந்தது அவரது தலைமைத்துவத்தின் வெற்றிக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவிற்கு அடுத்த ஆப்பு தயார்



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக் காலத்தில் இழைத்த தவறுகளுக்கு எதிராக வழக்கு தொடர முடியும் என வெளிவிவகார பிரதியமைச்சர் அஜித பீ.பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க, ஜனாதிபதியாக பதவி வகித்த போது உயர் நீதிமன்றத்தில் தமது நிலைப்பாட்டை தெரிவித்திருந்ததாக பிரதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தமிழ்,முஸ்லிம் மக்களைப் பிரதிபலிக்காத சிங்கக் கொடிகளை ஏந்தியவாறு கொழும்பில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் எனவும் பிரதியமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)

# 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 குறித்து முடிவெடுக்கவில்லை

## ரி.பி.ஏக்கநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

19 ஆவது அரசியலமைப்பு திருதத்திற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது தொடர்பில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 85 பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளவில்லை.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிற்கு ஆதரவு வழங்கி வரும் குழுவை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ரி.பி. ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அக்கட்சி 19 ஆவது அரசியலமைப்பிற்கு ஆதரவு வழங்குவதாக தீர்மானம் மேற்கொண்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இதனால் 19 ஆவது அரசியலமைப்பிற்கு ஆதரவு வழங்குபவர்கள் அது நிறைவேறும் என நிம்மதி பெருமூச்சுவிட்டு வருகின்றனர்.

இந்நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு தெரிவிக்கும் குழுவினர் இதுவரை எவ்வித தீர்மானங்களும் எட்டப்படவில்லை என தெரிவித்துள்ளனர். (இ-5)

# ஷிரந்தியின் சிரிலிய சவிய வங்கிக்கணக்கு சோதனை

## நீதிமன்றம் உத்தரவு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ தலைமை யில் ஆரம்பிக்கப்பட்ட சிரிலிய சவிய வங்கி கணக்குகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்-வாங்கல்களை சோதனையிடு மாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. நீதிமன்றத்தினால் பொலிஸ் நிதி குற்றத் தடுப்பு பிரிவிற்கு இவ் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

பல்வேறு வங்கிக் கணக்குகளின் ஊடாக குறித்த கணக்கு இலக்கத்திற்கு பணம் வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், காசோலைகளை பயன்படுத்தி பல்வேறு வங்கி கிளைகளில் பணமாக்கியுள்ளதாக வும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குமாறு பொலிஸாரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுளது. (இ-5)

# தேசியக்கொடி விவகாரம் உதய கம்மன்பில கவலை

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு எதிரில் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது, மாற்றியமைக்கப்பட்ட தேசியக் கொடியை தானும் கையில் ஏந்தியிருந்ததாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளர் உதய கம்மன் பில கவலை தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவிற்கு எதிரில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாற்றிய மைக்கப்பட்ட தேசியக் கொடிகளை சிலர் கொண்டு வந்திருந்தனர் எனக் குறிப்பிட்ட அவர், அவற்றில் சிறிய கொடிகள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் ஊடகங்கள் வாயிலாக அழைப்பு விடுக்கப்பட்டு பொது இடம் ஒன்றில் நடக்கும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள் வோர்



பற்றி அதன் ஏற்பாட்டாளர்களுக்கு முழுமையான பொறுப்பை ஏற்க முடியாது எனவும் கம்மன்பில மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், நாட்டின் தேசியக் கொடி தனது தலைமையில் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மாற்றியமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டமை குறித்து தான் கவலையடைவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஈழ அகதிகளைக் குடியேற்ற கம்போடியா உகந்தநாடல்ல

## சீன செய்தித்தாள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இலங்கையர்கள் உட்பட அகதிகள், அவுஸ்திரேலியாவினால் கம்போடியாவில் குடியேற்றப்படவுள்ளமையை சீன செய்தித்தாள் ஒன்று கண்டித்துள்ளது. சீனாவின் தென்னாசிய மோனிங் போஸ்ட் என்ற இந்த செய்தித்தாள் அகதிகளை குடியேற்ற கம்போடியா உரிய இடம் அல்ல என்பதை சுட்டிக்காட்டியுள்ளது.**

1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் இனப்படுகொலைகளை சந்தித்த கம்போடியா, வியட்நாம் போரின் அடுத்த கதவாக கருதப்படுகிறது. அந்த நாட்டில் 30 வருடங்களாக ஒரே பிரதமர் ஆட்சி இடம்பெற்றது.

அத்துடன் அங்கு மருத்துவ, தொழில் வசதிகள் அரிதாகவே உள்ளன.

சுமார் 8 இலட்சம் பேர் தொழிலில்லை என்ற காரணத்துக்காக வேறு நாடுகளுக்கு சென்றுள்ளனர்.

இந்தநிலையில் அவுஸ்திரேலியாவினால் நவுறு தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 700 அகதிகளை ஏற்றுக்கொள்ள கம்போடியா இணங்கியுள்ளது.

இதற்காக கம்போடியாவுக்கு அவுஸ்திரேலியா வருடம் ஒன்றுக்கு 31மில்லியன் டொலர் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

எனினும் அவுஸ்திரேலியாவின் இந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்று சீன செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அவுஸ்திரேலியாவுக்கு வரும் அகதிகளை கட்டுப்படுத்துவதற்காகவே அந்த நாடு, இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக ஆய்வாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## சத்தமில்லாத யுத்தம்

"சரசு உன் வீட்டுக்காரர் எங்கே?"

"அரசியல் வாதியானதற்குப் பின் அவர் எங்கே வீட்டில் தங்கிறார்? எந்த ஊரில் எந்த மேடையில் பேசிக் கொண் டிருக்கிறாரோ?"

"பேசட்டும் பரவாயில்லை. ஆனால் சத்தம் போட்டுப் பேசச் சொல்லாதே"

"ஏன்?"

"சத்தம் போட்டுப் பேசுபவர்களுக்கு குரல்வளை பாதிக்கப் படுவதாக டாக்டர்கள் சொல்கிறார்கள்.

"அப்படியா?"

"ஆமாம் 16 விதமான நோய்கள் குரல்வளையை பாதிக் கிறதாம். முக்கியமாக பாதிப்புக்குள்ளாகிறவர்கள் யார் தெரி யுமா?"

"யார்?"

"ஆசிரியர்கள், பாடகர்கள், அரசியல் வாதிகள்"

"அப்படியானால் இவர்களெல்லாம் பாடம் நடத்தினாலும் பாடினாலும் பேசினாலும் அதிக சத்தம் போடாமல் இருப்பது நல்லது என்கிறாயா"

"ஆமாம் அதனால் தான் எனது வீட்டிக்காரரிடம் கூடச் சொல்லி வைத்திருக்கின்றேன்."

"என்ன சொல்லி வைத்திருக்கின்றாய்?"

"என்னை திட்டுவதென்றால் கூட மெதுவாக திட்டுங்கள் என்று சொல்லி வைத்திருக்கின்றேன்"

"உங்களுக்குள் சண்டை வருமா?"

"என்ன அப்படிக்கேட்டு விட்டாய்? தினமும் சண்டை சச்சரவுதான் இருந்தாலும் பக்கத்து வீட்டுக்குக் கூட கேட்காது."

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"இருந்தாலும் அடுத்த ஜென்மத்திலும் அவரே என் கணவராக வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டிருக்கிறேன்."

"அப்படியா?"

"ஆமாம், போட வேண்டிய சண்டை இன்னும் பாக்கி இருக்கிறது."

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







ஈழத்து மூதறிஞர் காரைநகர் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்களின் இறுதிச் சடங்கு நேற்று பிற்பகல் 3 மணியளவில் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கந்தரோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதைப் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளின்)

# 19ஆவது திருத்தத்தை பயன்படுத்தி ஊடகங்களை அடக்க அரசு முயற்சி!

## ரஜீவ குற்றச்சாட்டு

**19ஆம் திருத்தச் சட்டத்தில் ஊடகங்களை அடக்குமுறைக்கு உட்படுத்த முயற்சிக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.**

அரச, அரை அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் பிரதானிகள், ஊடக வியலாளர்கள் மற்றும் அதிகாரிகளை சட்டத்தின் முன் கொண்டு வரக்கூடிய வகையிலான யோசனைகள் தற்போதைய அரசாங்கம் பரிந்துரை செய்துள்ள 19ஆம திருத்தச் சட்டத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளது:



புதிய சட்டத்திருத்தத்தின் அடிப்படையில், குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் ஊடக நிறுவன பிரதானிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் அதிகாரிகளை சட்டத்தின் முன் நிறுத்த முடியும்.

உச்ச நீதிமன்றிடம் சட்ட விளக்கம் கோரிய 19ஆம் திருத்தச் சட்டத்திற்கு முற்றிலும் புறம்பான விடயங்கள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 19ஆம் திருத்தச் சட்டத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளது.

அரச அதிகாரிகள் மட்டும் தேர்தல் ஆணையாளர் மற்றும் அரசாங்கத்திற்கு கட்டுப் பட்டு நடக்க வேண்டுமென முதலாம் திருத்தத்தில் குறிப் பிடப்பட்டிருந்தது.

எனினும் பின்னர் செய்யப்பட்ட திருத்தங்களில் அரச, அரை அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங் களின் பிரதானிகள், ஊடகவி யலாளர்கள் மற்றும் அதிகா ரிகள் போன் றவர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட் டுள்ளது.

இந்த சட்டத்திருத்தத்தின் அடிப்படையில் குறித்த நபர்களுக்கு எவ்வாறு சட்டம் அமுல படுத்தப்படும், யார் அதனை தீர்மானிப்பார்கள் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இவ்வாறான நிலைமைகள் பாரிய பாதக விளைவு களை ஏற்படுத்தக் கூடும்.

19ஆம் திருத்தச் சட்டத் திற்கு சில யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கான பதிலின் அடிப்படையிலேயே 19ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவளிப்பதா இல்லையா என்பதனை தீர்மானிக்க முடியும் என ரஜீவ விஜேசிங்க கொழும்பு ஊடக மொன்றுக்கு தெரிவித்துள் ளார். (இ-5)

## மகிந்த அரசினது ஊழல் விசாரணைகளை கண்காணிக்கும் பொறுப்பு சந்திரிகாவிடம்

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் சம்பந்தமான விசாரணைகளை கண்காணிக்கும் பொறுப்பு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிடம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இந்த விசாரணைகள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அண்மையில் நடத்திய கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கலந்து கொண்டார்.

ஊழல், மோசடி குற்றச் சாட்டு சுமத்தப்பட்டவர்களுக்கு எதிராக தகுதி, தராதரம் பாராது சட்டத்தை செயற்படுத்த வேண்டும் எனவும் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் சட்டரீதியான விசாரணைகளை தாம் எதிர்க்கவில்லை எனவும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறியுள்ளனர்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அடுத்தப் பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த கலந்துரையாடலில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அமைச்சர்கள் சிலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-5)

## பல சேனா காரணமல்ல

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது அமைப்பினரை மேற்குலக நாடுகளின் சூழ்ச்சியாளர்கள் என கூறுவாராயின் அதனை ஒப்புவிக்கும் சாட்சியங்களை முன்வைக்க வேண்டும் என பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் சிங்கள இணையத்தளத் திற்கு வழங்கிய செவ்வியிலேயே இவ்வாறு தெரிவத்துள்ளார். முன்னாள் ஜனாதிபதி விரும்பினால் தன்னிடம் காணப்படும் ஆவணங் களை இதற்காக பயன்படு த்த முடியும் எனவும் அவர் கூறியுள ளார.

சிறுபான்மை மக்களின் வாக்குகளை பெறவேண் டும் என்ற பேராசையில் மகிந்த ராஜபக்ஷ இவ்வா றான கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் நாடு மற்றும் இனம் மீது பற்றில்லாதவர்களின் செயற்பாடுகளே இதற்கு கார [illegible] மேலும் தெரிவித்தார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 50 | 50-60 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 90 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 60 | 40 | 40 |
| தக்காளி | 80 | 50 | 60 | 40 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40-60 | 40 |
| கோவா | 40 | 40 | 50 | 40 | 30 |
| கரட் | 100 | 100 | 120 | 100-120 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 40 | 40-60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 100 | 100 | 50-100 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 100 | 90 | 80 |
| பாகற்காய் | 60 | 80 | 80 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 60 | 30-60 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | — | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 | 50-60 | 40 |
| லீக்ஸ் | 150 | 140 | 200 | 160 | 200 |
| பீற்றூட் | 40 | — | 60 | 40 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 80 | 60-100 | 80 |
| முருங்கைக்காய் | 500 | 350 | 600 | 400 | 500 |
| போஞ்சி | 140 | 120 | 160 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 40 | 40 | — | — | — |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 180 | 140 | 150 | 150-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30 | 50-60 | 60 | 60 |
| இராசவள்ளி | 120 | — | 100 | 140 | 120 |
| வெங்காயப்பூ | — | — | — | — | — |
| முள்ளங்கி | 50 | — | 80 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 30 | — | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 20 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் எதிர்பார்ப்புக்களை மைத்திரி அரசு சிதைத்துள்ளது



## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**மைத்திரி அரசாங்கம் மக்களின் எதிர் பார்ப்புக்களை சிதைத்துள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

உண்மையில் நாட்டில் பாரிய ளவில் மாற்றங்கள் ஏற்படவில்லை. நிறைவேற்று அதிகாரம் பாரியள வில் குறைக்கப்பட்டுள்ளதாக அரசா ங்கம் காண்பிக்க முயற்சிக்கின்றது. எனினும் அவ்வாறான மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனா திபதி முறைமையை இரத்து செய்ய முடியாமல் இல்லை. அதிகாரங்களை குறைக்க முடி யாமலும் இல்லை.எனினும் சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்படக்கூடிய எந்தவொரு திட்டத்தையும் முன்னெ டுக்கப் போவதில்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.அரசாங்கம் தனக்கு தானே தடையை ஏற்படுத்திக் கொண டுளளது.இவற்றை செய்ய முடியாது எனநீதிமன்றம் கூறவில்லை, செய்வ தற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்த ப்பட வேண்டுமென்றே கூறியு ள்ளது.

இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவிற்கு நாம் பயப்பட வில்லை. எனினும் சரியான முறை யில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். வரைமுறையின்றி விசா ரணை நடத்தப்படுகின்றது. ஒருவர் முறைப்பாடு செய்தால் அந்த முறை ப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு விசார ணைக்கு உட்படுத்தப்படு கின்றது. முன்னைய முறைப்பாடுகள் பற்றி வசாரணை செய்யப்படுவதில்லை. கிரமமான முறையில் ஒழுங்கு விதி க்கு அமைய ஒவ்வொன்றாகவே விசா ரணை செய்யப்பட வேண்டுமென ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்து ள்ளார். (இ-5)

## நடிகைகளுக்கு எதிரான பிரசாரம் தொடர்பில் விசாரணை நடத்த அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

நடிகைகளுக்கு சேறு பூசும் வகையிலான பிரசாரம் குறித்து விசாரணை நடத்துமாறு ஆளும் கட்சியின் இரண்டு அமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர்களான ரவி கருணா நாயக்க மற்றும் நந்திமித்ர ஏக்கநா யக்க ஆகியோர் இவ்வாறு கோரி க்கை விடுத்துள்ளனர்.

இளம் நடிகைகள் போதைப் பொருள் வர்த்தகர் வெலே சுதா வுடன் தொடர்புகளைப் பேணிய தாக இணையத்தின் ஊடாக பிரசா ரம் செய்யப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் பொலிஸ் திணை க்களமும் தகவல்களை வெளியி ட்டிருந்தது.

இந்தச் சம்பவம் குறித்து விசா ரணை நடத்துமாறு அமைச் சர்கள் பொலிஸ் மா அதிபரிடம் கோரி க்கை விடுத்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புபடாத அப்பாவி நடிகைகள் மீது இவ்வாறு சேறு பூசுவது பாரிய அவதூறாகும் என அமைச்சர் ரவி கருணாநாய க்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்துவதன் மூலம் இவ் வாறான சேறு பூசல்களை தடுத்து நிறுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, போலிப் பிரசார ங்கள் குறித்து விசாரணை நடத்து மாறு கலைஞர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

## மாற்றியமைக்கப்பட்ட தேசியக் கொடிகள் அரசாங்கத்தின் சூழ்ச்சியாக இருக்கலாம்

### மகிந்த சந்தேகம்

அரசாங்கத்திற்கு எதிராக அண் மையில் நடைபெற்ற இரண்டு ஆர்ப் பாட்டங்களின் போது மாற்றிய மைக் கப்பட்ட தேசிய கொடிகள் பகிர்ந்த ளிக்கப்பட்டமை சூழ்ச்சியாக இருக் கக் கூடும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணை க்குழுவிற்கு அழைத்த மைக்கு எதிராக நாடாளுமன்றத் திற்கு எதிரில் ஒரு ஆர்ப்பாட்டமும், கோத தபாய ராஜபகஷ அந்த ஆணை கதுழுவிற்கு அழைக்கப்பட்ட மையை கண்டித்து மற்றுமொரு ஆர்ப்பாட டமும் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டங்களில் கல ந்து கொண்டவர்கள் கைகளில் ஏந் தியிருந்த, தேசிய கொடிகள் மாற்றம் செய்யப்பட்டிருப்பதை காணக் கூடிய தாக இருந்தது.

இந்நிலையில் காலி கச்சவ த்தை பிரதேசத்தில் உள்ள விஹாரை ஒன்றில் நேற்று முன்தினம் நடை பெற்ற நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிமகந்த கருத்து வெளியிட் டார்.

இலஞ்சம், ஊழல் மற்றும் மோசடி விசாரணை ஆணைக்குழுவில் ஆஜராகுவதில்தனக்கு எந்த பிரச்சினை யும் இல்லை எனவும் தெரிவி த்துள்ளார். (இ-5)

## விளையாட்டுக்குள் அரசியல் இருக்கக் கூடாது - ரணில்



விளையாட்டுக்குள் ஊழல் மற் றும் அரசியல் இருக்கக் கூடாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.தேசிய மற்றும் சர்வ தேச ரீதியில் விளையாட்டில் நல்லாட் சியை ஏற்படுத்த நடவடிக்கை எடு க் கப்பட்டுள்ளதாக அவர் தெரிவி த்தார்.

சுற்றுலா மற்றும் விளையாட்டு அமைச்சில் இடம்பெற்றதாக கூறப் படும் மோசடிகள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின அறிக்கையை சமர்ப்பிப் பது தொடர்பில், நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்ட போதே ரணில் விக்கிரம சிங்க இதனைத் தெரிவித்தார்.

டீ.திஸாநாயக்க தலைவராக உள்ள இந்தக் குழுவில் என.பத்ம நாதன் மற்றும் ரெஸ்லி குஷேன் ஆகியோர் அடங்குகின்றனர். குறித்த குழுவால் அமைச்சில் இடம்பெற்ற 18 மோசடிகள் குறித்த தகவல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.(இ)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி சிவசுந்தரலிங்கம் அன்னபூரணம்



வத்தனை, தம்பச்சி, புலோலி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட சிவசுந்தர லிங்கம் அன்ன பூரணம் கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுப்பர் மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி



திருநெல்வேலியைப் பிறப்பிட மாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமா கவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி கடந்த 22 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### அப்பாத்துரை சண்முகநாதன்



(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வங்கி முகாமையாளர்-இலங்கை வங்கி)

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியையும் கோப்பாய் மத்தியையும் வசிப்பிடமாகக் கொண்ட அப்பாத்துரை சண்முகநாதன் கடந்த 23 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட் கிழமை மு.ப 10மணியளவில் கோப்பாய் வதிவிடத் தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சுழிபுரம் திருவடிநிலை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி வேலாயுதபிள்ளை சரஸ்வதி



(ஓய்வுபெற்ற கர்நாடக சங்கீத பரிசோதகர்-இலங்கை)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து Lincolnshire ஐ வதிவிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சரஸ்வதி கடந்த 22ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பி.ப1.30 மணி தொடக்கம் பி.ப.3.30 மணிவரை Hendon Cemetery & Crematorium,Holders Hill Road, London NW7 1NB, North Chapel, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### அம்பலவாணர் கனகசபை



(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர்)

காரைநகர் மணற்பிட்டியைப் பிறப்பிடமாகவும் காரைநகர் நாவ ற்கண்டி, பிறவுண் வீதி ஆகிய இடங்களை வதிவிட மாகவும் கொண்ட அம்பலவாணர் கனகசபை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற் றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

### பத்மநாதன் செல்வராஜா



வவுனியா கோவிற்குளத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Saarbrucken ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் செல்வராஜா கடந்த 16ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை பி.ப2மணி தொடக்கம் 3மணி வரை Hauptfriedh of Dr.-Vogeler-StraBe 21,66117 Saarbrucken , Germany என்னும் முகவரியில்தகனம் செய்யப்படும்.

### திருமதி ஈஸ்வரன் செல்வறஞ்ஜினி



அளவெட்டியைப் பிறப்பிடமாக வும் சுவிஸ் Geneva வை வதிவிடமா கவும் பிரான்ஸ் Douvaine ஐ வசிப்பி டமாகவும் கொண்ட ஈஸ்வரன் செல்வறஞ்ஜினி கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12மணிதொடக்கம் பி.ப 3மணி வரை Pompes Funebres Chablaisiennes,2 Rue Charles Buet, 74200 Thonon-les-Bains,France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### ராமலிங்கம் வேலுப்பிள்ளை



மாதகலைப் பிறப்பிடமாகவும் ஆபிரிக்கா Mozambique, லண் டன் ஆகிய இடங்களை வசிப்பிடமா கவும் கொண்ட ராமலிங்கம் வேலுப்பிள்ளை கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப 11.45 மணியளவில் City of London Cemetery & Crematorium,Aldersbrook Road, London E12 5DQ,United Kingdom என்னும் முகவரியில் நடை பெறும்.

### திருமதி கிருபானந்தவாரி மஞ்சுளா



புங்குடுதீவு மடத்துவெளி 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கந்தர்மடம் அம்மன் வீதி, கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கிருபானந் தவாரி மஞ்சுளா கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 8மணிதொடக்கம் மு.ப 10 மணிவரை Ogden Funeral Home, 4164 Sheppard Av E, Scarborough,ON M1S T3, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்குமதி வரிகள் திடீரென அதிகரிப்பு



ஒரு கிலோகிராம் உருளைக் கிழங்குக்கான இறக்குமதி வரி 15 ரூபாவாலும் ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 20 ரூபாவாலும் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளதாக நிதிய மைச்சு அறிவித்துள்ளது. இதன்படி, 40 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் உருளைக்கிழங்குக்கான இறக்குமதி வரி 55 ரூபாவாகவும் 10 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்துக்கான இறக்குமதி வரி 30 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-5)


# மனிதவுரிமை செயற்பாட்டாளர் பாகிஸ்தானில் சுட்டுக்கொலை!

பாகிஸ்தானில மனிதவுரிமை செயற்பாட்டாளரான சபீன் மெஹ்மூத் கராச்சி நகரில் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வாகனத்தில் வந்த ஆயுததாரிகள் வாகனத்தைச் செலுத்தியபடியே அவரைச் சுட்டுக் கொன்றனர்.

ஷபீன் மெஹ்மூத் தன் தாயுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, சுடப்பட்டார். இந்தத் தாக்குதலில் அவர் தாயாரும் காயமடைந்தார். இதற்கு முன்பாக பல முறை அவருக்கு கொலை மிரட்டல்கள் வந்திருக்கின்றன. ஷபீன் மெஹ் மூத் டி2 எப் என்று அறியப்பட்ட தி செகண்ட் ப்ளோர் என்ற அறக்கட்டளையின் இயக்குநராக செயறபட்டு வந்தார்.

இந்த அமைப்பு, மனிதவுரிமை தொடர்பாக தொடர்ந்து கருத்தரங்குகளை நடத்திவந்தது. இதன்மூலம்ஒரு உணவகமும் புத்தகக் கடையும் நடத்தப்பட்டு வந்தன. இங்கே கராச்சியின் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள் சந்திப்பது வழக்கமாக இருந் தது.

பலுசிஸ்தானில் நடக்கும் சித்திர வதைகள் பற்றிய கருத்தரங்கு டி2எப்பில் நடைபெற்றது. லாகூரில் ஒரு பல்கலைக்கழகத்தில் இந்தக் கருத்தரங்கிற்கு, அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து, இங்கே நடைபெற்றது. ஈரானை ஒட்டியுள்ள பலுசிஸ்தான் பகுதியில், தலிபான் போராளிகள், பலுச்சிஸ்தான் பிரிவினைவாதிகள் உள்ளிட்டவர்கள் சண் டையிட்டு வருகின்றனர். இந்தக் கருத்தரங்குகளிலிருந்து புறப்பட்டு சில நிமிடங்களுக்குப் பிறகு, சபீன் மெஹ்மூதும் அவரது தாயாரும் சுடப்பட்டனர்.



சபீன் மெஹ்மூத் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லும் வழியில் மரணமடைந்தார் என பாகிஸ்தானின் டான் நாளிதழ் தெரிவித்துள்ளது. அவர் ஐந்து முறை சுடப்பட்டுள்ளார். அவருடைய தாயார் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார். இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. இதற்கு முன்பாக, பாகிஸ்தானின் தலிபான் சபீனை பலமுறை கொலை மிரட்டல் விடுத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# நேபாளத்தை உலுக்கிய பயங்கர நிலநடுக்கம்.

## 150 பேர் பலியானதாக தகவல்

**(காத்மண்டு)**

**நேபாளத்தில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டிடங்கள் இடிந்து விழுந்து மிகப்பெரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. இடிபாடுகளில் சிக்கி 150க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாகவும் பலர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.**



நேபாளத்தில் நேற்று காலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. முதலில் இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.4 என்ற அளவில் பதிவானதாக தகவல் வெளியானது.

அதன்பின்னர், மக்கள் தொகை அதிகம் உள்ள தலை நகர் காத்மண்டுவை உலுக்கிய நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.9 ஆக பதிவாகியிருந்தது. வீடு கள் மற்றும் கட்டிடங்கள் குலுங்கியதால் பொது மக்கள் அலறியடித்து வெளியேறினர்.

எங்கு திரும்பினாலும் அம்புலனஸ் வாகனங்கள் சைரன் ஒலி எழுப்பியபடி சென்றன. அரசு ஹெலிகொப்டர்கள் வானில் வட்டமடித்தபடி இருந்தன.

காதமண்டுவில் உள்ள பழமை வாய்ந்த கோவில்கள் உள்ளிட்ட ஏராளமான கட்டிடங்கள் இடிந்து விழுந்தன. இதில், காயமடைந்த பலர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

பழைய காத்மண்டு நகரில் உள்ள ஒரு பகுதியில் குறுகிய சந்தியில் உள்ள வீடுகள் ஒன்றின் மேல் ஒன்று விழுந்து நொறுங்கின. உயிரிழப்பு தொடர்பான தகவல் வெளியாகவில்லை.

மேலும் பல நில அதிர்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொதுமக்கள் வடுகளுக்கு செல்லாமல் வெட்டவெளியில் இருக்கும்படி தேசிய வானொலி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நேபாளத்தில் ஏற்பட்ட கடும் நிலநடுக்கத்தால் இந்தியாவிலும் நேற்று லேசான நிலஅதிர்வு உணரப்பட்டது. சுமார் 11.42 மணியளவில் ஏற்பட்ட நில நடுக்கம் 30 விநாடிகள் நீடித்தது.

தலைநகர் டில்லி, உத்தர பிரதேசம் சிக்கிம் லக்னோ பீகார் உள்ளிட்ட வட மாநிலங்களில் நில அதிர்வு உணரப்பட்டது.

டில்லியில் இதன் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.0என்ற அளவில் பதிவானது நிலநடுக்கத்தால் டில்லியில் மெட்ரோ ரயில் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் நிலநடுக்கத்தின் பின் னரும் அதிர்வுகள் உணரப்பட்டுள்ளது. (இ-5)

## கோமா நிலையில் குழந்தை பெற்ற ரஷ்ய பெண் 4 மாதங்களுக்கு பின் மீண்டும் கண்விழித்தார்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் மொஸ்கோ ரயில் நிலையத்தில் கடந்த டிசம்பர் மாதம் நிலைதடுமாறி கீழே விழுந்து உருண்ட மரியா குட்ரினா (31) என்ற பெண சுயநினைவை இழந்து கோமா நிலைக்கு சென்றார்.

அப்போது கர்ப்பிணியாக இருந்த அவருக்கு கோமா நிலையிலேயே, முழுவளர்ச்சிக்கு 7 வாரம் முன்னதாகவே குறைப்பிரசவமாக அழகிய பெண் குழந்தை பிறந்தது. கடந்த 4 மாதங்களாக சுயநினைவிழந்து கிடக்கும் மரியா குட்ரினா இனி எழுந்து நடமாடமாட்டார் என கருதிய வைத்தியர்களுக்கு இன்ப அதிர்ச்சி தரும் வகையில் அவர் தற்போது கண்விழித்துள்ளார்.



எனினும், தான் யார்? தன்னை சுற்றியிருப்பவர்கள் யார், யார்? என்று புரிந்து கொள்ள முடியாத நிலையில் படுக்கையில் இருக்கும் மரியாவிடம் தங்களது திருமண போட்டோவை தினந்தோறும் காட்டி வரும் கணவர் விளாடிமிர், என்றாவது ஒருநாள் அவளுக்கு [illegible] சரியாகிவிடும் என்று நம்பிக்கையுடன் தெரிவித்தார். (இ-5)

## 2 தமிழருக்கு சிறப்பு விருது


சிங்கப்பூரின் கிழக்கு ஜூராங் பகுதியில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் 2ஆவது மாடியில் உள்ள ஒரு வீட்டில் உள்ள 3 வயது குழந்தை சுவர் ஓரமாக நின்று தனது ஐபேடில் விளையாடிக் கொண் டிருந்தது. அப்போது, சுவர் ஓரம் தடுப்புக் கம்பியின் வெளிப்புறமாக ஐபேடு விழுந்து விட்டது. அதனை எடுக்க கம்பிக்குள் நுழைந்த குழந்தை உள்ளே சிக்கிக்கொண்டது.

அப்போது, அருகாமையில் வீதி பழுது பார்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த தமிழக தொழிலாளர்கள் சண்முகநாதன் (35), முத்துக்குமார் (24) ஆகியோர் இந்த காட்சியை கண்டனர். உடனடியாக விரைந்து சென்ற அவர்கள் 2ஆவது மாடிக்கு ஏறிச் சென்று குழந்தையை பத்திரமாக மீட்டனர். இந்த அவசர உதவியை செய்த சண்முகநாதன், முத்துக்குமார் இருவருக்கும் சிங்கப்பூர் அரசின் உள்நாட்டு பாது [illegible] வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ-5)

## 110 அதிநவீன போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்க சீனா முடிபு

(பீஜிங்)

பாகிஸ்தான் இராணுவத்துக்கு சக்தி வாய்ந்த, அதிநவீன JF-17 "தண்டர் பைட்டர்" ரகத்தைச் சேர்ந்த 110 ஜெட விமானங்களை சீனா விநியோகம் செய்யவுள்ளது. இவற்றில் 50 விமானங்கள் இன்னும் மூன்றாண்டுகளுக்குள் பாகிஸ்தானிடம் ஒப்படைக்கப்படும்.



இதற்கான ஒப்பந்தம் சமீபத்தில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் பாகிஸ்தான் பயணத்தின்போது இறுதி செய்யப்பட்டது. JF-17 "தண்டர் பைட்டர்" விமானங் களை தயாரிக்கும் அதிநவீன தொழில் நுட்பத்தை சீன பாதுகாப்பு துறை ஏற்கனவே பாகிஸ்தானிடம் ஒப்படைத்துள்ளதால் இவற்றில் பெரும்பாலான விமானங்கள் பாகிஸ்தானிலேயே தயாரிக்கப்படும் என தெரிகின்றது.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் பாகிஸ்தான் பயணத்தின்போது பாகிஸ்தான் நாட்டு வான் எல்லைக்குள் அவரது விமானம் நுழைந்ததும், JF-17 "தண்டர்பைட்டர்" ரகத்தை சேர்ந்த 8 விமானங்கள் ஜி ஜின்பிங்கின் விமானத்துக்கு பாதுகாப்பாக இருபுறமும் அணிவகுத்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேதைகள் மரிப்பதில்லை. உங்களோடு வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத் தமிழ் மண்ணின் வசிட்ட மாமுனிவரை இழந்தோம்

சிவபூமி என்று போற்றப்படும் ஈழத் தமிழ் மண்ணில் வசிட்ட மாமுனிவராக நடமாடிய காரைநகர் தந்த மூதறிஞர் கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள் தேகவியோகம் அடைந்தமை சைவத் தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும்.

நூறு ஆண்டுகள் எங்கள் மண்ணில் வாழ்ந்த வைத்தீஸ்வரக் குருக்கள், எங்களின் விலை மதிப்பிட முடியாத அரும்பெரும் சொத்து.

காஞ்சிப் பெரியவர் இன்றில்லை என்ற குறையை எங்கள் வைத்தீஸ்வரக் குருக்களே நிவர்த்தி செய்தார் என்று கூறுமளவிற்கு அவரின் அறிவு ஞானமும் மெய்ஞ்ஞானமும் எங்களை ஆற்றுப் படுத்தின.

காரைநகர் ஈழத்து சிதம்பரத்தின் எழுச்சியிலும், வளர்ச்சியிலும் தன்னை அர்ப்பணித்த வைத்தீஸ்வரக் குருக்கள் காரைநகர் மணிவாசகர் சபையை ஸ்தாபிதம் செய்து, திருவாசகம் எனும் தேனின் சுவையை ஆன்மாக்கள் நுகரும் வண்ணம் அரும் பணியாற்றினார்.

ஈழத்துச் சிதம்பர புராணம் , ஆண்டிக்கேணி ஐயனார் புராணம் ஆகிய தல புராணங்களின் பதிப்பாசிரியராக இருந்ததோடு தமிழுக்குப் பெருமை தரக்கூடிய அரிய பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் அவற்றைப் பாதுகாத்தும் தந்த பெருமை வைத்தீஸ்வரக் குருக்களையே சாரும்.

எங்கள் மண்ணில் வாழ்ந்த அந்தணச் சிரேஷ்டரான வைத்தீஸ்வரக் குருக்கள் சமஸ்கிருதத்திற்கு அப்பால், தமிழ் வேதம் என்று போற்றப்படும் தேவாரத் திருமுறைகளுக்குக் கொடுத்த முன்னுரிமை தமிழ் மீது அவர் கொண்ட பற்றுதலின் வெளிப்பாடாகும்.

தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட திருமுறைகள் எங்கள் ஆத்மஞானத்திற்கு உகந்த நல்மருந்து என்பதை வெளிப்படுத்தியது மட்டுமன்றி தமிழ் வேதத்தை தன் வாழ்நாள் முழுவதிலும் ஓதி மகிழ்ந்து சைவ உலகிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

எங்கள் மண்ணில் நடமாடிய ஞானகுரு தவத்திரு யோகர் சுவாமிகளின் ஆசியை, தரிசனத்தை பெற்ற வைத்தீஸ்வரக் குருக்கள் யோகர் சுவாமிகளை காணத் தவறியவர்களுக்கு இவரே தவயோகர் சுவாமிகளின் சாயலாக எங்கள் மண்ணில் வலம் வந்தார்.

சைவத்தையும் தமிழையும் தன் கண்ணெனப் போற்றிய வைத்தீஸ்வரக் குருக்கள், எளிமையானவர், உயர்ந்த பண்பாளர், அறிவு ஞானத்தை மற்றையவர்களுக்கு வாரிவழங்கிய வள்ளல் என்பவற்றுக்கு அப்பால் எல்லோரையும் மதிக்கின்ற மிக உன்னதமான மனித நேயம் மிக்க மகான்.

எங்கள் மண்ணில் வாழ்ந்து மக்கள் சேவைக்கும் ஆன்மிகப் பணிக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு சிவத்தமிழ்ச் செல்வி என்று பட்டம் சூட்டி அவரை சிவத்தமிழ்ச் செல்வி என அடையாளப்படுத்திய பெருமை வைத்தீஸ்வரக் குருக்களையே சாரும்.

மற்றவர்களையும் பெருமைப்படுத்துவதன் மூலம் மனித இனம் மண்ணில் நல்வண்ணம் வாழ முடியும் என்பதை தன் வாழ்வியல் ஊடாக எமக்கெல்லாம் காட்டிச்சென்ற வைத்தீஸ்வரக் குருக்கள் ஆயிரம் பிறை கண்ட ஆத்ம குருவாக; தத்துவஞானியாக; மூதறிஞராக; எங்கள் மண்ணின் வசிட்டமா முனிவராக வாழ்ந்தார்.

அவரின் மறைவு எம்மண்ணிற்கு பேரிழப்பாயினும் அந்தப் புண்ணிய ஆத்மா என்றும் எங்களை ஆசீர்வதிக்கும் என்பது திண்ணம்.

## எச்.ஐ.வி. விழிப்புணர்வு அவசியம்

யாழ். மாவட்டத்தில் உள்ள வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினர் மத்தியில் எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு மிகவும் அவசியம் என யாழ். போதனா வைத்தியசாலை பாலியல் தொற்றுநோய் தடுப்பு சிகிச்சைப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி தாரணி குருபரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் பாலியல் தொற்று நோய்கள் பரவலடையும் அறிகுறிகள் தென்பட்டு வருவதால் அனைத்து தரப்பினரும் மிக அவதானத்துடன் செயற்பட்டு தம்மை தாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

வைரசால் ஏற்படும் பால் உண்ணி, ஜெனிரல் ஹேர்பிஸ் எனும் தொற்று நோய்கள் குணப்படுத்த முடியாதவை. அவற்றின் ஊடாக அதிகளவில் எச்.ஐ.வி தொற்று இலகுவாக ஏற்படுகின்றது.

பாலியல் நோய் தொற்று ஏற்பட்டிருப்பினும் நோய் அறிகுறிகள் இல்லாமல் இருக்கலாம் ஆனால் நாட்கள் கடந்து அறிகுறிகள் தென்படும். எனவே பரிசோதனைகள் மேற்கொள்வது மிக அவசியம். இந்த நோய் தொற்று பாலியல் தொடர்பால் மட்டும் பரவலடைவதில்லை என்பதால் யாழ். போதனா வைத்தியசாலையில் தினமும் ஆண், பெண் என இருபாலார் 50 பேர் வரையில் பரிசோதனை மேற்கொள்வதற்காக வருகின்றனர்.

முற்று முழுதாக இலவச பரிசோதனை என்ற படியால் சந்தேகப்படுகின்ற நபர்கள் வந்து பரிசோதனை மேற்கொள்ளமுடியும்.

இதுவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் 16 எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாலியல் தொடர்புகளால் இளம் சமுதாயத்தினரிடையே எச.ஐ.வி பரவலடையக் கூடிய சாத்தியம் கூடுதலாகக் காணப்படுவதால் எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வதற்காக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (செ-9)

## தமிழருவி சொற்கணை விவாதப் போட்டி-2015

மொறட்டுவை பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றம் பெருமையுடன் வழங்கும் தமிழருவி சொற்கணை விவாதப்போட்டி இவ்வருடமும் 3 ஆவது முறையாக தேசிய ரீதியில் மிகப் பிரமாண்டமாக நடத்த அவ்வமைப்பினர் திட்டமிட்டுள்ளனர்.

தேசிய மட்டத்திற்கு செல்வதற்கான தகுதிகாண் போட்டிகள் நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் இடம்பெற்று வரும் இந்நிலையில் யாழ்.மாவட்ட மட்ட தெரிவுப் போட்டிகள் இன்று காலை. 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 9 மணிக்கு ஆரிய குளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (இ

## சர்ச்சைக் கொடி சதித் திட்ட முயற்சி

(கொழும்பு)

நாட்டில் தற்போது சதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவுக்கு நேற்று விஜயம் செய்த அவர் சீதாஎலிய கோயில் மற்றும் விகாரை ஆகியவற்றில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு முன் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் தேசிய் கொடியில் சிறுபான்மை இனக்கட்சிகளின் சின்னாங்கள் அகற்றப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த மகிந்த ராஜபக்ஷ, நாட்டில் தற்போது சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றனெ. இதுவும் அத்தகையதொரு நடவடிக்கை யாகவே தான் கருதுவதாக தெரிவித்தார். (செ)

## தடம்பதித்த தமிழ்த்தேசியம் நூல் வெளியீட்டு விழா

பேராசிரியர் சி.க.சிற்றம்பலத்தின் தடம்பதித்த தமிழ்த்தேசியம் நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-5)

## 'நல்ல ஆயனின் குணங்களை நாமும் பின்பற்றுவோம்'

இன்றைய நாளை நல்லாயன் ஞாயிறு என்றும், இறை அழைத்தல் ஞாயிறு என்றும் கத்தோலிக்க திருச்சபை அழைக்கின்றது. தன் மந்தைகளுக்காக உயிரையே கொடுக்கும் நல்லாயன் இயேசு நம் ஆண்டவராகிய இயேசு, தலைமை ஏற்போர், வழி நடத்துவோர், தமது பணிகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும்? அவர்களிடம் இருக்க வேண்டிய குணாதிசயங்கள் எவை என்பதை 'நல்ல மேய்ப்பன்' இயேசு நமக்கு உணர்த்துகின்றார். அன்று மக்கள் இயேசுவை பல பெயர்களில் அழை த்தாலும், இயேசு தமக்குத் தாமே சூட்டிக் கொண்ட பெயர்களில் ஒன்று ஆயன். "நானே நல்ல ஆயன்" என அவர் குறிப்பிடுகிறார். நமக்காக மரித்து, உயிர்த்த இயேசுவின் மகிழ்ச்சியை கொண்டாடும் இந்நாட்களில் நல்லாயனாம் இயேசுவைப் பற்றி தியானிப்பது சாலச்சிறந்ததாகும்.

ஆடுகள் எவை? நல்ல ஆயன் யார்? இங்கு முதலில் ஆடுகள் பற்றியும் அதன் குணநலன்களைப் பற்றியும் சிந்திப்போம். ஆடுகள் ஒன்றை ஒன்று சார்ந்து கூட்டமாக வாழும். அவற்றால் சுயமாக செயற்பட முடியாது. வழி தவறி விடும். ஒன்றை

## பரமபிதா காட்டிய பாதை

ஒன்று எப்போதும் பின் தொடரும். அவை மிகவும் பலவீனமானவை. எளிதல் பிற விலங்குகளுக்கு இரையாகி விடக்கூடியவை.

நல்ல ஆயன்: தலைமை ஏற்று பிறரை வழி நடத்துபவர்களை ஆயன் அல்லது மேய்ப்பன் எனக் கூறலாம். நல்ல ஆயன் எப்படிப்பட்டவன்?, அவனது குணநலன்கள் என்ன? என்பதை பைபிளில் திருப்பாடல் 23 இலும் தெளிவாக காணலாம். நல்ல ஆயன் திருடனைப்போல் வேறுவழியாக வராமல் உரிமையுடையவராய் வாயில் வழியே ஆட்டுப்பட்டிக்குள் நுழைவார். தம் ஆடுகளுக்கு பெயர் சொல்லி அழைக்கிறார். பழக்கமான ஆயனின் குரலை ஆடுகளும் அறியும். ஆடுகளைப் பசும்புல் உள்ள இடங்களைக் கண்டறிந்து அங்கு மேய்ச்சலுக்கு அழைத்து செல்வார். ஆடுகளின் முன்னே சென்று வழி நடத்துவார். அப்போது தான் காட்டு விலங்குகள் வருவதை முன்னறிந்து, அவற்றிலிருந்து ஆடுகளை மீட்க முடியும். தேவையெனில் அவற்றுக்காக ஆயன் தன் உயிரையும் கொடுப்பான். நல்ல ஆயன் தம் மந்தையின் ஒரு சிறு ஆடு காணாமல் போனாலும் அதை கண்டுபிடித்து மீண்டும் மந்தையில் சேர்க்கும் வரை ஓயமாட்டான்.

தனது ஆடுகளுக்காகத் தன் உயிரையும் கொடுப்பதுதான் நல்லாயனின் ஒரு முக்கியமான குணம். எந்த ஒரு சூழலிலும் தன்னைப்பற்றி சிந்திக்காமல், மற்றவர்களையே எண்ணி வாழ்வதைப்போன்ற ஓர் உயர்வான வாழ்வு உலகில் இல்லை. ஆபத்து, துன்பம் என்று வரும்போது தன்னைக்குறித்து ஒருவர் கவலைகொள்வதும், தன்னைக் காத்துக்கொள்ள முயல்வதும் வெகு சாதாரண மனித இயல்பு. அந்த இக்கட்டான சூழல்களிலும் தன்னைப் பற்றிய கவலை இல்லாமல், அடுத்தவரைப்பற்றி கவலைப்படும் மனம், மலைபோல் உயர்ந்த மனம். மனித வரலாற்றில் தங்களையே மறந்து, பிறருக்காக வாழ்ந்த பலரைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறோம்.

1912ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி டைட்டானிக் கப்பல் மூழ்கியபோது வெளிப்பட்ட ஒரு சில தியாகச் செயல்களை மறக்கவே முடியாது. அவற்றில் ஒன்று Thomas Byles, Juozas Montvila, Benedikt Peruschitz என்ற மூன்று குருக்களைப்பற்றியது. கப்பல் மூழ்கிக்கொண்டிருந்தபோது, இம்மூன்று குருக்களும் உயிர்காக்கும் படகுகளில் தப்பித்துச்செல்ல தங்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்புக்களை மறுத்துவிட்டு, மரணத்தை எதிர்கொண்டிருந்த மக்களுக்கு ஒப்புரவு அருட்சாதனம் வழங்கியபடி, அம்மக்களுடன் இணைந்து செபித்தபடி அவர்களும் கடலில் மூழ்கி இறந்தனர் என்று சொல்லப்படுகிறது. இந்த விபத்தில் இவர்கள் பெயர்கள் பெரிதாகப் பேசப்படவில்லை. ஆனால், இவர்களது இறுதி நேர ஆன்மீகப் பணிகளைக் கண்ட பலரும், அவர்கள் தலைமுறையினரும் இவர்களைப் பெருமையுடன், நன்றியுடன் இன்றும் எண்ணி வருகின்றனர்.




ஒருமுறை மாவீரன் அலெக்சாண்டர் தன் படையுடன் மக்ரான் என்ற பாலைநிலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அங்கு கொளுத்தும் வெயிலும், எரிக்கும் மணலும் வீரர்களின் உயிரைக் குடிக்கும் தீயாய் மாறின. அலெக்சாண்டரும் தாகத்தால் துடித்தார். அவர் தாகத்தைத் தணிக்க, இரு தளபதிகள் நீண்டதூரம் நடந்து, தங்கள் கவசத்தில் சிறிது தண்ணீர் கொண்டு வந்தனர். அலெக்சாண்டர் அத்தளபதிகளின் விசுவாசத்தைப் பாராட்டினார். பின்னர், அவர்களிடம், வீரர்களுக்கும் தண்ணீர் கிடைக்க வழி உண்டா? என்று கேட்க,

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

அவர்கள்..இல்லை மன்னா. உங்கள் ஒருவருக்கு மட்டுமே தண்ணீர் கிடைத்தது என்று சொன்னார்கள். அலெக்சாண்டர் நீரைக் கையில் எடுத்தார். வீரர்கள் அவரைக் கூர்ந்து கவனித்தனர். வீரர்களுக்குத் தண்ணீர் இல்லாத போது, தனக்கும் தண்ணீர் தேவையில்லை என்று கவசத்தில் இருந்த நீரை மணலில் ஊற்றினார். துன்பம் என்று வந்தால், தங்களுடன் தலைவனும் சேர்ந்து துன்புறுவார் என்பதை உணர்ந்த வீரர்கள், தங்கள் தலைவனைப்பெருமையுடன் எண்ணி ஆர்ப்பரித்தனர். ஒவ்வொரு பதவிப் பெயர்களில் அவர்கள் அழைக்கப்பட்டாலும் அவர்களது பணி மேய்ப்புப் பணியே. நல்ல மேய்ப்பனைப் பற்றித் தியானிக்கும் போது அவர் எம் மீது கொண்ட அன்பிற்குப் பொருத்தமாக வாழ நாமும் உறுதி எடுப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இருபது-20 போட்டியிலும்" பாகிஸ்தானை வென்றது வங்கப்புலி



பாகிஸ்தானுக்கு எதிராக இருபது- 20 போட்டியில் வங்கதேச அணி 7 விக்கெட்டுகளினால் அபார வெற்றி பெற்றுள்ளது.

வங்கதேசம் சென்றுள்ள பாகிஸ்தான் அணி ஒரே ஒரு இருபது-20 போட்டியில் பங்கேற்றது. மிர்புரில் நேற்றுமுன்தினம் நடந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித்தலைவர் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

பாகிஸ்தான் அணிக்கு முக்தர் அக்மத் (37) நல்ல தொடக்கம் தந்தார். ஷேசாத் (17), அப்ரிடி (12) நிலைக்கவில்லை. முகம்து ஹபீஸ் 26 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 141 ஓட்டங்கள் எடுத்தது. ஹாரிஸ் சோகைல் (30) அவுட்டாகாமல் இருந்தார்.

எளிய இலக்கை துரத்திய வங்கதேச அணிக்கு தமிம் இக்பால் (14), சவுமியா சர்கார் (0) அதிர்ச்சி தந்தனர். முஷ்பிகுர் ரஹிம் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின் சாகிப்-அல்-ஹசன், சபிர் ரஹ்மான் ஜோடி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இருவரும் அரைச்சதம் அடிக்க, வங்கதேச அணி 16.2 ஓவரில் 143 ஓட்டங்கள் எடுத்து, 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சாகிப் (57), சபிர் (51) அவுட்டாகாமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை சபிர் ரஹ்மான் வென்றார்.

ஏற்கனவே 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 0-3 என இழந்த பாகிஸ்தான் அணி, நேற்று இருபது-20 போட்டியிலும் தோல்வியடைந்து ஏமாற்றம் அளித்தது. (க)

## பிறந்தநாளை எளிமையாக கொண்டாடிய சச்சின்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், தனது 42 ஆவது பிறந்தநாளை குடும்பத்தினருடன் எளிமையாக கொண்டாடியுள்ளார்.

கிரிக்கெட்டில் பல சாதனைகளை குவித்து தள்ளிய சச்சின், 2013 ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றார். இருப்பினும் அவர் மீதான ரசிகர்களின் தாக்கம் சற்றும் குறையவில்லை. இந்நிலையில் தற்போது மும்பை இந்தியன்ஸ அணியின் தலைமை ஆலோசகராக செயற்பட்டு வரும் சச்சின், நேற்றுமுன்தினம் தனது 42 ஆவது பிறந்தநாள்ளை கொணடாடினார். அவருக்கு உறவி னர்கள், நண்பர்கள், ரசிகர்கள், பிரபலங்கள என அனைத்து தரப்பினரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

மேலும் சமூக வலைதளங்கள் மூலமாகவும் வாழ்த்துக்கள் வந்து குவிந்தன. தனக்கு வாழ்த்து தெரிவித்த அனைவருக்கும் சச்சின் நன்றி தெரிவித்துள்ளார். (க)

## சாமஸ்ரீ தேசகீர்த்தி விருது வழங்கி கௌரவிப்பு



இலங்கை அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் 25 ஆவது வருட தேசிய விருது வழங்கல்நிகழ்வு அண்மையில் வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

அதில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை சேனைக்குடியிருப்பை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பை வதிவிடமாகவும் கொண்ட பொறியியலாளரும் சோட்டோகான் கராத்தே கலை ஆசானுமாகிய சௌந்தரராஜா முருகேந்திரன் (கறுப்புப்பட்டி 4DanJKMO Japan/) கராத்தே கலை சார்பில் அடைந்த சாதனைகள் மற்றும் அர்ப்பணிப்பின் அடிப்படையில் "சாம ஸ்ரீ தேச கீர்த்தி" எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பான் கராத்தே மருயோசிக்காய் அமைப்பின் (JKMO) சிரேஷ்ட பயிற்றுவிப்பாளரான சென்சி. எஸ்.முருகேந்திரன் சர்வதேச மற்றும் தேசிய தரப்படுத்தலில் கறுப்புப்பட்டி 4Dan இல் தகைமை பெற்றிருப்பதோடு தேசிய Referee மற்றும் Judge தரப்படுத்தலில் விசேட தேர்ச்சி பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க)




சிவகுருநாதன் வெற்றிக்கிண்ணம்

## யாழ். இந்துக்கல்லூரியை வீழ்த்தியது கொழும்பு ஆனந்தாக் கல்லூரி

சிவகுருநாதன் வெற்றிக் கிண்ணத்துக்காக நான்காவது ஆண்டாக நடைபெற்ற பெரும் துடுப்பாட்டப் போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி ஒரு இனிங்ஸ் மற்றும் 82 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந் துக் கல்லூரி மைதானத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையேயான இரண்டு நாள் போட்டியாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. போட்டி யாரும் எதிர்பாரா வண்ணம் ஒரு நாளுடன் முடிவடைந்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆனந்தாக் கல்லூரி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதையடுத்து களமிறங்கிய யாழ். இந்துக் கல்லூரியின் ஆரம்ப வீரர்கள் ஓட்டம் எதுவும் பெறாது ஆட்டமிழந்த நிலையில் 24.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களை மட்டும் பெற்றது. கஜானந் 30, கிரிசாந் 17 ஓட்டங்களைப் பெற்றனர். உதிரிகளாக 12 ஓட்டங்களும் பெறப்பட்டன. ஆனந்தாக் கல்லூரி சாற்பில பந்து வீசிய சுகந்தராகுலா 3 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

கபிஸ்கா அஞ்சுலா, சுமாசன், டிலிப் ஜெயலத் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆனந்தாக் கல்லூரி 34.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 275 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. சுகந்தராகுலா ஆட்டமிழக்காது 8 பௌண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 84 ஓட்டங்களையும், நிஹால பிரான்சிஸ்கோ 8 பௌண்டரிகள் 3 சிக்ஸர்கள் அடங்கலாக 71 ஓட்டங்களையும் குசல்கெட்டகே 7 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 56 ஓட்டங்களையும் பெற்றனர.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய சிவலக்சன் 12 ஓவர்கள் பந்து வீசி 71 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மதுசன் 16.3 ஓவர்கள் பந்து வீசி 106 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். பதிலுக்கு இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 22.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும இழந்து 106 ஓட்டங்களை மட்டும் பெற்றது. பிரணவன் 12 ஓட்டங்களை பெற்றதுடன் உதிரிகளாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன. ஆனந்தாக் கல்லூரி சார்பில் பந்து வீசிய சுமசான் 9 ஓவாகள் பந்து வீசி 36 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும சுகந்தராகுலா 3 ஓவாகள் பந்து வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் டிலிப் ஜெயலத் 2.1 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டத்தைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

ஆனந்தாக் கல்லூரியைச் சேர்ந்த சுகந்தரா குலா போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராக சுமசானும், சிறந்த பந்து வீச்சாளராகவும் சிறந்த துடுப்பாட வீரனாகவும் நிஹால் பிரான்சிஸ்கோவும் சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த கஜனானும் தெரிவு செய்யப்பட்டார்கள். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேபாளத்தில்...

நேபாளத்தில் ஏற்பட்ட அதி பயங்கர அடுத்தடுத்த இரு நிலநடுக்கங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐந்நூறைத் தாண்டியுள்ளது.

அந்நாட்டு பொலிஸ் தகவல்களின்படி 1500 பேர் வரை உயிரிழந்துள்ளனர் எனத் தெரியப்படுத்தப்படுகின்ற வேளை, மீட்புப்பணி தொடர்வதால உயிரிழிந்தவர்களின எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

நேபாளத்தில் நேற்றுக் காலை அடுத்தடுத்து ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் பழமையான கோவில்கள் உட்பட ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின. நூறுக்கும் மேற்பட்டோர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதால் மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் இருந்து 50 கி.மீ. தொலைவில் உள்ள இடத்தின் அருகே நேற்றுக் காலை 11.41 மணிக்கு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

சுமார் 30 விநாடிகள் வரை நிலநடுக்கம் நீடித்ததால் பீதி அடைந்த மக்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களை விட்டு அலறியடித்து வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர்.

ரிச்டர் அளவுகோலில் 7.9 ஆக பதிவான இந்த நிலநடுக்கம் காரணமாக காத்மண்டு உட்பட நேபாளத்தின் பல்வேறு நகரங்களில் ஏராளமான கட்டடங்கள் இடிந்து தரைமட்டமாகின.

கட்டடம் இடிந்து விழுந்ததில் காயம் அடைந்தவர்களை மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நிலநடுக்க பீதியால் வீதிகளிலேயே காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பிரபலமான தரஹரா கோபுரம் உட்பட காத்மண்டுவில் உள்ள பழமையான கோவில்கள் என்பன நிர்மூலமாகியுள்ளன.

நிலநடுக்கத்தின் பாதிப்பு மறைவதற்குள் பிற்பகல் 12.30 மணிக்கு மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ஏற்கெனவே ஏற்பட்டுள்ள நிலநடுக்கத்தின் பின் விளைவாக ஏற்பட்ட இது ரிச்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகி உள்ளது.

அடுத்தடுத்த நிலநடுக்கங்களால நேபாளத்தின் பெரும்பாலான பகுதிகளில் தகவல் தொடர்பு சேவை முடங்கி உள்ளது. காத்மண்டு விமான நிலையம் என்பனவும் மூடப்பட்டுள்ளது. (செ-11)

*(முன்னர் கிடைத்த செய்தி உள்ளே பிரசுரமாகியுள்ளது)*

## காணாமல்...

இந்தத் தகவலை உறுதிப்படுத்திய ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பரணகம, இதற்கான அனுமதியை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ளார் எனவும், இதன் பிரகாரம் உறுப்பினர்களை தெரிவுசெய்யும் பணி விரைவில் ஆரம்பமாகும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, காணாமல்போகச செய்யப்பட்டோர் விவகாரம் சம்பந்தமாக படையினருக்கு எதிராக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இது பற்றியும் விசாரிக்க தனிக் குழு அமைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இது பற்றி இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

மேற்படி விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவும் அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர்கள் குழுவும் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அறிய முடிகிறது.

1983 ஆம் ஆண்டு முதல் போர் முடிவடையும்வரை வடக்கு, கிழக்கில் காணாமல் போகச் செய்யப்பட்டோர் சம்பந்தமாக விசாரணைகளை நடத்துவதற்கு மகிந்த ஆட்சியின்போது மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

இதன் தலைவராக மெக்ஸ்வெல் பரணகம நியமிக்கப்பட்டார்.

காலப்போக்கில் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் விசாரணை நடத்தும் வகையில் இந்த ஆணைக்குழுவின் விடயப்பரப்பை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விஸ்தரித்து, அதற்கு ஆலோசனை வழங்குவதற்கு சர்வதேச நிபுணர்கள் குழு வொன்றையும் அமைத்திருந்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்பும் இந்த குழுவின் பணியை தொடர்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் வழங்கியதுடன், அதன் ஆயுட்காலத்தையும் நீடித்தார்.

இந்நிலையில், காணாமல் போகச் செய்யப்பட்டோர் சம்பந்தமாக முறைப்பாடுகளைத் திரட்டி வந்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால விசாரணை அறிக்கையை அண்மையில் ஜனாதிபதியிடம் கையளித்தது.

இதில் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றி விவரிக்கப் பட்டிருந்தது.

இவ்வாறு ஆணைக்குழுவால் திரட்டப்பட்ட முறைப்பாடுகளின் நம்பகத்தன்மை பற்றி ஆராய்ந்து அதுபற்றி முழுமையாக விசாரணை நடத்தி நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யும் வகையிலேயே நான்கு விசாரணைக்குழுக்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளன. (செ-11)

## ஊழல்...

இவற்றில் 26 முறைப்பாடுகள் விசாரித்து முடிக்கப்பட்டுள்ளன.

விசாரணைகள் முடிந்த முறைபபாடுகள் தொடர்பான அறிக்கைகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக நிதி மோசடி விசாரணைப் பிரிவு நீதிமன்றத்திடம் அனுமதி கோரியுள்ளது.

இந்த மோசடிகளுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தின் அனுமதியுடன் மேலதிக விசாரணைகளுக்காக கைது செய்யப்படு வாரகள் அல்லது அவர்களிடம் வாக்குமூலம் பெறப்படும் எனவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதேவேளை நிதி மோசடிகள் பற்றி பல தகவல்கள் வெளியாகியுள்ளன

அதில் இலங்கை விமானப் படைக்கு மிக் விமானங்களை கொள்வனவு செய்ததில் இடம் பெற்ற கோடிக்கணக்கான நிதி மோசடி, லங்கா ஹொஸ்பிடல் நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள நிதி முறை கேடுகள், தொலைத் தொடர்புகளை ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, கெரவலப்பிட்டிய அனல் மின்நிலையம், சீ.என்.என். தொலைக் காட்சி, திவிநெகும, ஹெஜின் கொடுக்கல் வாங்கல், பீப்பல்ஸ் லீசிங் நிறுவனம் உட்பட 52 அரச நிறுவனங்களில் இந்த பாரிய நிதி மோசடி குற்றங்கள் நடந்துள்ளன. இது சம்பந்தமாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு விசாரணைகளை நடத்தி வருகிறது.

மேலும் இதுதொடர்பான முறைப்பாடுகள் சம்பந்தமாக பெரும்பாலானவர்களிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. இவை சம்பந்தமான முக்கிய ஆவணங்களை விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். மோசடிகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய சுமார் 10 பேரின் கட வுச் சீட்டுகள் முடக்கப்பட்டுள ளன.

இவர்களின் பல வங்கி கணக்குகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. மறைமுகமாக வைத்திருக்கும் வங்கி கணக்குகள் பற்றிய தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன.

இவ்விசாரணைகள் நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு பொறுப் பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரவி வைத்தியலங்காரவின் கண்காணிப்பின் கீழ் நடைபெற்று வருகின் [illegible] தக்கது. (செ-11)




**RR vs KKR**
கொல்கத்தா, மாலை 4 மணி

**DD vs RCB**
டில்லி, இரவு 8 மணி

## இராணுவ முகாம் புதிதாக அமைப்பு

கிளிநொச்சி வன்னேரிக் குளம் பிரதேச வைத்தியசாலைக்கு அருகே உள்ள அரச காணியில் புதிய இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஆளும்கட்சி உறுப்பினர் சு.தயாபரன் தெரிவித்துள்ளார்.

புதிய மைத்திரி அரசின் 100 நாள் வேலைத்திட்டம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்த நிலையில் இராணுவம் புதிய முகாமினை அமைப்பது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறித்த நிலப்பகுதி நில அளவை திணைக்களம் மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு உரியவை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-15)

## இரட்டை...


வும் அமைச்சர் குறிப்பிட்டார்.

விசேட குழுவொன்றின் மூலம் குறித்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படுவதாகவும் பொது அமைதிக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார். (எ-11)

## மும்பை வெற்றி

மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியை வீழ்த்தியது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 8



விக்கெட்டுகளை இழந்து 157 ஓட்டங்கள் எடுத்தது.

158 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வி அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக மும்பை அணியின் லசித் மலிங்க தெரிவானார். (க)


**சிறுநீரகம் தேவை**

19 வயதுடைய யுவதி ஒருவருக்கு B+, O+ இரத்த வகையுடைய சிறுநீரகம் தேவையாக உள்ளது. சிறுநீரகத்தை வழங்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும். அத்துடன் இவர் வறுமையில் உள்ளார். இவரின் இரண்டு சிறுநீரகங்களும் பாதிப்படைந்துள்ளது. உடனடியாக இவருக்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியுள்ளதால் இவரின் உயிரைக் காப்பாற்ற நல்லுள்ளங் கொண்டவர்கள் உதவி செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம். (202)

**தொடர்பு இல :- 0779427667/0772719027**
**முருகன் வீதி, திருநெல்வேலி**



**தேவை**

18000 - 48000 வரையான சம்பளம் (தொழில் அடிப்படையில்) E.P.F, E.T.F சலுகைகளுடன் கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் (ஜாம், ரொபி, பிஸ்கட், பால்மா, சொக்லெட்) தொழிற்சாலைகள் மற்றும் தனியார் துறைமுகம், விமானநிலையம், வாகன சாரதிகள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், இலற்றீசியன், வெல்டர், தச்சு, பெயின்டர் போன்ற பல வெற்றிடங்களுக்கு 18-50 வயது ஆண், பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் ஒழுங்கு செய்து தரப்படும். இன்றே விரையுங்கள். (சி-811)

**தொடர்புகளுக்கு :- 0776838231**



**இதய அஞ்சலி**



மூதறிஞர், பண்டிதர், கலாநிதி, சைவப்பெரியார், காரைநகர் சிவஸ்ரீ.
**கா.வைத்தீஸ்வரக்குருக்கள்**

சைவத் தமிழர்களின் களஞ்சியமாக விளங்கிய பெருந்தகையின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகின்றோம்.
எங்கள் தேவஸ்தானத்தின் தலைவராக விளங்கிய சிவத்தமிழ்ச் செல்வி அன்னையையும் பெருமைப்படுத்திய பெரியாரை யாம் என்றும் மறவோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக துர்க்காதேவியை பிரார்த்திக்கின்றோம்

ஆறு.திருமுருகன்
தலைவர்

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்கா தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(188)



**கண்ணீர் அஞ்சலி**



திரு.
**இராமலிங்கம் இராசதுரை**

வையத்தில் வந்துதித்தோர்
வாழ்ந்து போதல் இயற்கையன்றோ
அவ்வழியே நீரும் அமரத்துவம் அடைந்தீரோ
விழிபெருகி நாமும் மொழி உழறி நின்றிடினும்
நும்மான்மா சாந்தியெய்த
பிரார்த்திக்கின்றோம் உமக்காக
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவ்வண்ணம் உம்மோடு உற்பவித்த
சோதரர்கள்; ஐஸ்வர்யம், மகேஸ்வரி, காலஞ்சென்ற இராஜரட்ணம், றாஜினிதேவி (ஆசிரியை- கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)
மற்றும் எங்களின் பிள்ளைகள், பேரர்கள்

(201)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி மைத்திரிபாலவை...

இடம்பெறவிருந்த சந்திப்பை மகிந்த ராஜபக்ஷ இரத்துச் செய்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பில் பேசுவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று மாலை 7.00 மணியளவில் சந்திப்பு இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

இந்நிலையில், முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை மற்றும் முன்னாள் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விசாரணைக்கு அழைக்கப்பட்டமை உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்தே [illegible]ணி 20 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேனவுடனான நேற்றைய சந்திப்பை மகிந்த ராஜபக்ஷ இரத்துச் செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்திப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவுக்கு நேரமில்லை என முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்திருந்தார்.

ஆனால், ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு எதிரான நடவடிக்கை காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ இந்தச் சந்திப்பை இரத்துச் செய்ததாக குமார வெல்கம தற்போது கூறியுள்ளார். (எ-11)

# வைத்தீஸ்...

கள் மிகச் சிறந்த தமிழ் அறிஞராக சைவத்தின் காவலராக விளங்கினார்.

ஈழுத்துச் சிதம்பர புராணம், ஆண்டிக்கேணி ஐயனார் புராணம் என்பவற்றைப் பதிப்பித்த வைத்தீஸ்வரக் குருக்கள் பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் சைவத் தமிழ் உலகிற்கு பேருதவியாற்றினார்.

வைத்தீஸ்வரக் குருக்களின் சைவத் தமிழ்ப் பணியை போற்றி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அவருக்கு கௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது.

வைத்தீஸ்வரக் குருக்களின் இறுதிக் கிரியைகள் நேற்றுச் சனிக்கிழமை சுன்னாகம் கந்தரோடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று அவரின் உடல் நேற்று மாலை கந்தரோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

முன்னதாக சிவசரவணபவன் (சிற்பி) அவர்களின் தலைமையில் இறுதி அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. (ந)

# குடும்பஸ்...

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலமானது மந்திகை ஆதார வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (செ-60)


## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை பாலசிங்கம்



மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும் நீர்வேலி, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பாலசிங்கம் நேற்று (25.04.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - கண்ணகப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகராஜா (பிரபாஸ்டியோ)- செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், உஷாவின் அன்பு கணவரும், யாழினி, யாமினி, நிறோஜன், பிரதாப், நிரஞ்சன் ஆகியோரின் அன்பு தந்தையும், தயா, தேவகஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தயானந்தின் அன்பு பேரனும், யோகநாயகியின் அன்புச் சகோதரனும், லதா, சுதாகரன், பிரமினா, காலஞ்சென்ற நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை திங்கட்கிழமை 27.04.2015 மு.ப 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாசிவன்
நீர்வேலி மேற்கு,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்
0113137074,
0775476143, 0773411536

(203)

## தேவை

உணவகம் ஒன்றுக்கு உதவியாளர் ஒருவர் தேவை. (185)

தொடர்பு :- 0771258072

## World Greatest Opportunity

சாதாரண தர கல்வி கற்று வேலையின்றி தவிப்போருக்கு அரிய சந்தர்ப்பம். நீங்கள் துடிப்பானவரா? விடாமுயற்சி உடையவரா? தகுந்த பயிற்சியுடனும் வருமானத்துடனும் உள்வாங்கப்படுவர்.

வயதெல்லை 18-30
தகைமை O/L சித்தி
Fixed Income
ஆரம்பம் 12000/-
பின் 40000/-

Supervisor
Sales & Marketing
Administrative
Distributor
Management Trainee

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (199)

தொடர்பு :- 0774458134

நேர்முகத் தேர்வுக்கு வரும் போது இவ்விளம்பரத்தையும் எடுத்து வரவும்.

## 50% கழிவுடன் அசத்தலான விற்பனை

~~500/=~~ 250/=

50% கழிவு

விசேடமான காட்சியறையில்
உங்கள் எண்ணம் போல்
தெரிவுகள்

முந்துங்கள்
தெரிந்திருங்கள்
எங்குமே பெறமுடியாத
அரியவகை நூல்கள்

வரலாற்றில் பதியப்பட்ட
அரிய பொக்கிச நூல்கள்

பாலர் முதல் பல்கலை
வரையான அனைத்துத்துறை
புத்தகங்களும் ஒரே பார்வையில்

சொற்ப நாட்களே எமது விசேட விற்பனை; விரையுங்கள்

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

இல.212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 5542, 021 567 1527
Email:-acdil@ymail.com

(C-818)

## Great Opportunity

6 வயது முதல் 16+ வரை NCC (UK) Kids Programme
சிறு வயது முதல் நவீன உலகில் காலடி வைக்க
APSS International வழங்கும் UK பாடநெறிகள்
(பரீட்சை முடிவில் NCC (UK) தராதரப்பத்திரம்)

யாழில் Kids Programme நடாத்தும் கல்வி நிறுவனங்கள் இப்பயிற்சி நெறியை APSS International உடன் இணைந்து நடாத்த விரும்பின் தொடர்பு கொள்ளவும்

(196)

APSS International
Hotline: 077 3867695 | 071 5206642

## Teesside University

INSPIRING SUCCESS

Post Graduate | Undergraduate Courses

Entry Requirements for top up (Final Year)
HNDE / HNDA / CMI / ACCA

Contact: Prof.K. Chandirabose (Official Representative)

TOP 10 University for International Students

AFTER A/L'S STUDY IN UK
Sep 2015 / Feb 2016

உங்கள் சுயவிபரக் கோவையுடன் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கவும்

apssengineer@gmail.com

எமது சேவை முற்றிலும் இலவசமானது

APSS International Network (Pvt) Ltd.
No: 35, Nelson Place, Colombo 06. | Tel: 077 3867695

(196)

## வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- வெளிநாடுகளில் இருந்து பொதிகளை பெற்றுக்கொள்ளும் வசதி

Speed Lanka Express (Pvt) Ltd.

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0776217926, 021 2217180
www.speedlanka.net

(C-803)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

### அரிய சந்தர்ப்பம் - இன்று மட்டும்

மொறிசியஸ், டுபாய், பஹ்ரேன், சவுதி அரேபியா, கட்டார் ஆகிய நாடுகளில் படித்தவர்கள் மற்றும் திறமையுள்ளவர்களுக்கான வேலைவாய்ப்புக்கள்.

Office Secretary, Work shop Supervisor, Operation Supervisor, Disel Mechanic, Supervisor, Heavy Vehicle Driver, Bus Driver, Call taxi driver, Cook, Electrician, Carpenter, Mason, Tiles layer, Plumper, Pipe fitter, Pipe [illegible] Construction labour, Car polisher, Clearnar.



சம்பளம் :- 40000 - 100000 வரை
மொத்தச் செலவு :- 20000 முதல் (ரிக்கெட், பீறோ உட்பட)
25 (சனி), 26 (ஞாயிறு) ஆம் திகதிகளில்
நேர்முகத் தேர்வு இடம் பெற்று தகுதியானவர்கள்
உடன் தெரிவு செய்யப்படுவர்.
தேவைப்படும் நபர்கள் ஒவ்வொரு வேலைக்கும்
குறைந்தது 5 முதல் 25 நபர்கள் வரை தெரிவு செய்யப்படுவார்கள்.
நேரம் :- காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை.
இடம் :- 49A சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
(வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு அருகில்)

தொடர்பு:- 077 866 8420

SV INTERNATIONAL (KANDY) PVT LTD

(C-808)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 26.04.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 12



# கூட்டமைப்பை குழப்புவது யார் ?





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பிற்குள் குத்து வெட்டுக்கள்



## பதவி ஆசையின் உச்சம் தலைவிரித்தாடுகிறதா?


குருஷேத்திரம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது கட்டமைப்பைப் பேணுவதில் தவறிழைத்து வருகிறது என்ற உண்மை தமிழ்மக்களால் உணரப்படுகின்றது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்றபதம் தமிழ்க் கட்சிகளின் ஒன்றிணைவைக் குறித்தாலும் தமிழரசுக் கட்சியின் மேலாண்மையே அங்கு கோலோச்சுகிறது.

இத்தகைய போக்கு விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுக்கு அதிருப்தியைக் கொடுக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாக பதிவு செய்து அந்தக் கட்சிச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது.

அதிலும் குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகக் பதிவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றனர்.


அண்மையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா வெளிநாட்டிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டபோது மேற்போந்த கருத்தை புலம்பெயர் தமிழர்கள் முன்வைத்தனர்.



எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்சியாகப் பதிவு செய்வதற்கு தமிழரசுக் கட்சி தயாராக இல்லையென்பது தெளிவு.

எதுவாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்து அந்தக் கட்சியின் ஊடாகத்தேர்தலில் போட்டியிட கட்சி தயாராக இல்லையாயின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற சொற்பதம் மிக விரைவில் விடைபெற்றுக்கொள்ளும் எனலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனப் பெயர் இருந்தாலும் தமிழரசுக்கட் சியின் தலைமையே எல்லாவற்றையும் தீர்மானிக்கிற தெனில் அங்கு குத்துவெட் டுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உண்டெனலாம்.



அதாவது தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் தாங்களே கட்சியின் பிதாமகர்கள் என எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.



தங்களின் இருப்பை நிலை நிறுத்துவதற்காக தங்களின் தனிப்பட்ட விரோதங்களைச் சாதிப்பதிலும் இவர்கள் தீவிரம் காட்டுகின்றனர்.

வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனைக் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்து இடைநிறுத்தியமையானது தமிழரசுக் கட்சியின் சர்வாதிகாரப் போக்கையே காட்டுகிறது என்ற கருத்தும் உண்டு.



விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு இருந்திருக்குமாயின் திருமதி அனந்தி சசிதரனை உறுப்புரிமையில் இருந்து இடைநிறுத்தியிருக்க முடியுமா? அவ்வாறு செய்திருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பது தெரியுமல்லவா? என்ற விவாதக் கருத்து நிலைகளும் உண்டு.

இதேபோல் வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் அனந்தராஜை வெளியேற்ற வேண்டும் எனத் திட்டம் தீட்டிய முக்கிய புள்ளிகள் சிலர் வல்வெட்டித்துறை நகரசபையைக் கலைக்க வேண்டும் என விடாப்பிடியாக நின்றனர்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தவிசாளர் அனந்தராஜ் வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தலில் மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றவர் என்பது இங்கு நோக்குதற்குரியது.

ஆக, தமிழ்மக்களின் விருப்பு வாக்குகளை அதிகமாகப் பெற்றுக்கொண்ட திருமதி அனந்தி சசிதரன் மற்றும் வல்வெட்டித்துறை நகர சபையின் தவிசாளர் அனந்தராஜ் ஆகியோர் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த நடவடிக்கை என்பது பக்கச் சார்பானது என்ற கருத்தும் உண்டு.

அதேநேரம் அனந்தராஜ் தலைமையிலான வல்வெட்டித்துறை நகரசபையைக் கலைப்பதில் வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனுக்கு உடன்பாடில்லை என்றும் தெரிவிக்கப்படு கிறது.

ஆக, விருப்பு வாக்கின் பிரகாரம் தவிசாளர் பதவியை வழங்குதல் எனத் தெரியாத்தனமாக வாக்குறுதி அளிக்கப்போய் உள்வெட்டுவெட்டிச் சரிக்க போட்டியைத் தவிர்க்க முடியாத சூழ்நிலைக்குக் கூட்டமைப்பு ஆளாகிக் கொண்டது என்பதே உண்மை.

எதுவாயினும் அதிகூடிய விருப்பு வாக்குகளை நாம் வழங்கிய போதும் தங்களின் விருப்புக்கு மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடந்து கொள்கிறது என்ற நினைப்பு மக்களிடம் இருக்கும் போது எதிர்காலத்தில் நடைபெறப்போகும் தேர்தல்களில் கூட்டமைப்பு எதிர்கொள்ளக்கூடிய சவால் கடுமையானதாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

### முதல்வர் விக்கியையும் ஓரங்கட்ட முயற்சி

மக்களின்அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்ற வர்கள் மீது தமிழரசுக் கட் சிக்கு கடும் வெறுப்பு உண் டென்பதை இவ்விடத்தில் சொல்லித்தானாக வேண்டும்.

அந்த வெறுப்பு எதற்கானது என்ற கேள்விகளுக்கு அப்பால், வடக்கின் முதல்வர் விக்னேஸ்வரனை ஓரங்கட்டவேண்டும் என்பது கூட்டமைப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள்சிலரின் நினைப்பு.

இந்த நினைப்பை அரங்கேற்றப் பிரதமர் ரணில்-முதல்வர் விக்கி ஆகியோருக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு கனகச்சிதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனை முதலமைச்சராக்க வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தவர் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர். எனினும் இப்போது சம்பந்தரும்முதல்வர் விக்னேஸ்வரனுடன் முரண்படத் தயாராகி விட்டார் என்ற செய்தி தமிழினத்திற்கு ஆரோக்கியமானதல்ல.

அதிலும் மிக விரைவில் நாடு பொதுத்தேர்தல் ஒன்றைச் சந்திக்கத் தயாராக இருக்கும்வேளையில் கூட்டமைப்பிற்குள் குத்துவெட்டுக்கள் நடந்தால் புதிய கட்சிகள் களமிறங்க ஆசனங்களைப் பிரித்து-பிய்த்து எல்லாம் வீண் என்றாக்கிவிடும்.

ஆகையால் சுய பதவி ஆசைக்காக கூட்டமைப்பை பிழையான பாதையில் வழிநடத்திச் செல்லாமல் தமிழ்மக்களின் நலன்கருதி கட்சியை சீரமைத்து வழிப்படுத்துவதே பொருத்துடையதாகும்.

இதை விடுத்து கட்சி எங்களுடையது, எங்களுக்கே மக்கள் ஆதரவு உண்டு என்ற நினைப்பில் எழுந்தமானமாக செயற்பட்டால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பதன் ஆயுள் மத்திமமாகவே இருக்கும். அதிலும் மக்கள் விரும்புகின்ற அரசியல் வாதிகளை ஓரங்கட்டுவதானது அரசியலில் ஒரு வெறுப்பு நிலையை மக்களிடையே ஏற்படுத்திவிடும்.

அரசியல் என்பது தங்களுக்கானது என்பதை மக்கள் உணரும் வகையில் செயற்படுவதே அரசியல் வாதிகளின் கடமையாகும். அதுவே அரசியலையும் மக்களையும் இணைக்கும் பலமான சக்தி என்பதை தனித்து பதவி ஆசையை எதிர்பார்ப்போர் உணர வேண்டும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

பிள்ளையார் கோவில் திருவிழாவில் இன்று வாத்தியார் வைத்திலிங்கத்தின் தெய்வீகச் சொற்பொழிவு. மனுநீதி கண்டசோழன் என்ற பொருளில் அவரின் உரை அமைந்திருந்தது... மன்னன் மனுநீதியின் அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியை பசுமடு ஒன்று தன் கொம்பினால் இழுத்து அடிக்கிறது.

மக்கள் தங்கள் குறைகளை முறைப்பாடு செய்யும் பொருட்டு கட்டப்பட்ட ஆராய்ச்சி மணி இதுகாறும் ஒலித்ததில்லை.இது அடக்கு முறையால் அல்ல. மனுநீதி யின் ஆட்சியில் மக்களுக்கு எந்தக் குறையும் இல்லை என்பதாலேயே ஆராய்ச்சிமணி அடிப்பாரின்றிக் கிடந்தது.

எனினும் அன்று பசுமாடொன்று தன் கொம்பினால் மணியை இழுத்து அடித்ததன் காரணமாக மனுநீதியின் அரண்மனையில் ஒரே பதற்றம். நடந்தது யாதோ? என்று மன்னன் மனுநீதி மந்திரியிடம் வினவ,

வளவ நின்புதல்வன் ஆங்கோர் மணி நெடுந்தேர் மேல் ஏறி அளவில் தேர்த்தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால் இளைய ஆண்கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்ததாக தளர்வுனும் இத்தாய் வந்து விளைத்தது இத்தன்மை.

நடந்த சம்பவத்தை மந்திரி கூற, தாளாத வேதனைப்பட்ட மன்னன் மனுநீதி, வீதிவிடங்கனை வீதியில் கிடத்தி தானே தேரோட்டி தன் ஒரே. மகன் வீதிவிடங்கனுக்கு மரணதண்டனை விதிக்கிறார்.

(இப்படி வாத்தியார் சொல்ல கேட்போர் அனைவரும் கண்ணீர் சிந்தி மனுநீதிச்சோழ மன்னனின் நீதியைப் போற்றினர்)

வாத்தியாரின் உரை முடிந்த கையோடு ஆலடி மாநாடு கூடியது.

**கங்காணி:** மனுநீதிச் சோழமன்னன் பற்றி வாத்தியார் கூறிய கதையை எங்கட ஆட்சியாளர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். மன்னன் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு மனுநீதியின் கதை ஒன்றே போதுமானது.

எங்கட நாட்டில், மந்திரியாக இருந்த மேர்வின் சில்வா தன்ர மகனைக் காப்பாற்றப்பட்ட பாட்டை நாங்கள் அறிந்தம் தானே! தன்ர மகனைப் பொலிஸார் கைது செய்தபோது அதனைத் தடுப்பதற்கு மகிந்தனார் உதவவில்லை என்பதால அந்த மனுசன் ஏற்கனவே நடந்த கொலைச் சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் யாரென்று உழறித் தள்ளிவிட்டுது. பார்த்தியளே! அங்க மாட்டுக்கு நீதி வழங்குவதற்காக மன்னன் தன் ஒரே வாரிசுக்கே மரணதண்டனை வழங்குகிறான். ஆனால் இங்க மற்றவர்களைக் கொன்று மகன்களைக் காப்பாற்றுகிற படலம் நடக்குது. இதுதான் எங்கட நாட்டின் சிறப்பு.

**பண்டிதர்:** கங்காணியார் வயசு போன நேரத்தில வாய்ப் பக்குவம் ஜனநாயகம் திரும்பிற்று என்று நினைத்து அக்கம் பக்கம் பார்க்காமல் கதைக்கிறதால என்ன விளைவுகள் நடக்குமென்று உங்களுக்குத் தெரியும்தானே! ஆகையால மௌனமாக இருப்பது புத்திசாலித்தனம்.

**மூப்பர்:** அதுசரி பண்டிர் ஒட்டுசுட்டானில உள்ள ஒரு பாடசாலை மைதானத்தில் சீருடைக்காரர் களியாட்ட நிகழ்வொன்றை நடத்தினவியளாம். அங்க சாராயவிற்பனை அறம்புறமாக நடந்ததாகக் கேள்வி. எட்டு உரைப்பைகளில பியரின் சேகரிக்கப்பட்[illegible] ஒருதகவல். எங்க[illegible]ணில என்னவெல்லாம் நடக்குதென்று பாருங்களேன்.

**விதானையார்:** இந் நாசமாப்போன செயற்பாடுகளைத் தடுக்கிறதுக்கு எங்களிட்ட ஆரு இருக்கினம். சீருடைக்காரர் நிகழ்ச்சி நடத்துகினம் எண்டால் அங்க சாராய விற்பனையும் கட்டாயம் நடக்கும். எங்கட பிள்ளையள் முசுப்பாத்திக்கு எண்டு ஆரம்பிச்சு மெல்ல மெல்ல மதுவுக்கு அடிமையாகிப் போறதுதானே.

**பண்டிதர்:** சீருடைக்காரர் களியாட்டம் நடத்தினால் அதுக்கு நாங்கள் போகவேணும் எண்டு என்னவில்லங்கம். அது அவர்களின்ர நிகழ்வு என்று சொல்லிப்போட்டு நாங்கள் இருக்கலாமல்லோ!

**கங்காணி:** பண்டிதர் ஐயா, நீங்கள் இப்படிச் சொல்லுறது மிகப்பெரிய தவறு. எங்க நிகழ்ச்சி நடத்துகிறதாக இருந்தாலும் அந்தப் பகுதியில வாழ்கிற மக்களின்ர பண்பாட்டு விழுமியங்களை பாதிக்காத வகையிலதான் அந்த நிகழ்ச்சிகள் அமையவேணும். இதைவிடுத்து இளம் சமூகத்தைச் சீரழிக்கக்கூடிய வகையில நிகழ்ச்சிகளை நடத்துறது அவ்வளவு நல்லதல்ல.

**விதானையார்:** [illegible] நூறுவீத உண்மை இருக்கு. எவரா இருந்தாலும் மற்றவர்களின்ர கலை பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்க வேணும். யாழ்ப்பாணத்திற்கு வார வெள்ளைக்காரப் பெண்கள் கோயில்களுக்குச் செல்லும்போது சேலை அணிந்து செல்வதைப் பார்க்கக்கூடியதாக இருக்கல்லோ. இதுதான் அவர்களின்ர உயர்ந்த பண்பு. அதேநேரம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில சிங்கள மாணவர்களும் படிக்கினம். நல்ல விசயம்.ஒரு நாட்டில பல்லின சமூகம் சார்ந்த பிள்ளைகள் ஒன்றாக இருந்து படிக்கிறது ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதற்கு உதவும்.

ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில படிக்கிற சிங்கள மாணவர்கள் சோடி சோடியாய்த் திரியிறதைப்பார்க்கும்போது மனம் பத்தி எரியுது.

சிங்கள தேசத்தில இந்தச் சோடிக்கலாசாரம் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனா எங்கட தமிழ்த்தேசத்தில இப்படியான போக்குகள் எங்களுக்குப் பிடிக்கமாட்டாது. சிங்களப் பிள்ளையள் சோடியாகத் திரியிறதை; ஒரு சைக்கிளில சேர்ந்து போறதைப்பார்த்து எங்கட பிள்ளையளும் அப்படியொரு கலாசாரத்தைப் பழகிப் போடுவினமோ எண்டுதான் ஏக்கம்.

**வாத்தியார்:** இப்படியான கலாசாரத்தை அறிமுகப் படுத்தாதீங்கோ எண்டு எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாசூக்காகச் சொல்லவேணும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில படிக்கிற மாணவர்கள் ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்யிற வழமை இருந்தாலும் வீதியிலசோடியாத் திரியிற; துவிச்சக்கரவண்டியில ஏற்றிக்கொண்டு போற பழக்கவழக்கங்கள் ஒருபோதும் இருந்ததில்லை. இந்தச் செய்தியை சிங்கள மாணவர்களுக்கு எங்கட விரிவுரையாளர்கள் தெரியப்படுத்தவேணும். நமக்கு ஏன் வீண்வம்பு என்று நினைத்தால், ஒரு பிழையான பழக்கம் எங்கட யாழ்ப்பாண மண்ணிலும் விதைபட்டுப் போகும். ஆகையால யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில படிக்கிற மாணவர்கள் எப்படி நடந்து கொள்ளவேணும் என்ற ஒரு ஒழுக்கக் கோவையை தயாரித்து அதை அமுல்படுத்துகிறது எல்லாவற்றுக்கும் நல்லது.

**பண்டிதர்:** வாத்தியார் நேரம் ஆகுது.மாநாட்டில சொல்லக்கூடியதான விடயங்கள் ஏதும் உண்டா?

**வாத்தியார்:** அட்சய திருதியை இப்ப யாழ்ப்பாணத்தில ஓகோ என்று வந்திட்டுது. நகை வாங்குறதில எங்கட சனம் முண்டியடித்ததைப் பார்க்கும்போது எங்கட நகைக்கடைக்காரர்கள் தப்பிப்பிழைக்கினம் எண்டுதான் சொல்லவேணும்.

வருடம் 365 நாளில் அக்ஷய திருதியை அன்று நகை வியாபாரம் செய்தால் போதும் என்றளவில நகை வியாபாரம் தப்பிக்கொண்டது.

**மூப்பர்:** அக்ஷய திருதியையில தங்கநகை வாங்கினால் தங்கம் சேரும் என்று ஒரு ஐதீகம்.ஆனால் இலங்கையிலேயே வடமாகாணத்தில உள்ள வங்கிகள்தான் அடகு நகை விற்றதில முதல் இடம் என்று கணிப்புகள் சொல்லுது. எங்கட மூதாதையர்களின்ர விதம் விதமான தங்க நகையள ஏலத்தில வித்துப்போட்டு அக்ஷய திருதியையில நகை வாங்கிக் காட்டாப்புக்காட்டுறம். என்ன செய்யிறது எங்கட நிலைமையை நினைத்தால் கதறி அழவேணும் போல இருக்கு. இப்படி மூப்பர் கூற அதனை ஆமோதிப்பது போல பிள்ளையார்கோயில் மணி ஒலித்தது. கண்டாமணியின் ஒலியோடு இரவுப் பூசைக்காக ஆலடி மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.



## சோடியாகத் திரிவதை யாழ்ப்பாணத்தில் கைவிடுங்க


ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பகவானின் கணக்கு

மஹா பாரதப்போர் நடந்து கொண்டிருந்தது. ஒரு வீரன் போர்க் களத்துக்குள் வந்துகொண்டிருந்ததை கிருஷ்ணர் கவனித்தார். அவனுடைய நேர்ப்பார்வையும், நிமிர்த்திய நெஞ்சும், வீரநடையும் கிருஷ்ணரை ஈர்த்தது. தன் உருவை மாற்றிக் கொண்டு அவனை அணுகி "வீரனே எங்கு வந்தாய்?" என்று கேட்டார். "நான் போரில் பங்கேற்க வந்தேன்!"என்றான் அவன். "உனக்கு என்னப்பா தகுதி இருக்கிறது" என்றார் கிருஷ்ணர். அவன் தன்னிடம் இருக்கும் வில்லையும் மூன்று அம்புகளையும் காட்டி, "இதில் ஒன்றால் பாண்டவர்களையும், மற்றொன்றால் கௌரவர்களையும் மூன்றாவதால் அந்தக் கிருஷ்ணனையும் கொல்லும் திறமை படைத்தவன்" என்றான்.



"எப்படி உன்னை நம்புவது?" என்றார் கடவுள் அவன் அவரை மேலும் கீழும் பார்த்துவிட்டு தூரத்தில் உள்ள மரத்தைக்காட்டி, அதில் இருக்கும் இலைகள் அனைத்தையும் ஒரே அம்பில் வீழ்த்திக் காட்டுவதாகக் கூறினான். விளையாடிப்பார்த்துவிடுவது என்று முடிவு செய்தார் கிருஷ்ணர். "சரி செய் பார்க்கலாம்" என்றார். அவர் கடவுளல்லவா? அந்த வீரனுக்குத் தெரியாமல் மரத்தின் ஐந்து இலைகளை முதலில் தன் காலடியின் கீழே மறைத்துக் கொண்டார்.

வீரன் நாண் ஏற்றி அம்பை எய்தான். அவன் சொன்னது போலவே மரத்தில் அனைத்து இலைகளும் ஒரே அம்பின் தாக்குதலில் கீழே விழுந்துவிட்டன. அதோடல்லாமல் அம்பு திரும்பவும் வந்து ஐந்து முறை கிருஷ்ணரின் காலைத் துளைத்தது. வீரன் கிருஷ்ணரைத் தெரிந்து கொண்டு வணங்கினான். கிருஷ்ணரும் அவனது திறமையைப் பாராட்டினார். "சரி யாருக்காகப் போராடப் போவதாக உத்தேசம்?" என்று கிருஷ்ணர் கேட்டார். வீரன் "என் திறமைக்கு சவாலாக நான் எப்போதுமே தோற்கும் கட்சிக்கு ஆதரவாகவே போரிடுவேன்" என்றான். "இவன் போரிட்டால், இவன் பக்கமுள்ள கட்சி ஜெயிக்க ஆரம்பிக்கும். இது முடியவே முடியாதே. போருக்கு ஒரு முடிவு ஏற்படாமல் போய் விடமே" என்று கிருஷ்ணர் யோசித்தார்.



"வீரனே எனக்கு ஒரு உதவி உன்னிடமிருந்து வேண்டியிருக்கிறது" என்று அவனிடம் கூறினார். அவனும் செய்யக் காத்திருப்பதாக தலை வணங்கினான். "இந்தப் போரின் முடிவை பாதிக்கும் சக்தியுள்ள ஒருவன் இருக்கிறான். அவன் தலை எனக்கு வேண்டும்" என்றார் கிருஷ்ணர். "யார் அவன் இப்போதே சொல்லுங்கள். இப்போதே கொய்து வருகிறேன்" என்றான் வீரன்.

கிருஷ்ணர் "வீரனே போரின் முடிவுக்காக உழைக்க எண்ணாமல் உன் திறமைக்குச் சவாலாகப் போரில் பங்கேற்க விழையும் நீதான் அந்த ஆள்" என்று அவன் தலையைக் கேட்டுவிட்டார். அவனும் கொடுக்க ஒப்புக் கொண்டான். கிருஷ்ணர் அவன் பக்தியை மெச்சி அவனுக்கு வரம் ஒன்று கொடுத்தார். அவன் தான் இறந்தாலும், மஹாபாரதப் போரை தன் கண்ணால் பார்க்கவேண்டும் என்று வரம் கேட்டான். வரத்தை அருளிவிட்டு தலையை வாங்கிக்கொண்டார் கிருஷ்ணர்.

## பொன்சிலைப் பிறந்த மகளே!



அழகு மலரே நீ
அமுத மொழி கூறி
பழகும் தமிழ் பேச வா!

வீசும் தென்றல் நீ
வளரும் வசந்தம் கண்டு
பெருமை கொள்ளும் மனம்!

பொக்கை வாய் குவித்து
பிஞ்சு விரல் பதித்து
நெஞ்சை அணைக்க வா!

ஓரவாய் சுழித்து நீ
சிந்தும் ஒரு சிரிப்பு
எம் கவலை மறக்கச் செய்யும்!

அஞ்சுவிரல் விரித்து நீ
ஆர்ப்பரிக்கும் போது அழகு
பொன்னே என்னருகில் வா!

பிள்ளை ஒரு கிள்ளையென
தத்தை மொழி சொல்லி
எங்கள் மனம் அள்ளியவளே!

அல்லித் தண்டு கால் கொண்டு
உன் பட்டு பாதம் பதித்து
தாளம் கொட்டி நீ நடக்க!

எந்த பொருள் இருந்தாலும்
என்ன பொருள் அறிந்தாலும்
ஒன்றுமில்லை உலகில் உன்னைத் தவிர!

கன்னல் மொழி கூறி
கண்டவர் மகிழ்வுடன்
கட்டி முத்தம் தர நீ வா!

தமிழ் அன்னையவள் மகிழ
பெற்ற தாய் துன்பம் விட
என் மகளே வா என்னருகில் வா!



ரா. உபேந்தினி,
தரம் -2-
யாழ். திருக்குடும்பக்
கன்னியர்மடம்
தேசிய பாடசாலை



## விசில்ப் பாடம்!



ஸ்பெயின் நாட்டில் உள்ள கேனரி தீவுகளில் (Canary Islands), விசில் அடிப்பதை ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் பாடமாக்கி இருக்கிறார்கள்.

தூரத்தில் உள்ளவர்களோடும், பள்ளத்தாக்கு மற்றும் ஆழமான பகுதிகளில் உள்ளவர்களோடும் தொடர்பு கொள்ளும் மொழியாக இதைப் பயன்படுத்தலாம் என்பதற்காக இப்படி ஒரு பாடம்.

விசில் மூலம் ஐந்து கிலோமீட்டர் வரை தகவல்களைச் சொல்ல முடியுமாம். பிறப்பு, இறப்பு போன்ற நிகழ்வுகள், திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள், வழிப்பறி, கொலை, கொள்ளை போன்ற எதிர்பாராத சம்பவங்களையும் தெரிவிக்க, விசில் பாடம் உதவும் என்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

**அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்**

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



**அர்ஜூனின் ஜெய்ஹிந் 2 வெற்றியா? தோல்வியா? அவரின் அடுத்த படம் என்ன?**

**ஆட்சி மாறினாலும் பெண்களிற்கு விடுதலை கிடைக்கவில்லையே?**

**உதைபந்தாட்ட நட்சத்திரம் மெஸ்ஸி பற்றி?**

சோபன் — நீர்வேலி

**மகன் காதலித்த பெண் கறுப்பு என மறுக்கும் பெற்றோரை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

"கறுப்பென்றாலும் கண்டோஸ்" என்கிறார்களே அந்த கண்டோஸ் ஏற்கனவே கடிபட்டிருக்குமோ என்ற பயமாய் கூட இருக்கலாம்.

நிருஜன் — கொக்குவில்

**எனக்கொரு சந்தேகம் சினிமா படங்களில் "அவனா நீ...?" என்கிறார்களே அந்த அவன் யாருங்க?**

பெண் கூட்டத்திற்குள் நிற்கும் ஆண் அல்ல அவன். பெண் கூட்டத்திற்குள் நிற்கும் பெண்போல ஆண். அவன்தான் இவன்.

வி.முரளிதரன் — தொல்புரம்

**மதத்துக்காக சண்டை போடும் மனிதர்களை என்ன செய்ய?**

மதங்கள் மனிதத்துக்கானது என்பதை புரியாத மூடர்.

கிருஷ்ணா — வரணி

**மக்களிடம் இரக்க குணம் குறைந்து வருகிறதே?**

பறக்கிறதில பிளேனையும் மிதக்கிறதில கப்பலையும் தவிர எல்லாத்தையும் அடிச்சு தின்றால் எப்படி இரக்கத்தை எதிர்பார்க்கலாம்?

வீரா — மானிப்பாய்


**அநேகமான ஆண்களுக்கு மனைவியை விட அம்மாவை அதிகம் பிடிக்கிறதே?**

மனைவியை எதிர்க்கக்கூடிய ஒரேஒரு ஜீவன் அம்மாதான். அதனால்தான் அவளை அதிகம் பிடிக்கிறது.

தர்மி — வவுனியா

**உங்களுக்கு இப்படியெல்லாம் யோசிக்க எப்படி வருது?**

அதெல்லாம் ஒரு உள் ஞானம்தான்



தவான் — மாவிட்டபுரம்

**அன்பு எப்படியிருக்கும்?**

இரண்டு ஆட்களை இணைத்து அரை மணித்தியாலம் கதையையும் ஒரு மணித்தியாலம் சிரிப்பையும் எடுத்த எடுப்பில் வைத்து சுண்டக்காய்ச்சி ஆறவைத்து அதை எடுத்து உருட்டி தட்டை போட்டு காயவைத்தால் வரும் அன்பு.




ரி.தனு — அல்வாய்

**இன்றைய இளைஞர் யுவதிகளின் எதிர்பார்ப்பு என்ன?**

கையில் ஒரு சிமாற் போன் அதில் அழைப்பு வந்ததோ இல்லையோ அடிக்கடி எடுத்துப் பார்க்க வேண்டியது. பஸ்ஸிலோ அல்லது பொது இடத்திலோ தொலைபேசியில் சினுங்குவது, இடை இடையே ஆ... ஓ... அப்படியா அப்புறம் இப்படி எதிர்பார்ப்பே இல்லாமல் படுகுழியில் போய்க்கொண்டிருக்கிறது நம் சமூகம்.

உதயன் — கோண்டாவில்

**மகனாக தாயிடம், நண்பனாக நண்பனிடம் காதலனாக காதலியிடம் கொடுக்கும் விலையில்லாத பரிசு அன்பு தானே?**

நண்பன் கூட சில இடங்களில் நழுவி விடுவான். காதலி வழமைபோல காலை வாரி விடுவாள். எப்போதுமே நிலையான அன்பு அன்னையிடம் மட்டும்தான் இருக்கும்.

சோமி — மாதகல்

**அர்ஜூனின் ஜெய்ஹிந் 2 வெற்றியா? தோல்வியா? அவரின் அடுத்த படம் என்ன?**

ஜெய்ஹிந் கொடுத்த வெற்றியை ஜெய்ஹிந் 2 கொடுக்கவில்லை. அர்ஜூனின் அடுத்த படம் ஒரு மெல்லியகோடு. இப்படத்தில் ஷாமும் நடிக்கிறார். அர்ஜூனுக்கே உரிய பொலிஸ் வேடத்தில் அசத்துகிறார்.

கௌரீசன் — அல்வாய்

**ஒரு பொண்ணு யாரை நேசிக்கிறாள் என்று எப்படி அறிகிறது?**

அந்த பெண்ணிடம் கேட்டு அறிந்திடலாமே. இதற்கெல்லாம் ரூம் போட்டா யோசிக்கனும்.

குருபரந்தாமன் — அல்வாய்

**ஆட்சி மாறினாலும் பெண்களிற்கு விடுதலை கிடைக்கவில்லையே?**

சிறகு ஒடிக்கப்பட்டதும் அடைக்கப்பட்டதும் மெய். இப்போது சிறகு முளைத்து விட்டது கதவு உடைக்கப்பட்டுவிட்டது. கிளி பறப்பதற்கு தயாரில்லையே.

லோசர் — கரவெட்டி

**உதைபந்தாட்ட நட்சத்திரம் மெஸ்ஸி பற்றி?**

தந்தை :- சாதாரண தொழிற்சாலை ஊழியர், தாய் :- சுத்திகரிப்பு தொழிலாளி பிறந்தது :- 24.06.1987, உயரம் 5 அடி 7 அங்குலம். மிகச்சிரிய வயதில் பல விருதுகளையும் சாதனைகளையும் படைத்த வீரர் என்ற பெருமைக்குரியவர்.

ஒரு தேநீர்க் கடையில் வேலை செய்து கொண்டே பயிற்சிபெற்று இன்று உலகம் போற்றும் நாயகனாகத் திகழ்கிறார்.

ஓமோன் குறைபாட்டால் வளர்ச்சி குன்றி இருந்ததால் அதற்கு சிகிச்சைபெற்று நம்பிக் கையால் உலகை வென்ற நாயகன் தான் மெஸ்ஸி.

கோபி — மாதகல்

**உங்கள் மனைவியைப் பார்த்து நீங்கள் பாடிய பாடல் என்ன?**

**முதல் சந்திப்பில** - என்ன விலை அழகே சொன்னால் விலைக்குவாங்க...

**திருமணத்தன்று** - இருமனம் சேர்ந்து ஒருமனமாகும் திருமணம் இன்று...

**ஒருவருடத்தில்** - ... இனி கணவனுக்குக் கிட்டாது குழந்தைக்குத்தான் முத்தம்...

**அதன்பின்** - சட்டி சுட்டதடா கையை விட்டதடா..

**இப்போது** - போனால் போகட்டும் போடா...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## மறுதலிப்பு

குளிர்கால ராவுகளில்
சிகரெட்டை பற்றவைத்து
கசல் இசையில்
காதலைக்கோர்க்கும்
ஞாபகத்தில் மூக்குத்தி
வீழ்ந்து வெடிக்கும்
மென்மையில்
தழுவிக் கொள்ளும்
தனிமைக்கும்
தீரா தாபத்திற்கும்
முத்தம் கொடுத்து
முதல் கோப்பையை
புசிக்கும்போது
நெஞ்சிருந்து குற்றும்
நிர்வாணம்
இரண்டாவது கோப்பையில்
உஸ்தாத் பிஸ்மில்லாகான்
இளையராஜா
கண்ணீரின் உச்சம்
முகத்தைப் பொத்தி அழும்
மூன்றாவதில் ஒரு குமட்டலும்
மறுதலிப்பின் வீச்சும்
இன்னும் அதிகரித்துவிடும்
இதயநோயை
தனித்திருந்தென்ன
தண்ணியிலிருந்தென்ன
மறக்கமுடியவில்லையே

நெடுந்தீவு கே.யோகேஸ்

## நம்விதி மாறாமலே

நாட்கள் நகர்கின்றன
நம்விதி மாறாமலே
வாக்குறுதி மனிதர்களின்
வருகைகளுக்கு மட்டும்
குறைவில்லை
காணாமற் போனவரின்
கண்ணீர் வாழ்வுக்கின்னும்
விடையில்லை
குடியிருந்த
எம் நிலங்கள்
எமக்கான
காட்சிப்பொருட்களாய்
எப்படி விடியும்
எம்வாழ்வு

புலோலியூர்
வேல்நந்தன்

## கடந்து வந்த பாதைகள்

நிசப்தம் நிலவும் இரவின்
தனிமையில்- எம்
நட்பின் நினைவுகள்
வானுயர் நட்சத்திரத்தின்
விளிம்பில் நீயும் நானும்- அதிலிருந்து
எம்மை வீழ்த்த பலசதிகள்
ஆயினும் சேர்ந்தே வாழ- வாழ்த்துகிறது
விதிகள்
கடந்து சென்ற மேகத்திற்கும்
தெரியும்- நாம் எப்படி இருந்தோம்
என-ஆனால் சிலவேளை
எம்முள்ளே ஏற்படும் போர்கள்
கார்கால முகிலாய் கடந்து சென்றன
ஒற்றையடிப் பாதையில் பயணித்த நாம்
எதிர்பார்க்கவில்லை
இருவழிகளில் பிரிவோம் என்று-ஆயினும்
என்றோ ஒருநாள் மீண்டும் காண்போம்
எனும் நம்பிக்கையில்

சு.நிஷானா
யாழ்ப்பாணம்

## இமயம் தொட

உன்னைத் தூக்கி எறிந்தவராயினும்
அவருக்காய்
இறைவனிடம் மன்றாடு
உன் இதயத்தை
நெருடும் வார்த்தைகளை
வீசியவர்- ஒருநாள்
உன்னைப் புரிந்துகொள்வர்
தியாகங்களை
மனிதன் புரிந்துகொண்டால்
கடவுள் எதற்கு?

மாவை. நா.கஜேந்திரன்

## பெயர்மாற்றம்

மங்கை மகிழ் பொருளும்
மனையுடன் சேர் நிலமும்
மட்டற்ற செலவீனத்தால்
வங்கிதொடு நிலைமை வர;
இல்லை இனி செல்வமென்று
இல்லாளும் மனந்துவள
ஊரெல்லாம் கோயில் சென்று
ஊரறியா பரிகாரம் செய்ய;
பெயர் தனக்குப் பிழைத்ததென்று
சோதிடத்தார் சொல் கேட்டு
இருந்த "சீ"னாவை இல்லாதொழித்துவிட்டு;
"லா" சேர்த்தால் இலாபமென்று
புதுப்பெயரைப் புனைந்து கொண்டு;
ஆவணங்கள் பெயர் திருத்தி
வங்கிக்கும் தெரிவித்து
இனி எல்லாம் நடக்குமென்று
தனக்குள்ளேதான் நினைத்து;
நல்ல செய்தி நாடிவரும்
நாளுக்காய்க் காத்திருக்க
புதுப்பெயரில் முதல்கடிதம்
வங்கியிடமிருந்து
"தங்கள் நகைகள் ஏலத்தில் விடப்படும்."

மேகலைவன்



## நீ மட்டும்!

நீதியே பொய்யாகி
அநீதியே மெய்யான உலகதில்
பள்ளி செல்லும் வயதினில்
பள்ளியறை மறந்து
அள்ளியே உறவுகளை
அராஜக போரதில் ஈந்து
தள்ளியே போகாத
சோகங்களை- நெஞ்சப்
பள்ளியில் தினம் சுமந்து-யாருமற்ற
ஏதிலிகளாய் ஏங்கிடும் எமக்கு
உற்ற தோழனாய் நன்றியுள்ள நாய்
நீ மட்டும் தான்!!

மல்லாவிக் கஜன்

## தயக்கமேன்?

நன்றியுள்ள ஜீவன் கையில்
இருக்கையில் எதற்கு வீண்
தயக்கம் உங்கள் முகத்தினில்?
கலங்காதீர் மனித மிருகங்களிடம்
இருந்து உங்களைக் காப்பாற்ற
இந்த ஜீவன் நிச்சயம்
துணை நிற்கும்

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## காத்திருப்பு

கூலிக்கு சென்ற அன்னை
ஒருவேளை உணவாவது
கொண்டு வருவாளோ...? என்ற
ஏக்கப் பார்வையுடன்
வழிமேல் விழிவைத்து
காத்திருக்கின்றன
குழந்தைகளோடு
நன்றியுள்ள நாய்க்குட்டியும்

த.தனுஜா
அல்வாய்

# மௌனத்தின் தேடல்- 246

## விடியலை நோக்கிய எதிர்பார்ப்பு

நங்கையரே!
கருவறையில் தோன்றி
கல்லறைக்குள் மறையும்வரை
ஒவ்வொரு மனிதனது
உள்ளத்தின் ஆழத்திலும்
பற்பல எதிர்பார்ப்புக்கள்
உறைந்திருக்கின்றன
கற்பனையாலும்
கடின உழைப்பாலுமே
உண்மையான எதிர்பார்ப்பின்
விடியலை அடைய முடியும்

ம.அ.மரியஜெனிற்றா
சாவகச்சேரி

## நிர்க்கதியற்று நிற்கும்

சோகமே உருவாகிச்
சொல்லொணாத்
துயரமதிற்
பார்வையே
பற்றுள்ளவர்களின்
பாசமனமதை வேண்டி
நிர்க்கதியற்று நிற்கும்
சின்னஞ் சிறுசுகளுடன்
சிறியதொரு சிங்காரமான்
நாய்க்குட்டியும்

து.கணேசலிங்கன்
கெருடையம்பதி

## இல்லாது இருக்கும் உறவு

எனக்கு
நிழல் தந்த
நிஜ உறவுகளோ
காணாமற்போனோர் பட்டியலின்
கடைசி வரிகளுக்குள்
தன் நாமங்களை
இணைத்துவிட...
தனிமை கலைத்திட
வந்த புது உறவல்லவா
செல்லப்பிராணியின் உறவு

அராலியூர்
சோ.சிவகுமாரன்

## பாசம்

பாசப்பரீட்சை எழுத-நீ
பருவவயதையடையவில்லை
உன்னால் முடியாது
பாசத்திற்கு ஓர் வஞ்சகம்
வஞ்சகமாய் ஓர் பாசம் வைக்க
தம்பியும் நாய்க்குட்டியும்
உன் இதய அரண்மனையில்
மனுநீதிச் சோழனின்
சிம்மாசனத்தில்

க.அபர்ணா, வட்டுக்கோட்டை

## செல்லும்வழியாதோ?

காலம் செய்தகோலம்
ஞாலம் போற்ற என்றும்
சீலமுடன் வாழ்ந்த
செல்லக்குழந்தைகள்
அகால சூழ்நிலையால்
குலங்காத்த உறவுகளைப்
பலிகொடுத்துத் தனியாக
நின்று தவிக்கின்றார்
செல்லும் வழி அறியாது

துரை, தென்மட்டுவில்

## மௌனத்தின் எதிரொலி

மழலைகளின் மௌத்தின்
எதிரொலி கேட்கிறது
சாலையில் ஓலமிடும் நாய்களுடன்
பேதலித்துப் போயிருக்கும்
உங்கள் பார்வைகளில் ஒரு
தேடுதலைக் காண்கின்றேன்
மௌனச் சிறைகளை உடையுங்கள்
செவிதிறபடக் கேளுங்கள்
உலகம் ஒருநாள் கண்திறக்கும்

வே.புவிராஜ்
கைதடி மேற்கு

## காத்திருப்பு

நாங்கள் மட்டுமல்ல எங்கள்
வீட்டுச் செல்லநாயும்
காணாமற்போன எங்கள்
அன்பு அப்பாவின் வருகைக்காக
கண்களில் ஏக்கத்தோடு
காத்திருக்கின்றது

சு.ஜெயசீபன்
பருத்தித்துறை

# மௌனத்தின் தேடல் -247



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 29.04.2015ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் வார்த்தைகள் உனக்கு கட்டுப்படுகின்றனவா?



நண்பா! நாம் பேசும் வார்த்தைகள் எங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றனவா? அல்லது கட்டுக்கடங்காமல் தறிகெட்டுச் செல்கின்றனவா? கண்கள் இரண்டு, காதுகள் இரண்டு, கைகள் இரண்டு, கால்கள் இரண்டு என்று இரண்டிரண்டாகப் படைத்த இறைவன் நாக்கு மட்டும் ஒன்றுதானே படைத்தான். ஏன்தெரியுமா? பேச்சு ஒன்றாக இருக்க வேண்டும். அதுவும் எங்கள் நாவுக்குள் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதற்காகவல்லவா?

நகைச்சுவை என்ற பெயரில் மற்றவர்கள் மனதைத் துன்பப்படுத்தும் விதமாக உன்னுடைய பேச்சுக்கள் இருக்கின்றன. நகைச்சுவை உணர்வு நம்மோடு ஒன்றிப் போன விடயமாகவிருக்க வேண்டும். ஆனால் மற்றவர்களைக் காயப்படுத்தாத, ஆரோக்கிய மானதாகவிருக்க வேண்டும். அவதானித்துப் பார்! பெரியோர்கள் பேசும் போது நகைச் சுவையை அழகாக பேச்சோடு பேச்சாக வெளிப் படுத்துவார்கள்.

மகாத்மாகாந்தியிடம் வெளி நாட்டுக்காரர் ஒருவர், "உங்கள் நாட்டுக்காரர்களுக்கு அறிவில்லையா? ஏன் வேறுயாருமில்லாமலா உங்களை அனுப்பி வைத்திருக்கின்றார்கள். என்று சற்று நக்கலாகக் கேட்டனராம். அதற்கு அவர் பதிலளிக்கும் போது, உங்களை சமாளிக்க நான் ஒருவன் போதும் என்று நம் மக்கள் நினைத்திருக்கின்றார்கள் போலும். என்று சொன்னாராம்.

பேசும் போதுகையாளும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் முக்கியமானவை. ஒருவர் உங்களிடம் ஓர் உதவி கேட்டால் நாளைக்கு செய்கின்றேன், பிறகு செய்கின்றேன் என்ற வார்த்தைகளைச் சொல்லுவதைவிட என்னால் தற்போது செய்ய முடியாது என்று நேரடியாகச் சொல்கின்ற வார்த்தைக்கு பலம் இருக்கின்றது. பலத்துடன் அந்த வார்த்தைக்கு மரியாதையும் இருக்கின்றது.

பின்னர் செய்கின்றேன் என்று கூறிவிட்டு செய்யாது விடும் போதுதான் மற்றவர்கள் சொல்வார்கள் வார்த்தை தவறி விட்டார் என்று. நீ சொல்வாய் பேச்சு பேச்சாயிருக்கவேணும் என்று.

பேசுங்கள் அளந்து பேசுங்கள், அறிந்து பேசுங்கள். சில இடங்களில் பேசுவதைவிட பேசாது இருப்பது நன்று என்று கூறுவார்கள். ஆனால் பேச வருகின்ற சந்தர்ப்பங்களில் பேசாது இருந்து விட்டு புறங்கூறுவது தவறு நண்பா. உன்னுடையகருத்தை உடனே தெரிவி. ஏற்றுக் கொள்பவர்களை விட்டு ஏற்றுக் கொள்ளாதவர்களிடம், இன்னும் பேசுங்கள் நட்பை வளர்த்துக் கொள்ளுங்கள்! எப்போதும் விவாதம் செய்யாதீர்கள்! நீங்கள் கூறும் கருத்திலே முரண்டு பிடித்துக் கொண்டிருக்காதீர்கள்.!

சாமர்த்தியமாகப் பேசப் பழகிக் கொள்ளுங்கள். அதற்காக நடிக்காதீர்கள் நடிப்பு வாழ்க்கையாகாது. எப்போதும் பல்லை இளித்தவாறு பேசாதீர்கள் உங்கள் கருத்தின் மதிப்பை அந்த இளிப்பு மாற்றிவிடும். பதிலாக புன்னகை கலந்த முகத்துடன் பேசும் போது மற்றவர்கள் உங்கள் பேச்சை அன்புடனும் அக்கறையுடனும் கவனிப்பார்கள். உங்கள் கருத்தை கூறிமுடித்தவுடன் உங்களுக்கும் ஏனையவர்களுக்கும் சம்பந்தமில்லை என்பது போல முகத்தை வைத்துக் கொள்ளாதீர்கள் அது உங்கள் கருத்தை அர்த்தமில்லாத தாக்கி விடும்.

நீங்கள் பேசும் போது எல்லோ ரும் கவனிக்க வேண்டும் என எதிர்பார்க்கும் எண்ணத்தை அவர்கள் பேசும் போது உங்கள் மனதில் எடுத்துக் கொள்ளுங்கள். மெதுவாகப் பேசுபவர்கள் கருத்தைக் கணக்கிலெடுக்காது விடாதீர்கள்.

அத்துடன் சில இடங்களில் மௌனமாக இருப்பவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல. அவர்கள் அமைதியாக மற்றவர்களிடமிருந்து கற்றுக் கொள்வார்கள். அமைதியும் பொறுமையும் கிரகித்தல் திறனைக் கூட்டக்கூடியவை. நண்பா! எடுத்த எடுப்பில் உன் பெருமை பாடுவதைத் தவிர்த்துவிடு, உன் அருகில் பலவற்றை சாதித்து முடித்த ஒருவன் சாதாரணமாக உட்கார்ந்திருப்பான்.

நண்பா! உன் தவறை மறைக்க விரைவாகவும் சத்தமாகவும் பேசுவதை தவிர்த்துவிடு. அவ்வாறுபேசி உன்னை நீயே காட்டிக் கொடுத்து விடாதே. ஒருவர் பேசுவது பிடிக்கவில்லை யென்றால் முகத்தை திருப்பாதே, உதட்டைச் சுளிக்காதே அவை உனது நடத்தையை உயர்த்திக் காட்டாது.

கோபம் வரும்போது மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறி பேச்சை நிறுத்தி விட்டுவேறு வேலையில் ஈடுபடு. சற்றுநேர மௌனம் அடுத்தவரை யோசிக்க வைக்கும். கடுமையான வார்த்தைகளைப் பேசிவிடாதே. வார்த்தைகளைத் திருப்ப அள்ளமுடியாது.

ஒருவர் கோபத்தில் பேசியதை அவர் இனிமையாகப் பேசும் சந்தர்ப்பத்தில் நினைக்காதே. ஆனால் கோபமாகப் பேசும்போது இனிமையாகப் பேசிய சந்தர்ப்பங்களை நினை. அவரோடு ஏற்பட்ட உறவு என்றும் நிலைத்திருக்கும்.

நண்பா! சிலர் தந்திரமாகப் பேசக்கூடியவர்கள். அவர்களோடு அவதானமாக இருக்கவேண்டும். தந்திரத்திலும் நன்மை இருக்குமென்றால் சரி . ஆனால் தீமை இருக்குமென்றால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எல்லோரையும் அனுசரித்துப் போக வேண்டும் என்பதற்காக பேச்சில் தந்திரங்கள் கையாளப்படும். அதேநேரம் அனைவரையும் பிரித்து வைக்கவேண்டும் என்றும் கையாளப்படும். அவற்றை புரிந்து கொள்ள வேண்டும். ஒருவர் குழப்பத்தில் இருக்கும் போது உன்னுடைய பேச்சு அவரது குழப்பத்தை மேலும் கூட்டுவதாக இல்லாமல் சிக்கலிலிருந்து விடுபடக் கூடியவிதத்தில் ஆதரவு மிக்கதாக இருக்கவேண்டும்.

இன்னும் சிலருக்கு கெட்டவார்த்தைகள் பேசுவதில் ஒருமகிழ்ச்சி. உண்மை அதுவல்ல. நல்லவார்த்தைகள், புன்னகையுடன் அமைதியாக, அன்பாக, உற்சாகமாகப் பேசும் போது அந்தப் பேச்சுக்கும், பேசுபவருக்கும் ஆயுள் அதிகரிக்கும். அவ்வாறு பேசுபவர்களைத் தேடித் தேடிக் கதைக்கச் செல்வார்கள்.

நண்பா! உற்சாகமாகப்பேசு! உறவறிந்துபேசு! வயதறிந்து பேசு, ஊரறிந்துபேசு,நம் பேச்சு மற்றவர்களை நோயாளியாக்கக் கூடாது.

ஒருவருக்கு பிடிக்கின்றதோ, பிடிக்கவில்லையோ எதுவுமே அறியாது, விடாது பேசிக் கொண்டிருப்பது தவறு. அத்துடன் சம்பந்தமில்லாமல் பேசுவது அதைவிடத் தவறு. ஏதோ பேசவேண்டும் என்பதற்காக பேசுவதும் தவறு. அதாவது பேசிப் பேசிக் கொல்கின்றார்களே என்றுமற்றவர் எண்ணக்கூடாது. ஆக இந்தப் பேச்சுக்குள் எத்தனை விடயம் இருக்கின்றது. ,

பேசும் போது பக்கத்திலிருப்பவரின் முகத்தைப் பார்த்துப் பேசவேண்டும். அப்போதுதான் பேசுபவரின் உணர்வுகளை நம்மால் அவதானிக்க முடியும். குறிப்பாகக் கண்களைப் பார்த்துப் பேசுபவர்களைக் கனவான்கள் என்று சொல்வார்கள். நாம் சொல்லும் கருத்துக்க ளையும் உரியமுறையில் கொண்டு சேர்ப்பதற்கு முகத்தைப் பார்த்து பேசுவதுநன்று.

மற்றவர்களுடன் பேசும் போது,அவர்களின் உள்ளத்தில் அவர்களைப் பற்றிய உயர்ந்த சிந்தனைகளை ஏற்படுத்தும் விதமாகப் பேசவேண்டும். அவ்ர்களை ஊக்கப்படுத்திப் பேசவேண்டும்.

தட்டிக் கொடுத்துப் பேச வேண்டும். நல்லபல பேச்சு வார்த்தைகள் பிழைத்துப் போனதால் தான் பல நாடுகளில் யுத்தச் சத்தங்கள் கேட்டது.

எனவேவெறும் வார்த்தைதானே என்பதற்காக அவற்றை தவறாகப் பயன்படுத்தாமல், மற்றவர்களுடன் நல்ல விதமாகப் பேசிநம் சிந்தனையை வளர்க்க வேண்டும்.

யாழ்.தர்ஷி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவெளி

**சென்ற வாரம் 19.04.2015 ஞாயிறு வலம்புரியில் வெளிவந்த சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள *“குருந்தம்”* நிலையத்தின் பொறுப்பாளர்,திரு ச.ரவீந்திரன்(உளமருத்துவ சமூகப்பணியாளர்) அவர்களின் நேர்காணலின் இறுதிப்பகுதி வெளிவந்தது. இவ்வாரம், “நான் இரண்டு வருசமாக் குடியை விட்டுட்டேன்”என்ற உண்மைச் சம்பவ விபரிப்பு வெளிவருகின்றது. அடுத்த வாரம், உளசமூகப் பயிற்றுவிப்பாளரும், ஆலோசகருமான இரா. சந்திரசேகர சர்மா அவர்களின் நேர்காணல் வெளிவரும்.**




## நான் இரண்டு வருசமாக் குடியை விட்டுட்டேன்..

என்னுடைய பெயர் சுந்தரலிங்கம்(இரகசியத்தன்மை கருதிப் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளது). யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல நிறுவனமொன்றில் பணிபுரிகின்றேன். 1984 ஆம் ஆண்டிலிருந்து குடிப் பழக்கத்தைக் கற்றுக் கொண்டு வட்டேன். எதற்கெடுத்தாலும் குடி.

*“சம்பளம் எடுத்தால் குடி,*
*சோகம் எண்டால் குடி,*
*சந்தோசம் எண்டால் குடி,*
*செத்த வீடெண்டால் குடி,*
*கலியாணவீடென்றால் குடி,*
*மழைபெய்தால் குடி,*
*வெயிலடித்தால் குடி,”*

*“கையிலை நிறையக்காசு புளங்கினதாலை எதற்கெடுத்தாலும் குடி.”*

ஆரம்பத்திலை,”எனக்குத் தெரிஞ்ச ஆக்கள் ஒரு வீட்டை வைச்சுச் சாராயம் வித்தவை.” “அங்கைபோய்த் தான் குடிக்கிறனான்.”

“வேலை முடிச்சு நேரை அங்கை தான் போவன்.”

“வேலைக்குப் போற பொழுது மனைவி உடுப்பெல்லாம் மினுக்கு மடிப்புக்குலையாமல் தருவா.டிப் டொப்பா போட்டுக்கொண்டு போவன்”

குடிக்கிறதுக்கு அந்த வீட்டுக்கு நான் போகும் போதே, “மனேஜர் ஐயா, வாங்கோ, “எண்டு சொல்லி உள்ளே அழைத்து ஊத்தி ஊத்தித் தருவாங்கள்.

என்னோடை வேலைசெய்யுற இன்னொரு நண்பர் நல்லாக் குடிப்பார். அவர் ஒருநாள் கேட்டார். “Where is god? (கடவுள் எங்கிருக்கின்றார்?),

நான் பதில் சொன்னேன்.

“கடவுள் எல்லா இடமும் தான் இருக்கின்றார்.”

“அடேய்.. Where இல் இருக்கின்ற W வை எடடாப்பா “here is god”

“நாங்கள் குடிக்கின்ற இடத்திலைதான் கடவுள் இருக்கின்றார்” என்று சொன்னார். நானும் அபபிடித்தான்நினைத்தேன், சந்தோசமாகக் குடித்தோம்.

“நான் உழைக்கிறதிலை அரைவாசியைக் குடிக்குச் செலவழிச்சுப் போடுவன். காசும் அப்பிடித் தான் கனக்கக் காசு இருக்கும்.”

“அண்ணன் ஒருத்தர் ஹொலண்ட்ல இருக்கின்றார். அவர் வரும் போது வெளிநாட்டுக் குடிவகைகள் எடுத்துக் கொண்டு வருவார்.”

“ஆனாலும் எனக்கு எதிலை எவ்வளவு அற்ககோல் இருக்குதெண்டு தெரியும். பாத்துப் பாத்துக் குடிப்பன்” “ஈரலிலை பிரச்சினை வந்தாப் பிறகு குடிக்க ஏலாதெல்லோ.” அதுதான்.

வன்னிக்கு மாற்றம் கிடைத்துப் போய் தனியக் குவாட்டர் சிலையிலிருந்து வேலைக்குப் போன காலம் இன்னும் நிறையக் குடிக்கப் பழகிட்டேன். ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் என்னுடைய குடிக்குச் செலவாகத் தொடங் கியது. ஆரம்பத்தில் “குடி ஒரு பகிடி விடயமாகவிருந்தாலும் போகப் போக நான்குடிப்பது கௌரவமான விடயம்” என்று முடிவெடுத்தேன்.

என்னுடைய மனைவிக்கு நான் குடிக்கிற விடயம் அறவே பிடிக்கவில்லை. அவவும் குடியை விடுவிகக நிறையப்பாடுபட்டா. ஒரு நாள் நிறையச் சத்தியெடுத்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தன். ஹொஸ்பிட்டல் போனவுடனையே,

“என்ரை ஈரல் கருகிப் போச்சுதா?” எண்டு கேட்டன்.

“எனக்கு டென்ஷன் என்னண்டால் ஈரல் கருகினால் என்னுடைய குடிக்கு முழுக்குப் போட வேண்டி வந்திடுமே.”

நான் குடித்தாலும் வீட்டில் பெரியளவில் சத்தம் போட்டுக் கத்துறதில்லை. ஆனால் பிள்ளையளுக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன். மகன் ஒரு நாள் கணிதபாடம் விளங்கப்படுத்தச் சொல்லிக் கேட்டபோது,நான் பக்கத்திலை கூப்பிட்டு விளங்கப்படுத்த மூக்கைப் பொத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு தெரிஞ்சிட்டுது நான் குடிக்கின்றனான் என்று. ஆனாலும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. எதுவும் பேசவில்லை. எனக்கு அப்போதெல்லாம் அதைப பற்றி எந்தக் கவலையும் இருக்கவில்லை.

சில நேரங்களில்

“நான் ஏன் இப்பிடிக் குடித்து என் உடலையும் பணத்தையும் வீணாக்கிக் கொண்டிருக்கின்றேன்?” சாராயத்தைக் கையிலை வைச்சுக் கொண்டு யோசிப்பேன். அண்டைக்கு அதிகமாக் குடிச்சிடுவன். அதையெல்லாம் யோசிக்கப்போதையும் மண்டைக்கு ஏறாது. பிறகு ஒருபோத்தலிலிருந்து ஒண்டரைப் போத்தலுக்கு மாறிடுவன்.

என்னுடைய குடிப்பழக்கமும் அப்பிடியேகூடிக்கொண்டே போனது.

“சில வேளைகளில் என்னுடைய மேலதிகாரியோடு சேர்ந்து பனங்கள்ளுக் கூட குடித்திருக்கின்றேன்”. “சம்பளம் எடுக்கிற நாள். என்னுடைய மேலதிகாரி என்னையும் கூட்டிக் கொண்டு போய் நல்ல உயர்ந்த ரகப் பனங்கள்ளு வாங்கித் தருவார். அதைக் குடிச்சால் அதன் இனிமையே தனிதான்.”

நான் குடியை விடவேண்டும் என்று நானாகத் தான் முடிவெடுத்தேன். ஏனென்றால் என்னுடைய வாழ்க்கையில் நடந்த மறக்க முடியாத சம்பவம் ஒன்று என்னை திசை திருப்ப வைத்துவிட்டது. அந்தச் சம்பவத்தைப் பற்றிச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. ஆனால் குறித்த உண்மைச் சம்பவத்துக்கு சாட்சி சொல்லப் போன என்னைப் பாத்து, “வெறிபோட்டுத் திரியுற உனக்கு உண்மை தெரியுமா? பேசாமல் போ, என்று நான் ஒரு குடிகாரன் என்பதால் பொய்தான் சொல்லுவேன் என நினைத்து அந்த உண்மையை மறைத்து விட்டார்கள். அன்றைக்கே முடிவெடுத்தேன்”

*“பாழாய்ப் போன குடியை விட வேண்டும்”* சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அமைக்கப் பட்டுள்ள குருந்தம் பற்றி ஏற்கனவே கேள் விப்பட்டிருந்தேன். உடனடியா வந்து அட்மிட் ஆகிட்டன். குருந்தத்திலை நடந்த விடயங்கள் இன்னும் எனக்கு நினைவிருக்கு. எனக்கு உளவளத்துணை வழங்கிய உளவளத்துணையாளரை நான் இன்றுவரை மறக்கவேயில்லை. அவர் செய்த முதல் காரியம் என்னுடைய சம்பளத்தை மனைவியின் கணக்குக்கு மாத்தினதுதான். நானும் சம்மதித்து தானசெய்தா். என்னுடைய கைக்கு வருகின்ற பணத்தின் அளவைக் குறைத்து விட்டார்.

அத்துடன் பலவகையான மருந்துகள் பாவித்து நல்ல முறையில் சிகிச்சை வழங்கினார்கள். படிப்படியாகத் தான் நான் என்னுடைய குடிப்பழக்கத்தை விட்டேன். ஆரம்பத்தில் என்னால் எதுவும் செய்ய முடியவில்லை, இடையிடையே குடித்தேன், பின்னர் படிப்படியாக குடியை விடத் தொடங்கினேன். குருந்தத்தில் நடைபெறுகின்ற குழுச்சிகிச்சை, பயிற்சி வகுப்புக்கள், கலந்துரையாடல்கள், சந்திபபுக்கள், நிகழ்வுகள் என்று அனைத்திலும் கலந்து கொண்டேன். ஒரு நாள் நடை பெற்ற நிகழ்வொன்றில் நானும் உரையாற்றினேன்.

அன்று நான் உரையாற்றியதால் இனிமேல் அறவே குடிக்கக்கூடாது என்ற எண்ணமும் எனக்குள் ஏற்பட்டது.

ஆரம்பத்தில் மிகவும் வெட்கமாகவும், எதையும் வெளிப்படையாகப் பேச முடியாமலும் தடுமாறினேன. பின்னர் என்னுடைய மனைவி, பிள்ளைகளின் ஆதரவுடன் பேசத் தொடங்கினேன். என்னுடைய அனுபவங்களை மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொண்டேன்.

சில காலங்கள் குடியோடு வாழ்ந்த எனக்கு குடியை விட்ட பின்னர் ஓர் வெறுமையுணர்வு ஏற்பட்டது. இருந்தாலும் நான் என்னுடைய கவனத்தைத் திசை திரும்ப விடவில்லை.

நான் குடித்து வெறித்துத் திரிந்த பாதைக்குச் செல்வதைத் தவிர்த்தேன். அதற்காக நீண்ட தூரம் பயணம் செய்து வேறு வழியால் செல்லத் தொடங்கினேன்.

என்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நிறுவனத்தில் நடைபெறுகின்ற “பார்டி” நிகழ்வுகளிலிருந்து ஒதுங்கத் தொடங்கினேன். நான் குடியைவிட்ட விடயம் தெரிந்த என்னுடைய நண்பர்கள் சவால் விட்டு என்னைக் குடிக்க வைக்கப் பாடுபட்டனர். என் நெஞ்சில் நெருஞ்சி முள்ளாகக் குத்திக் கொண்டிருந்த அந்தச் சம்பவம் மற்றும் குருந்தத்தில் நான் கற்றுக் கொண்ட விடயங்கள், எனக்கு அங்கு கிடைத்த அங்கீகாரம் என்பவை என்னைக் குடிகக விடாமல் பார்த்துக் கொண்டன. குருந்தத்தில் நடக்கும் அனைத்து ஒன்றுகூடல் நிகழ்வுக்கும் நான் என் குடும்பத்துடன் வருகை தந்து கொண்டிருக்கின்றேன்.

இன்று என்னுடைய உதாரணம் குடிக்கின்ற, குடியை விட விரும்புகின்ற மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

OUR WISDOM COMES FROM OUR
EXPERINCE
BUT
OUR EXPERINCE COMES ONLY FROM
OUR MISTAKES

சுந்தரலிங்கம் அவர்கள் எழுதிவைத்த வாக்கியம் ஒன்று இங்கு தரப்பட்டுள்ளது. “எங்கள் அனுபவத்திலிருந்து வேண்டிய அறிவு ஞானம் கிடைக்கின்றது. ஆனால் அனுபவமோ நாங்கள் செய்கின்ற தவறுகளிலிருந்து பெறப்படுகின்றது”

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு,**
**8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை,**
**கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆட்டிப் படைக்கும் நிழல்!



கடந்த ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர், இலங்கையில் எதிர்பாராத பல மாற்றங்கள் இடம்பெற்றன. அத்தகைய மாற்றங்கள் அனைத்தும் அப்போதைய எதிர்க்கட்சிக் கூட்டணியால் திட்டமிடப்பட்டதற்கமையவே நடந்தேறின.

அதாவது, ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும், நாடாளுமன்றத்தில் குறைந்தபட்ச பெரும்பான்மை பலத்தில் பாதியைக் கூடக் கொண்டிராத ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஐ.தே.க.வும் ஆளும் கட்சியிலிருந்து பிரிந்து வந்தவர்களும் இணைந்து அமைச்சரவையில் இடம்பிடித்துக் கொண்டனர். அதற்குப் பின்னரும், மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க கூட்டணி எதிர்பார்த்தவாறே நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றில் பல இலங்கை அரசியலுக்குப் புதிய அனுபவங்களாகவே இருந்தன. ஏனென்றால், நடைமுறைச் சாத்தியமற்றதாக கருதப்பட்ட பல விடயங்கள், ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடந்தேறியிருந்தன.

புதிய அரசாங்கத்தின் 100 நாள் செயற்றிட்டம் கடந்த புதன்கிழமையுடன் முடிவடைந்துள்ள நிலையில், இப்போது கொழும்பு அரசியல் களத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் அனைத்துமே, அரசாங்கத்தின் கைகளை மீறியதாகவே உள்ளன.

கடந்த ஜனவரி மாதம் எப்படி ரணில் விக்கிரமசிங்க - மைத்திரிபால சிறிசேன கூட்டுக்கு சாதகமாக இருந்ததோ, இப்போது அதற்கு நேர்மாறாக - தற்போதைய எதிர்க்கட்சிக்கு சார்பானதாக மாறியிருக்கிறது. அதாவது, முன்னர் ரணில் விக்கிரமசிங்கவும் மைத்திரிபால சிறிசேனவும் திட்டமிட்டவைதான் நடந்தேறின. ஆனால், இப்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நிற்கும் தரப்புகள் எதனைத் திட்டமிட்டனவோ அதுவே நிகழ்ந்தேறி வருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைவராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இருந்தாலும்கூட, அவரது கையை மீறியே எல்லாம் நடந்து வருகிறது. உண்மையில் இந்தக் கட்சிகளின் தலைவர் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் வெறும் பெயரளவுக்குத் தான் கூறிக்கொள்ள முடிகிறது.

இந்தக் கட்சிகளின் நாடாளுமன்ற மாகாண சபை உறுப்பினர்களில் பலரும், மஹிந்த ராஜபக்ஷவின் கைப்பொம்மையாகவே இருக்கின்றனர். அங்கிருந்து கொடுக்கப்படும் கட்டளைகளுக்கு அமையவே அவர்கள் ஆட்டம் போடுகின்றனர்.

எனவேதான், 100 நாள் செயற்றிட்டத்தின் முற்பகுதி எவ்வாறு அரசாங்கத்துக்கு சார்பானதாக - அதன் நிகழ்ச்சி நிரலுக்கேற்றவாறு அமைந்திருந்ததோ, 100 நாள் செயற்றிட்டத்தின் இறுதிப் பகுதி எதிர்க்கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே இடம்பெற்றது என்பதில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டியதில்லை.

100 நாள் செயற்றிட்டத்தின் முற்பகுதி மிக முக்கியமான மாற்றங்கள் எதையும் கொண்டதாக அமைந்திருக்கவில்லை. இலகுவாக நடைமுறைப்படுத்தக்கூடியதும் குறுகிய காலத்துக்குள் செயற்படுத்தக் கூடியதுமான விடயங்களைத்தான் முற்பகுதி கொண்டிருந்தது.

அவற்றை நிறைவேற்றிக் கொள்வதில் அரசாங்கம் சிக்கல்களையோ, பிரச்சினைகளையோ அதிகம் எதிர்நோக்கியிருக்கவில்லை. ஆனால், மிக முக்கியமான மாற்றங்களைக் கொண்ட- 100 நாள் செயற்றிட்டத்தின் இறுதிப் பகுதியை நிறைவேற்றுவதில் தற்போதைய அரசாங்கம் இதுவரையில் தோல்வி கண்டுள்ளது என்பதே உண்மை.

குறிப்பாக, சுதந்திரமான நீதிச்சேவை, பொதுச்சேவை, ஆணைக்குழுக்களை அமைத்தல், தேர்தல் முறை மாற்றம், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்தல், அரசியலமைப்புத் திருத்தம் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் இதுவரையில் வெற்றியைப் பெறவில்லை.

19 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தபோதிலும், அது நிறைவேற்றப்படுமா என்ற கேள்வி இருந்து வருகிறது. இந்த அரசாங்கம் பதவியேற்றபோது, கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றிவிட்டு நாடாளுமன்றத்தை 100 நாட்களின் முடிவில் கலைத்து, தேர்தல் நடத்துவோம் என்பது முக்கியமானது. ஆனால், கடந்த புதன்கிழமையுடன் 100 நாட்களை நிறைவு செய்துவிட்ட அரசாங்கம், 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறது.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்டிராத ஓர் அரசாங்கம், மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஒரு சட்டத்தை நிறைவேற்றுவது என்பது குதிரைக் கொம்பான விடயமே. ஆனாலும், 19 ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்க்கட்சியின் துணையுடன் நிறைவேற்ற முடியும் என்றே அரசாங்கம் நம்பியிருந்தது. குறிப்பாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவமும் சந்திரிகா குமாரதுங்கவின் பின்புலமும் இதற்குத் துணையாக இருக்கும் என்று கணக்கும் போட்டிருந்தது ஐ.தே.க.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைமைப் பொறுப்புகளைக் கொண்டிருந்தாலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால், தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்தவோ, வழிநடத்தவோ முடியாத நிலைதான் உள்ளது.

இது ஐ.தே.க. மைத்திரிபால சிறிசேன கூட்டு அரசாங்கத்தின் எதிர்பார்ப்புகள் தவறிப் போவதற்கு முக்கியமான காரணமாகும். மஹிந்த ராஜபக்ஷ என்ற வலுவானதொரு சக்தி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள்ளேயும் ஆதிக்கம் செலுத்தி வருவது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உள்ள முக்கியமான சவாலாக இருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவின் நிழல்தான் இப்போது அரசாங்கத்துக்குப் பெரிதும் நெருக்கடியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிழல், அரசாங்கத்தைச் செயற்படவிடாமல் செயலற்ற நிலைக்குள் தள்ளிவிட்டதாகவே உணரப்படுகிறது.

கடந்த 20 ஆம் திகதியும் 21 ஆம் திகதியும் நாடாளுமன்றத்தில் 19 ஆவது திருத்தச்சட்டத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்வது என்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்ட போதிலும், அரசாங்கம் எதிர்பார்த்தது போன்று அதனைச் செய்ய முடியாது போனது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைக்கு அழைத்த விவகாரத்தை முன்னிலைப்படுத்தி நடத்தப்பட்ட போராட்டங்கள், 19ஆவது திருத்தச் சட்டத்தை விவாதிக்க முடியாத நிலைக்குக் கொண்டு சென்றது. எங்கே சந்தர்ப்பம் கிடைக்கும் என்று காத்திருந்த மஹிந்த ராஜபக்ஷ தரப்பு, இந்த விசாரணை விவகாரத்தை வைத்து, 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றவிடாமல் தடுத்து விட்டது.

முன்னதாக, 19 ஆவது திருத்தச்சட்டத்தை இரண்டு நாட்களும் விவாதித்து, வாக்கெடுப்பை பிற்போடுவது என்றும் குறுகிய காலத்துக்குள் 20 ஆவது திருத்தச் சட்டமூலமாக தேர்தல் முறை மாற்றத்தை கொண்டுவந்து நிறைவேற்றுவது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. அதன் பின்னரே நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

ஆனால், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கமைய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ செயற்படவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அவ்வாறு செயற்படவிடாமல் தடுத்திருப்பது மஹிந்த ராஜபக்ஷவின் நிழல்தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுமோ என்ற கவலை எதிர்க்கட்சிக்கு உள்ளது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியோ, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோ இப்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்படுவதை விரும்பவில்லை.

ஏனென்றால், இப்போதைய நிலையில் தேர்தல் நடந்தால், சுதந்திரக் கட்சி அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிச்சயமாக பிளவுபடும். மஹிந்த ராஜபக்ஷவின் பக்கத்தில் ஒரு தரப்பும், மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் இன்னொரு தரப்புமாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரிந்துபோய் நிற்கின்றனர். அதைவிட, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிட மஹிந்த ராஜபக்ஷவுக்கு இடமளிக்கப்படாது போனால், வேறொரு கட்சியின் மூலம்தான் அவர் போட்டியிட நேரிடும். அவ்வாறு போட்டியிட்டால், பிரதமர் பதவியைக் கைப்பற்ற முடியாது.

ஏனென்றால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் வாக்குகள் பிளவுபடும் நிலையில், தற் போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை யில் தேர்தல் நடத்தப்பட்டால், குறைந்தளவு ஆசனங்க ளையே அவரது அணியால் பெற முடியும். இதனால் தான், மீண்டும் தொகுதி வாரி தேர்தல் முறை [illegible] இணைந்த புதிய கலப்பு தேர்தல் முறை ஒன்றை அறிமுகப்படுத்தி விட்டு தேர்தலை நடத்தலாம் என்று எதிர்பார்க்கிறது சுதந்திரக் கட்சி - ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி கூட்டு.

19 ஆவது திருத்தச்சட்டத்துடன், தேர்தல் முறை மாற்றத்தையும் கொண்டு வந்தால் அதனை ஆதரிக்கத் தயார் என்று கூறியது எதிர்க்கட்சி. தேர்தல் முறை மாற்றத்துக்கு பொது இணக்கப்பாடு எட்டப்படாத நிலையிலும், அது குறித்து ஆராய போதிய கால அவகாசம் தேவைப்படுகின்ற நிலையிலும், 19 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றவிடாமல் தடுப்பது எதிர்க்கட்சியின் உத்தியாக உள்ளது.

19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டால், அது ஐ.தே.க. வுக்கு சாதகமாகவும் தமக்குப் பாதகமாகவும் அமைந்துவிடலாம் என்று எதிர்க்கட்சி கருதுகிறது.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை, தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட காலம் இருக்கின்ற நிலையில், அதுவரை இந்த அரசாங்கத்தை செயலற்ற நிலைக்குள் வைத்திருப்பதன் மூலம் நிறையவே சாதிக்கலாம் என்பதே மஹிந்த ராஜபக்ஷ தரப்பின் முக்கிய இலக்காக தெரிகிறது,

அதாவது இந்த அரசாங்கம், மூன்று மாத காலத்துக்குள் பல எதிர்பார்ப்புகளை நிறைவேற்றத் தவறியுள்ளது. சில பொருளாதாரச் சலுகைகள் மற்றும் ஜனநாயக சுதந்திரங்களை தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு அளித்திருந்தாலும் பிரதான வாக்குறுகளை நிறைவேற்றும் விடயத்தில் மக்களின் ஏமாற்றத்தையே சம்பாதித்துள்ளது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபோது இருந்த கவர்ச்சியை இப்போதே இழந்துவிட்டுள்ளது. இதே நிலை அடுத்த ஆண்டு வரை நீடித்தால். அரசாங்கத்துக்கு எதிரான அதிருப்தி அலை ஒன்று உருவாகும். முக்கியமாக, தற்போது திறைசேரியில் போதிய நிதி கையிருப்பில் இல்லை. இதற்கு மேலதிக நிதியை திரட்டுவதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சியையும், எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் தோற்கடித்துவிட்டது. இந்தநிலையில், தற்போதைய அரசாங்கத்தினால், நாட்டை சிறப்பாக கொண்டு நடத்த முடியாத நிலை ஒன்று விரைவில் உருவாகும்.

நாடு கிட்டத்தட்ட செயலற்ற நிலைக்குத் தள்ளப்படும் போது, மக்கள் தாமாகவே அரசாங்கத்தை எதிர்க்கத் தொடங்குவர். அத்தகையதொரு நிலை ஏற்படுவதை எதிர்க்கட்சி விரும்புகிறது. அதற்கு, அடுத்த ஆண்டு வரை பொறுத்திருக்க வேண்டும். அதற்கிடையில், மஹிந்த ராஜபக்ஷவும் தனது அரசியல் துறவறத்தை முடித்துக் கொண்டு திரும்ப முடியும். அப்போது, கடுமையானதொரு போட்டியைக் கொடுத்து ஆட்சியைப் பிடிக்கலாம் என்பதே, மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது. இந்த அரசாங்கத்தை விழவும் விடாமல், அதேவேளை, முன்நோக்கி நகரவும் விடாமல், முடக்கி வைத்திருப்பதுதான் இவர்களின் திட்டம். அந்த திட்டம் கிட்டத்தட்ட வெற்றிகரமாகவே முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

19ஆவது திருத்தச்சட்டம் மீதான விவாதம் பிற்போடப்பட்டது, நாடாளுமன்றம் வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது எல்லாமே அதனைத்தான் எடுத்துக் காட்டியுள்ளது. இந்த நிலையில், 19 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சி விடப் போவதில்லை என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றாகவே புரிந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த நிலையில், அவர்கள், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்தப் போகின்றரா அல்லது மீண்டும் எதிர்க்கட்சியின் தயவுக்காக அதன் பின்னால் இழுபடப் பார்க்கின்றனரா என்று தெரியவில்லை. தற்போதைய அரசாங்கம் என்னதான், எதிர்க்கட்சியின் காலில் விழுந்தாலும்கூட, தற்போதைய அரசாங்கத்தின் இலக்குகள் நிறைவேற்றப்படுவதை மஹிந்த ராஜபக்ஷவின் நிழல் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என்பதை மட்டும் உறுதியாக கூறிக் கொள்ள முடியும்.

-கே.சஞ்சயன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் விலகுமா...?



## சிறுகதை



வளரும் பயிராக இருக்கும் போது பச்சைக் கடல் போல் தெரிகின்ற வயல் வெளி, வெட்டு முடிந்துவிட்டதால், இப்போது காய்ந்து கருமை யடைந்து கரடுமுரடாகக் கிடக்கிறது. என் மனதும் அவ்வாறே.

வன்னியின் வயல் வெளியை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியில் நான் துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருக்கிறேன். பிற்பகலாகையால் வெயில் என் முகத்துக்கு நேரே ... கொளுத்துகிறது எனக்கு, அது சுடவில்லை ...

எனது எண்ணங்கள் தமிழ்நிலவனைச் சுற்றியே வலம் வந்துகொண்டிருந்தன. அது தான் என் நெஞ்சைச் சுடுகிறது.

தமிழ் நிலவன் கடந்த கிழமை முழுவதும் பள்ளிக்கூடம் வரவில்லை. வகுப்பு கலகலப் பாக இருக்கவில்லை. தமிழ் வகுப்பும் விவாதங் களும் உயிரற்று இருந்தன. அதிலும் என்ன ருகே உள்ள கதிரையில் அவன் இல்லாதிருந் தமை என் மனதில் வெறுமையைத் தோற்று வித்தது.

நான் அவனைப் பார்க்கத்தான் போய்க் கொண்டிருக்கிறேன்.

அவனது கிராமம்– பயிர்கள் செழித்து வளரும் செம்பாட்டுத்தரை(துறை) யாலானது. நான் அவனைக் கண்டேன் அவன் வீட்டிற் கருகில்தான் தோட்டத்தில்– அந்தச் செம்பாட்டுத் தறையில் யாருடனோ புகையிலைக் கன்று களை நட்டுக்கொண்டிருந்தான். என்றைக் குமே நான் பார்த்திராதவாறு அவனிடத்தில் ஒரு மாற்றம் தென்பட்டது. என்னைக் கவனித்த தாகத் தெரியவில்லை.

மிகவும் கஸ்டப்பட்டுத்தான் பள்ளிக்கூடத் துக்கு வந்தான் என்பதை அவன் அணியும் வெள்ளைச் சேட்டும் கிழிந்துபோன பழைய புத்தகப்பையும் காட்டும். தமிழ் வரலாற்றும் புத்தகம் வாங்காமைக்காக ஆசிரியர்களால் தண்டிக்கப்பட்டிருக்கிறான். எப்போதும் அமைதி யாகவே இருப்பான். ஒரு பழைய கறுத்த பாட்டா செருப்பு அவன் பாதங்களில் எப் போதும் இருக்கும். என்னோடு கதைக்கின்ற போது சொல்லவந்த விடயத்தை ஆணித்தரமா யும் நிதர்சனத்துடனும் கதைப்பான்.

“இளம்பிறை கொஞ்ச நேரம் இரு மச்சான் வந்திறன்” என்று சொல்லி ஒரு மணல்த்திட்டைக் காட்டிவிட்டு வேலையில் சுறுசுறுப்பாக இருந் தான்.

சூரியன் மரங்களை நோக்கி கீழ் இறங்கிக் கொண்டிருந்தது. சின்ன இளவல்கள் பக்கத்து வெட்டையில் *கிரிக்கெட்* விளையாடிக்கொண் டிருந்தார்கள். தமிழ்நிலவனுடைய செம்பாட்டுத் தறைக்கு பக்கத்து தறையில் சில பெண்கள் பாத்தி கட்டி வெங்காயம் நட்டுக் கொண் டிருந்தார்கள். தமிழ்நிலவன் தனது கூட்டாளி யுடன் தண்ணீர் இறைக்கும் இயந்திரத்துக்கு மண்ணெண்ணெய் விட்டுக்கொண்டிருந் தான்.

ஏதோ எதிர்பாராத நெருக்கடிதான் அவனை இந்த நிலைக்கு தள்ளியிருக்க வேண்டும். முன்பு சில தடவை வந்திருந்தபோது அவனை வீட்டிலோ காளிகோவிலிலோ சந்தித்திருக் கிறேன். அப்போதெல்லாம் வீட்டின் ஓரத்தில் ஆபிரகாம்லிங்கனின் வாழ்க்கை வரலாறு, சேகுவேராவின் வாழ்க்கை வரலாறு என வாழ்க்கை வராலாற்றுப் புத்தகங்களைப் வாசித்துக்கொண்டிருப்பான். ஆனால், இன்று பெரும் மாற்றம் தெரிந்தது. அவன் அதிகமாக வேலை செய்த தற்கு அறிகுறியாக முகம் கறுத்து வியர்த்திருந்தது. அவன் மடித்துக் கட்டியிருந்த சாரத்தில் செம்மண் அப்பியி ருந்தது. “மன்னிக்க வேணும் இளம்பிறை உன்னைத் தனியே விட்டதுக்கு.”

“சரி அதிலென்ன... ஏன் போன கிழமை முழுவதும் பள்ளிக்கூடம் வர வில்லை...?”

சிறிது நேரம் தயங்கியபடியே எனது முகத்தை உற்றுப்பார்த் தான்.

“இளம்பிறை ...இனி நான் பள்ளிக் கூடம் வரமாட்டேன் ...”

இப்படி அவன் சொல்லுவான் என்று நான் எதிர்பார்க்கேல்ல ...! காய்ச்சல் அல்லது ஏதே னும் சுக வீனத்தாலேதான் வராமல் இருந் தான் என்று நினைத்திருந்தேன். ஆனால் ...

“ஏன்ரா தமிழ்நிலவன் சோத னைக்கு இன்னும் ஐந்து மாதந்தான் இருக்கு ...அதுக் கிடையில பள்ளிக் கூடத்தை விடப்போறன் என் கிறாய்.”

“என்ன செய்யிறது மச்சான் அவ்வள வுக்கு வீட்டுப்பிரச்சினை அதிகரிச்சுவிட்டுது. உனக்குத் தெரி யும் இளம்பிறை, யுத்தம் எப்படி யெல்லாம் வன்னிமண் முழுமைக் கும் துவம்சம் செய்தது என்றதைப் பற்றி. எங்க அப்பா வையும் நாங்கள் அதுக்குள்ளதான் செல்லுக்கு இரை குடுத் தனாங்கள்.

அப்பா இருக்கிற போதில ஓரளவு போதிய தோட்ட நிலம் எங்களிட்ட இருந்தது. நாங்கள் முகாமில இருந்து வந்தபோது–அப்பாவும் இல்லைத் தானே எங்களுக்கு முதலிலேயே ஊருக்கு வந்த பக்கதுத் தறைக்காரர் எங்கடை தறையின்ர ஒரு பகுதி யையும் தங்கடை தறை யோட இணைச்சு எல்லையைப் போட்டிட் டினம். அம்மாவாலே அவையை எதிர்த்து எதுவும் செய்ய முடி யேல்ல.

அதன்பிறகு அம்மா வயல்வெட்டுக்கும் கிடுகு பின்னுறதுக்கும் போய்தான் எங்களைக் காப்பாற்ற முடிஞ்சுது. நான் எப்பவோ பள்ளிக் கூடத்தை விடத்தான் யோசிச்சனான் இளம் பிறை. ஆனால், அம்மாதான் நீ படி ...நான் உழைச்சுத் தருவன் என்டு வற்புறுத் தினா. அவவின்ர ஆசையைக் கலைக்கக் கூடாது என்டதுக்காகத் தாகத்தான் இவ்வளவு நாளும் படிச்சன். இனியும் ஏலாது இளம் பிறை. அம்மாவுக்கும் *ஹாட்* வருத்தம் ஒருக் கால் *ஹாட் அற்றாய்க்* வந்திடுத்து; யாழ்ப் பாணம் பெரியாஸ்பத்திரிக்கு *கிளினிக்* போய் வாறா ...இனியும் நான் அவாவை வருத்திப் படிச்ச னென்றால், அது உணர்ச்சியில்லாத முண்டம் செய்யிற வேலையாகத் தான் இருக்கும் ...”

பேசுவதை நிறுத்திவிட்டு தான் நட்ட புகை யிலை நாற்றைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

வண்ணத்துப்பூச்சிகள் அங்கும் இங்கும் பறந்துகொண்டிருந்தன. திடீரென்று அடித்த காற்றில் அவை திசை மாறிப் பறந்தன.

“தமிழ்நிலவன் இப்படியும் ஒரு கெட்ட காலம் உனக்கு ... ஏ.எல். சோதனைக்கு இன்னும் ஐந்தே மாதங்கள்தான் .... அதுவரை யும் படிப்பிக்க சொந்தக்காரர் யாரும் உதவி செய்ய மாட்டினமோ ...?”

அப்பா, எங்களை விட்டுப்போனபோது எங்களுக்கு ஊர் உலகம் தெரியாது. எங்கட பெரிய்ப்பா, பெரிய ஒரு ரியூட்டறி வைத்திருந் தார். ஓரளவு வருமானம் இருக்குத்தான். இருந்தாலும் எங்களுக்கு அவர் குறிப்பிடும் படியா எந்த உதவியும் செய்யேல்ல. அப் பான்ர காரியங்கள் நடந்தபோது இரண் டொரு நாள் அம்மாவுக்கு ஆறுதல் சொல்லு றதுக்கு அந்தக்குடும்பம் வந்து போச்சுது. அவ்வளவோட சரி. அதுக்குப் பிறகு எல்லாமே அம்மாதான். இனியும் நான் பெரியப்பாட்டை உதவி கேட்டு நின்றால், இவ்வளவு நாளும் தட்டந்தனியனா பாடுபட்டு எங்களை ஆளாக் கிவிட்ட எங்கடை அம்மாவின்ர புனிதமான உழைப்புக்குத் துரோகம் செய்யிறதா இருக் காதோ இளம்பிறை!

‘...உங்கள் இரண்டு பேருக்காகவும் தான் நான் இருக்கிறன் இல்லையெண்டால் பொலுபோ லைக் குடிச்சு எண்டைக்கோ செத்திருப்பன் எண்டு..’ அம்மா [illegible] சொல்லுவா ..

இப்போ அவனுடைய விழிகளிலிருந்து கண்ணீர்த் துளிகள் சிந்தி, அவன் கன்னங் களில் வழிந்தோடின.

சிறிது நேரம் மௌனமாய் இருந்துவிட்டு தொடர்ந்தான்.

“இண்டைக்கு வரைக்கும் அம்மா ஒரு குறையும் வைக்கேல்ல எங்களுக்கு. பகல் இலையென்றாலும் இரவில எங்களுக்குப் பிடிச்சமாதிரி சமையல் செய்துதருவா. தைப் பொங்கல், திபாவளிக்கு புது உடுப்பு எடுத்துத் தருவா.

இண்டைக்கும் எனக்கு நல்ல ஞாபகம் இருக்கு, நாங்கள் முகாமுக்குளேயிருந்து ஊருக்கு வந்த முதல் வருசம். அப்போ எனக்கு பதினொரு வயதுதான் இருக்கும் இளம்பிறை. ஒரு புதுவருசத்துக்கு –அம்மாவுக்கு இரண்டோ மூன்று நாட்களுக்கு முதலே சரியான நெஞ்சு நோ என்று வேலைக்குப் போகேல்ல. சாப் பாட்டிற்கே கஸ்டமாக இருந்தது. புது உடுப்பு வேற எப்படி எடுக்கிறது. அம்மா கண்ணீ ரோடை படுத்திருந்ததை நான் பார்த்தன்.

ஆனாலும் அவ அடுத்தநாள் படுத்திருக் கேல்ல. தன்ரை வருத்தத்தையும் பொருட்படுத் தாமல் வேலைக்குப் போயிற்றா.

அதுக்கடுத்த நாள் வருசம். விடிய நாங்கள் புது உடுப்போட நிண்டம். இது தான் எங்கட அம்மா ...! அவாவுன்ர பாசத்தை ... வார்த்தை யில சொல்ல முடியாது இளம்பிறை ...”

ஒருவாறு அழுகையை அடக்கிக் கண்களைத் துடைத்துக்கொண்டு அமைதியானான்.

நான் கேள்விப்படாத துன்பதுயரங்கள் அவன் வாழ்க்கையில புதைந்தருந்தன. என் னால் எதுவும் பேசமுடியவில்லை.

மேற்கே சூரியன் கருமுகில்களுக்குள் தன்னைப்புதைத்துக் கொண்டிருந்தான். அந்த நெருப்புத்தணல்போன்றவனின் பாதிக் கோளம் மட்டும் தெரிந்தது.

“இளம்பிறை நீ கேக்கலாம் இவ்வளவு நாளும் குடும்பக் கஸ்டம் உனக்குத் தெரி யேலயோ எண்டு. நான் எத்தனை முறை பள்ளிக்கூடத்தை விட எத்தனித்திருக்கிறன். ஆனால், அம்மா விடேல்ல. நான் ஒரு லோஞ்சு போட்டு, ரை கட்டி, உத்தியோகம் பாக்கோணும் எண்டு அவவுக்கு ஆசை.எங்கட தமிழ் *சேர்* தான் ‘உங்கட பொடியன் தமிழ்ப் பாடத்தில நல்ல கெட்டிக்காரன்; விளையாட்டிலயும் திறமையானவன். அவன வடிவாப் படிப் பிச்சியளெண்டால், ஒரு பெரியாளாய் வரு வான்’ எண்டு சொன்னாராம்.

நான் படிப்பை விடப்போறன் எண்டு சொன் னதும் அம்மா அழுவா... போன கிழமை முழுக்க செம்பாட்டுத் தறையில் நான் மண்ணைக் கொத்திக்கொண்டு நிக்கிறதைப் பார்த்துட்டு ஒரே அழுகைதான் ...”

இப்போ சூரியன் முழுவதுமாக அடிவானுக் குள் புதைந்துவிட்டான். இருள் நம்மையும் கௌவுகிறது ...

பறவைகள் தமது இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந்தன. விளையாடிய சிறுவர்கள் வீதியில் கூச்சல் கும்மாளத்துடன் வீடு திரும் பிக்கொண்டிருந்தனர் ...

தமிழ்நிலவனோ இருளில் எருக்கலைச் செடியின் கீழ் மெல்ல சரிந்துகொண்டே சொன் னான் ...

“அக்காவுக்கும் வயசு வந்திட்டு அம்மாவுக் கும் உடம்புக்கு முடியாது. இனி நான்தான் பார்த்துக்கொள்ளவேணும் ...

மிஞ்சியிருக்கிற எங்கட இந்தத் தோட்டத் தோட வேற தோட்டங்களையும் குத்தகைக்கு எடுத்தால்... அக்காவைக் கரை சேர்க்கிற தோட... அம்மாவின்ர மருத்துவத்தையும் பார்த்துக்கொள்ளலாம் ...

அவன் எழுந்து அமர்ந்து கொண்டான் ... நான் அவனது கரங்களை இறுகப்பற்றியிருந் தேன். அவனது குரல் தழுதழுத்தது,... விரல் கள் நடுங்குவதை என்னால் உணர முடிந் தது.

அவன் எவ்வளவு வலியைப் பொறுத்துக் கொண்டு எதுவும் நடந்துவிடவில்லையென் பதுபோல் இயல்பாக இருக்க முனைகிறான்.

ஓரிரு நட்சத்திரங்கள் வானில் தென்படத் தொடங்கின. நான் வந்த வழியே திரும்பிக் கொண்டிருந்தேன்.

அவனை தொடர்ந்து படிக்கவைக்க ஏதா வது செய்யவேணும்போலிருந்தது. ஆனால், என்னால் எதுவும் முடியவில்லையே என்று எண்ணும்போது ... துன்பத்தால் என் தொண்டை அடைக்கிறது. கைகால்கள் சோர்கின்றன ... சைக்கிளையோட்ட முடியவில்லை. அது தட்டுத் தடுமாறிச் செல்கிறது ...

வீதியில் யாருமில்லை. சைக்கிளை நிறுத்தி இறங்கிக்கொண்டேன். என்னையும் மீறி அழுகை வெடிக்கிறது ... ஆ ... தமிழ்நிலவா ... எப்படியாவது பள்ளிக்கூடம் வாடா ...! எப்படி யாவது வாடா ... உன்ரை எதிர்காலம் மண் ணாகுதடா ...! வாடா ... என்று என்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சத்தமாக வாய்விட்டுக் கதறினேன் ...

இருளுக்குள் என் கதறல் ...

வெற்று வெளிக்குள் என் கதறல் ...

இளைய சமுதாயத்தின் எதிர்காலம் ... யாரும் அக்கறைப்பட மாட்டார்களா ...!


மீண்டும் சைக்கிளில் ஏறுகிறேன் ஒரு சிறு ஒளிக்கீற்றைத் தேடி ...!

ஆ. முல்லை திவ்யன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறு முகங்கள் (மறைமுகங்கள்)



எம்மை நாம் ஒரு முறை திரும்பிப் பார்ப்போமா?

கண்களை மூடிக்கொண்டு சில நிமிடங்கள் எம்மைப்பற்றி யோசிப்போமா?

தெய்வ தரிசனத்திற்காக கோயிலுக்குச் செல்லும் நாம், அங்கு வாசலில் இருக்கும் பிச்சைக்காரர்களுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கமாட்டோம். ஆனால், ஐந்நூறையோ ஆயிரத்தையோ மடியில் வைத்திருப்போம் அநாவசியமான பல பொருட்களை வாங்குவதற்காக. தூணிலும் துரும்பிலும் மட்டுமல்ல பசியினால் வயிறு புகைந்து, உடல் நலிந்து, முகம்வாடி உட்கார்ந்திருக்கும் ஒரு ஏழை சிரிக்க முடிந்தால் அவனது/அவளது சிரிப்பிலும் இறைவனைக் காணலாம் என்பதை நாம் மறந்துவிடுகிறோம்.

கோவில் கட்டுகிறோம் என்ற பெயரில் புலம் பெயர் மக்களது பணத்தைச் சுருட்டுவது, இந்த வர்த்தகத்துக்காகவே குலத்துக்கொரு கோவில் கட்டி ஊரைப்பிரிப்பது. இவைதான் இப்பொழுது எங்களது புதிய வர்த்தகம். சமூகத்தை ஒன்றிணைப்பது இன்றைய காலத்தில் கோயில் மட்டுமே என்றுதான் நினைத்திருந் தோம். அதையும் விட்டு வைத்த பாடில்லை.

திருவிழாக்காலம் என்றால் நான்கு திசைகளிலும் மட்டுமல்ல வீதி நீளத்துக்கு ஒலிபெருக்கிகளைக் கட்டி பகலிரவாக பாடவிட்டு பரீட் சைக்குத் தயாராகும் மாணவர்களைப் பைத்தியம் பிடிக்க, வைப்போம்.

இரண்டு சிற்றூர்திகளில் ஏற்றக் கூடிய பயணிகளை ஒரு சிற்றூர்தியில் ஏற்றி அடுக்கும் பக்குவம் எங்கள் ஊர் வாகன நடத்துனர் களுக்குத்தான் தெரியும். இதனால் பயணிகள் அடையும் அசௌகரியங்களைப் பற்றியெல்லாம் நாம் யோசிக்க மாட்டோம். எமது பணம் பண்ணும் குறிக்கோள் மட்டும்தான் எம்மிடம் இருக்கும்.

எங்கள் இ. போ. ச. சாரதிகள், சிற்றூர்திச் சாரதிகள் ஒருவருக் கொருவர் சளைத்தவர்களல்லர். போட்டி என்று வந்துவிட்டால் நாங்கள் சிங்கம்ல்ல. சுனில் நரே னுக்கே நாங்கள் தான் ட்றைவிங் பழக்கினதே நாங்கள்தான். எங்க ளுக்கு ஒருத்தரும் ட்றைவிங் பழக்கத் தேவையில்லை. உள்ளேயிருக்கும் பயணிகளைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம்.

பேருந்தில் பயணம் செய்யும் போது யாரும் முதியவர்கள் எங்கள் ஆசனத்திற்கு அருகில் வந்து நின்றால், எழுந்து அவர்களுக்கு இடம் கொடுக்க மாட்டோம். கண்ணை மூடிக்கொண்டு நித்திரைபோல் நடிப்போம்.

செல்லப்பிராணியான நாய்களை கட்டிவைக்க மாட்டோம். அது எங்களிடம் ஏதோ தேவை கருதி வருபவர்களைக் கடித்தபிறகும் அதற்கு நாங்கள் தனியார் வைத்தியர் மூலம் ஊசி போட்டிருக்கிறோம் என்று சொல்வோம். ஆனால் அதற்கான சான்றிதழைக் காட்டமாட்டோம். வளர்ப்பு நாயை வீட்டுவளவிற்குள்ளேயே கட்டி வளர்த்து அவற்றின் மலங்களை கிடங்கில் புதைக்க மாட்டோம். வெளியே வீதிக்குத் துரத்தி அங்கே மலங்களிக்க விடுவோம். சீ..சீ...வீதி களில் பாதசாரிகள் படும் அசௌ கரியங்கள் சொல்லவா வேண்டும்!

வைத்தியசாலைக்குச் சென்றால் நாங்கள்தான் முதலில் வைத்தியரிடம் காட்ட வேண்டும் என்று நினைப்போம். அங்கு வந்திருக்கும் ஏனைய நோயாளிகள் எல்லாம் வைத்தியரை நலம் விசாரிக்க வந்திருக்கிறார்கள்; நாம் மட்டும்தான் வைத்தியரிடம் நோய்க்கு மருந்தெடுக்க வந்திருக்கி றோமா?

அலுவலகங்களில் பொதுமக்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வந்தால், விரைவில் அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து பதிலளிக்காமல் காத்திருக்கவைப்போம். எமது சொந்த வேலைகளான பத்திரிகை பார்த்தல், முகநூல் வாசித்தல், தொலைபேசியில் உரை யாடல் போன்றவற்றை முதலில் கவனிப்போம். பொதுமக்களின் பணத்தின் மூலமாகத்தான் அரசாங்கம் எமக்கு சம்பளப்பணத்தைத் தருகின்றது என்பதை நினைத்துப் பார்ப்பதேயில்லை.

அரசாங்கப் பணத்தில் மக்களுக்கு ஏதாவது உதவித்திட்டம் வழங்குவதென்றால், நாங்கள் எங்கள் சொந்தப் பணத்தில்தான் இதைெல்லாம் செய்கிறோம் என்பதைப் போன்று பயனாளிகளுடன் நடந்துகொள்வோம். அது மட்டுமல்ல பத்திரிகைகளில் எல்லாம் புகைப்படம் பிரசுரித்து விளம்பரம் தேடுவோம் இல்லையா?

இவையெல்லாம் அரசியலில் நம்மைத் தக்கவைத்துக்கொள்ளத்தானே.

மிஞ்சிப்போனால் *அரசியலில் இதெல்லாம் சாதாரணமப்பா* என்று முடித்துக்கொள்வோம்.

வெளிநாடுகளில் எமது உறவுகள் சில நாடுகளில் குளிராலும் சில நாடுகளில் வெயிலாலும் மட்டுமல்ல இரவு பகல் தொடர்ச்சியாக வேலையில் ஈடுபடுதல், தாய்நாடு, வீட்டினைப் பிரிந்து மன அவஸ்தைக் குள்ளாகுதல் என்று, எண்ணற்ற கஸ்டங்களுடன் பணம் அனுப்பினால், நாம் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படமாட்டோம்.

நிலத்தில் வீழ்ந்தால் தூக்கி நிறுத்துவதற்கு இயலாமையாக உள்ள அளவுகளான பெரிய, பெரிய மோட்டார் சைக்கிள்கள் எல்லாம் வாங்கி, மது போதையில் அவ் வாகனங்களை செலுத்தி விபத்துக் குள்ளாவதுடன் சிவனே என்று வீதி யில் தன்பாட்டில் செல்பவர்களையும் இடித்து விபத்துக் குள்ளாக்குவோம்.

வீதிகளிலுள்ள மைல் கற்களின் மீது அவற்றை மறைத்து விளம்பரங்களையும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களையும்ஒட்டுவோம். இதனால் வெளியூரிலிருந்து வரும் ஒருவர் தான் போகவேண்டிய இடத்தின் திசை, தூரம் என்பவற்றைதெரிந்து கொள்ள முடியாது அவஸ்த்தைப் படுவதெல்லாம் எமக்கு தெரியாது. மற்றும் விளம்பரம் ஒட்டாதீர்கள் என்று எழுதப்பட்ட இடத்திலேயே பிரசுரங்களை ஒட்டும் கைங்கரியம் எம்மால் மட்டும் தான் முடியும்- *நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன,* என்ற சின்னக்கலைவாணர் விவேக்கின் *காமடி* ஞாபகத்துக்கு வரவில்லையா?

மரங்கள் மனிதர்களிற்கு இறை வன் தந்த வரங்கள், என்பதை மறந்து மூட நம்பிக்கையினால் ஒவ்வொரு காரணங்கள் கூறி, வீட்டு வாசலில் உள்ள மரங்களை தறித்து விடுவோம்.

விஞ்ஞானம் எவ்வளவு முன்னேறினாலும் நாங்கள் எங்கள் மூட நம்பிக்கைகளை விடவே மாட்டோம்.

அரச நிறுவனங்கள் ஊடாக மர நடுகைத் திட்டங்களை பொது மக்களுக்கு நிழல் மரங்கள், பயன்தரு மரங்கள் என்று பெரும் எடுப்பில் வழங்குவோம். ஆனால், எங்கள் அலுவலகங்களில் அவற்றில் ஒருசில நிழல் மரங்களையாவது நாட்டி வளர்க்கமாட் டோம். பொதுமக்களுக்கு மரங்களை வழங்குவதற்கு முன்னர், நாம் முன் மாதிரியாக நடந்துகொள்ள வேண்டாமா?

மின்சாரக் கம்பிகளிற்கு மரங்களின் கிளைகள் சென்றால், மின் கம்பிகளுக்குச் செல்லும் கிளைகளை மட்டும் அப்பப்ப வெட்டி விடுவோம் என்று கருதுவதில்லை. அடியோடு மரத்தைச் சாய்த்து விடுவோம். இவ்வாறு பொறுப்பில்லாமல் நடந்து, எமது பிள்ளைகளின் எதிர்காலத்தின் மீது நாமே மண்ணை வாரியிறைக்கும் கைங்கரியத்தைச் செய்வோம்.

எங்கள் பெற்றோர்கள் உயிருடன் இருக்கும்போது அவர்களைக் கவனிக்கமாட்டோம். முதியோர் இல்லங்களில் சேர்த்துவிட்டு நாங்கள் ஜாலியாகி விடுவோம். முதியோர் இல்லங்களில் இருந்துகொண்டு அவர்கள், பிள்ளைகளினதும் பேரப்பிள்ளைகளினதும் நண்பர்களினதும் உறவுக்காய் ஏங்கு வது எமக்குப் புரிவதேயில்லை.

ஆனால், அவர்களின் மரணச் சடங்கை ஊரே பார்க்கும் வண்ணம் இலட்சங்கள் செலவழித்து பகட்டாக நடத்தி முடிப்போம்.

மனிதனுக்கு இருக்கும் தெய்வ நம்பிக்கையை, மூடநம்பிக்கையைப் பயன்படுத்தி, தேசிக்காய் உருட்டுவது, பாக்கு உருட்டுவது என்று மற்றவரை முட்டாளாக்கி பணம் சம்பாதித்து விடுவோம். மனசு உறுத்தினால், இது எங்களின் தவறல்ல, ஏமாறுபவன் தவறு என்று சமாதானப்பட்டுக் கொள்வோம் இல்லையா?

இப்படியே நாம் ஒவ்வொருவரும் எமக்குள்ளே பலகுணங்களையும் பல முகங்களையும் வைத்துக்கொண்டிருக்கின்றோம். எமது இந்த மறைக்கப்பட்ட உண்மை முகங்களும் நாம் நித்தம் காட்டிக்கொண்டிருக்கும் பொய் முகமும், என்றைக்கு ஒன்றாகிறதோ அன்றைக்கு நாமும் இவ்வுலகின் சில மகான் களைப்போல உண்மை மனிதர்களாகி விடுவோம்.

பகீன்,
சிவன் வீதி, பருத்தித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

பாடல்: தமிழுக்கும் அமுதென்று பேர்
திரைப்படம்: பஞ்சவர்ணக் கிளி
பாடியவர்: பி.சுசிலா
இசை: எம்.எஸ். விஸ்வநாதன் - டி.கே. ராமமூர்த்தி
வரிகள்: பாரதிதாசன்



தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்!

தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர்!

இன்பத் தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!

தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்
ஆஆஆஆஆஆஆஆஆஆஆஆ

தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்
சுடர்தந்த தேன்

தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்! - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்
வயிரத்தின் வாள்
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ

தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்
இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ
தமிழுக்கும் அமுதென்று பேர்
அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கு நேர் உயிருக்கு நேர்

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**


ஆர். செந்திலன், பலின்- வவுனிக்குளம் மணிமாறன், அருள்செல்வம், நந்தன், நகுலன், பிரியதாஸ்- நட்டான்கண்டல், ஜோகநாதன் புவிதாஸ், எஸ்.சஜிதன், இடைக்குறிச்சி, எஸ்.கரன் அம்மா, ஆதி- காட்டுப்புலம்,கரவெட்டி, இராமதாஸ்-கணேசபுரம், வவுனியா, நிறோசன், நிலக்சன்- ஆவரங்கால், புத்தூர்.

அன்பு வாசகர்களே !

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு, தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற்பந்தியுடன் அப்பாடலை யாருக்காக விரும்பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு, உங்கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர், காலத்தால் அழியாத கானங்கள், வலம்புரி - சங்குநாதம், இல.3. 2 ஆம் ஒழுங்கை, பிறவுண வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவை ங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

## ரகசிய மொழியில் பேசும் மீன்கள்



ஆறறிவு படைத்த மனிதர்களை தவிர உலகில் வாழும் வேறுபல ஜீவராசிகள் தங்களுக்குள் தகவல்களை பரிமாறிக்கொள்ளும் திறன் படைத்தவை என பல வருடங்களுக்கு முன் ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் முதன்முறையாக மீன்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் திறமை பெற்றுள்ளன என விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மிகவும் ஆழமான பகுதியில் தண்ணீருக்கு அடியில் நிசப்தமான இடத்தில் மற்றொரு உலகம் செயற்பட்டுக் கொண்டிருப்பது இதன்மூலம் தெரியவந்துள்ளது.

ஆண்மீன், பெண் மீனுடன் மிகவும் இனிமை யான சப்தம் மூலம் தகவல்களைப் பரிமாறிக் கொள்கின்றன. ஆபத்துக் குறித்து பிறருக்கு எச்சரிப்பது, வழிகாட்டுவது என மீன்கள் பல்வேறு தகவல் பரிமாற்றங்களை மேற்கொண்டு வருவது தெரிய வந்துள்ளது. மீன்களில் உரையாடல்களை இடைமறித்துக் கேட்கும் போது அதன் எதிரிகள், அவற்றை இரையாக்கி கொள்வதாக இந்த ஆராய்ச்சிக்கு தலைமை வகித்த ஆக்லாந்து பல்கலைக்கழக பேராசிரியர் ஷாகிரிமேன் தெரிவித்துள்ளார்.

அனைத்து மீன்களும் பேசும் திறன் படைத்தவை. ஆனால் அனைத்து மீன்களாலும் சப்தம் எழுப்ப முடியாது. எனினும் நீந்த உதவும் செதில்களில் அதிர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் சப்தத்தை எழுப்புகின்றன. தசைகள் மூலம் மீன்கள் அந்த அதிர்வுகளை உணர்ந்து கொள்கின்றன என ஷாகிரி மேன் தெரிவித்துள்ளார். இது குறித்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் போது கிடைத்த தகவல்களை அவர் வெலிங்டனில் நடை பெற்ற விஞ்ஞானிகள் மாநாட்டில் சமர்ப்பித்திருந்தார்.

ஆராய்ச்சியின் போது பதிவு செய்யப்பட்ட ஒலி, மீன்கள் எழுப்பிய சப்தம் தான் என்பதை 99 சதவிகிதம் உறுதிப்படுத்தினார். அந்த சப்தங்களுக்கு அர்த்தம் என்ன? என்பதனை கண்டுபிடிக்க விரும்பினோம். ஜோடியை கவர்வதற்கும் எதிரிகளை அச்சுறுத்துவதற்கும் பவளப் பாறைகளை சுற்றி ஒன்றுகூடுவதற்கும் மீன்கள் சப்தத்தை வெளியிடுவது கண்டுபிடிக்கப்பட்டது என ஷாகிரிமேன் தெரிவித்திருந்தார். இந்த சோதனைக்காக ஆராய்ச்சி கூடத்தில் வைக்கப்பட்ட தொட்டிகளில் மீன்களைவிட்டு அந்த சூழ்நிலையை பழகிக் கொள்வதற்காக சிலகால அவகாசம் அளிக்கப்பட்டு அதன் பின்னர் மீன்களின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கப்பட்டது.

தண்ணீருக்கு அடியில் மைக்ரோபோன் மற்றும் தண்ணீரின் இயக்கத்தை கண்டறியும் சாதனங்களும் பொருத்தப்பட்டிருந்தனவாம். அதில் குர்நார்டு என்ற மீன் அதிக அளவு பேசுவதும் பல்வேறு விதமான உருமல்களை வெளியிடுவதும் ஒரே திசையில் பயணம் செய்வதும் தெரியவந்தது. இதன்மூலம் சப்தத்தை ஒருவிதமான செயற்பாட்டிற்கு மீன்கள் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது. ஆண் மற்றும் பெண் மீன்கள் ஒரே நேரத்தில கருத்தரிப்பதற்காக தங்களுடைய முட்டைகளை வெளியிடுவது தெரிய வந்தது. இதற்கு ஒரு விதமான ஒலியை மீன்கள் எழுப்புகின்றன. அதே நேரத்தில் தங்கமீன் நன்றாக கேட்கும் திறன் பெற்றுள்ளபோதும் அது எவ்விதமான சப்தத்தையும் எழுப்புவதில்லை என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

**வி.பிரணவன்**

## ஈழத்து கவிதைகள்

கவிஞர் மு.பொன்னம்பலம்

## உடைந்த வாவியும் பிரிந்த கிளையும்

மலைகள் சூடிய பள்ளத்தாக்கில்
ஓர் இருண்ட வாவி படர்ந்து கிடந்தது
மலைநிழல் விழுத்திய இருண்மையில் மூழ்கி
இதிகாச கால கனவு மடிப்புக்கள்
அலைகளில் அவிழக் கிடந்தது வாவி.

கிடந்த வாவியின் கட்டைத் தகர்த்து
ஓர் கிளை பிரிந்து தனி வழி சென்றது
இப்போ அதுவோர் உடைந்த வாவி
வாவி உடைந்து அரைஞாண் கொடியென
தவழுமக் கிளையின்
மெலிந்த நிலையிலும் அழகு நெளிந்தது.

பிரிந்து செல்லும் கிளையைப் பார்த்து
மலைகள் பொருமின
என்ன துணிச்சல் எமதரண் கடந்து
செல்லுமச் சிறுக்கியை
கொல்லுங்கள் கொல்லுங்கள்!
கூக்குரல் இட்ட மலைகளின் குரல்கள்
கீழே இருந்து குளிரில் உறைந்து
தூங்கிய ஏவல் பறைகள் உணர்வை
உசுப்பின உடனே

பாறைகள் உருண்டன
பாறைகள் உருண்டன
உணர்வின் உந்தலில் பாறைகள் உருண்டன
காலங்காலமாக இருண்மைக் குகையில்
புகைந்து கொண்டிருந்த
வன்மத்தீயே அவைக்கு வெளிச்சமாய் தெரிந்தன.

பாறைகள் உருள
மெல்ல நெளிந்த அப்பச்சிளங் கிளையின்
மண்டை தகர்ந்தது
உடல் பிய்ந்தது
காலும் கையும் துண்டாடப்பட்டு துவண்டன
தூக்கி எறியப்பட்ட அவயவங்கள்
பாறையில் சிக்கி இரத்தம் கொட்டின
மெல்லப் புனலெறிந்த விடுதலை ஓட்டம்
குருதியில் குளித்தது
குற்றுயிர் முனகல்கள் கால
வெளியைக் குடைந்து குடைந்து

நீதிக் கழைத்தன
தூர இருந்து பார்த்திருந்த மலைகள்
தமக்குள் கொடுப்புள் நமட்டுச் சிரிப்பில்!
பிரிந்த கிளையில் வாழ்ந்த மீனினம்
ஓவென அலறி மேலெழுந்தெழுந்து
துடித்து வீழ்ந்தன
துயரில் மூழ்கிய அவற்றின் முனகலை
சூழ்ந்திருந்த மலையின் சுவர்கள் அதிர
காற்றெடுத்தறைந்தது.
மெல்ல நடந்த கிளையின் படுகை
செங்கம்பள விரிப்பாய் சிவந்து படர்ந்தது
அச் செங்கம்பள விரிப்பில் அதன்
விடுதலைக் காதலன்
விரைந்து வரும் கால ஓசை அதிர்வுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி



# காஞ்சனா 2

## திரைவிமர்சனம்



பில்லி, சூனியம், பேய்க் கதைகள் மீது தமிழர்களுக்கு நம்பிக்கையையும், நம்பிக்கையில்லாதவர்களுக்கு உள்ள ஈர்ப்பையும் மூலதனமாக்குவதில் ராகவா லாரன்ஸு க்கு இணையில்லை. ஒரே மாதிரி கதைகள், திரைக்கதையமைப்பு, கிட்டத்தட்ட காட்சிகளும் அப்படியே தான்.. ஆனால் கடைசி காட்சி வரை சீட்டில் உட்கார வைத்து விடுகிறார் லாரன்ஸ். அதுதான் அவரது வெற்றி.

பேயென்றாலே வழக்கம்போல பயந்து நடுங்கும் ராகவாவுக்கு, ஒரு சேனலில் வேலைப் பார்க்கும் டாப்சி மீது ஒருதலையாய் காதல். அந்த டிவி சேனலின் டிஆர்பி ரேட்டிங்கை உயர்த்த, பேய் இருக்கா இல்லையா என்ற ரியாலிட்டி ஷோவைப் படமாக்க மாமல்லபுரம் கடற்கரைச் சாலை பங்களாவுக்குப் போகிறது டாப்சி, ராகவா குழு. பேயாக ஒருவரை செட்டப் செய்யும்போது, நிஜப் பேயே வந்துவிடுகிறது. அந்தப் பேய் டாப்ஸியின் உடம்பில் முழுமையாக இறங்கிவிடுகிறது.

அப்படியே அவரைக் காதலிக்கும் ராகவா உடம்பில் இன்னொரு பேய். இவர்களிடம் மாட்டிக் கொண்டு படாத பாடு படும் கோவை சரளா, இருவரையும் ஒரு சர்ச்சுக்கு அழைத்துப் போய் பேய் ஓட்ட ஏற்பாடு செய்கிறார். சர்ச் பாதிரியார்கள் பேயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்போது, அந்தப் பேய்களின் ப்ளாஷ்பேக் விரிகிறது.

அதில் ஒன்றல்ல, 5 பேர் அநியாயமாகக் கொல்லப்பட்ட கதை தெரிகிறது. அவர்களைக் கொடூரமாகக் கொன்றவர்களை பழிவாங்கவே இப்போது ராகவா, டாப்ஸி உடம்புக்குள் பேய்கள் வந்திருப்பதாகவும், அதற்கு பாதிரியார் அனுமதிக்க வேண்டும் என்றும் பேய்கள் கெஞ்ச, கருணையோடு பழிவாங்க அனுமதிக்கிறார் பாதிரியார். மீதியை உங்களால் யூகிக்க முடிகிறதல்லவா...

காஞ்சனாவோடு ஒப்பிடுகையில், அதன் அடுத்த பாகமான இந்தப் படத்தில் விறுவிறுப்பு, திடுக்கிடல்கள் கொஞ்சம் குறைவுதான். காரணம் எல்லாமே கொஞ்சம் ஓவர் டோஸ். பேய்க் காட்சிகளும்தான். முதல் பாதியில் தன் தாயாரை வாடி போடி என்றழைப்பதெல்லாம் ரொம்பவே நெளிய வைக்கிறது.

பாத் ரூமுக்கு வாட்ச்மேன் வைத்த வரை ஓகே.. ஆனால் ராகவா, மயில்சாமி, மனோபாலா, சாம்ஸ் காட்சி...பேமிலி ஆடியன்ஸை மட்டுமே குறிவைக்கும் ராகவாவிடம் இதை எதிர்ப்பார்க்கவில்லை! இடைவேளை வரை காட்சிக்குக் காட்சி, திகிலும் பகீர் சிரிப்பும் கலந்துகட்டி அடிக்கின்றன.

ராகவா லாரன்ஸ் தன் மொத்த வித்தையையும் ஒரு நடிகராக இந்தப் படத்தில் காட்டியிருக்கிறார். போட்ட அத்தனை கெட்டப்புகளுக்கும் கச்சிதமாகப் பொருந்துகிறார் மனிதர். அந்த பாட்டி வேடம் செம்ம. இடைவேளைக்குப் பிறகு வரும் மொட்டை சிவா கலக்கல் என்றால், ஒரே காட்சியாக இருந்தாலும் அந்த திருநங்கையாக வரும் லாரன்ஸ்.. கறுப்பழகு! டாப்சிக்கு இந்தப் படத்தில்தான் நடிக்க ஸ்கோப். சரியாகப் பயன்படுத்தியிருக்கிறார்.

பின்பாதியில் மாற்றுத் திறனாளியாக வந்து மனதை அள்ளுகிறார் நித்யா மேனன். கோவை சரளா வெளுத்து வாங்கியுள்ளார் இந்தப் படத்திலும். அதேநேரம் காமெடி என்ற பெயரில் இவரை அந்த அடி அடிப்பதைத்தான் ஏற்க முடியவில்லை. காஞ்சனாவில் இருந்த பலரும் இந்தப் படத்திலும் வேறு வேறு வேடங்களில் தொடர்கிறார்கள்.

அந்தப் படத்தில் காமெடியில் கலக்கிய தேவதர்ஷினி மட்டும் ஏனோ இடம்பெறவில்லை. ராஜவேல் ஒளிவீரனின் ஒளிப்பதிவு படத்துக்கு பெரும் பலம். அந்த கடற்கரை சாலைக் காட்சிகள் மிரட்டல். நான்கு இசையமைப்பாளர்கள். ஆனால் பாடல்கள் எதுவும் மனதில் ஒட்டவில்லை. ஆனால் எஸ்எஸ் தமனின் பின்னணி இசை கச்சிதமாக பொருந்தியிருக்கிறது படத்துக்கு.

ராகவாவுக்கு மக்கள் ரசனை புரிந்திருக்கிறது. அதற்காக மூன்று பாகங்களிலும் ஒரே மாதிரி கதைகளையா காட்டிக் கொண்டிருப்பது..? காஞ்சனாவில் வைத்திருந்த ப்ளாஷ்பேக் மாதிரி இந்தப் படத்தில் அழுத்தமான பின்னணி இல்லாததுதான், இரண்டாம் பாதியை கொஞ்சம் டல்லடிக்க வைக்கிறது. மற்றபடி கோடையில் குடும்பத்தோடு ரசிக்கக் கூடிய படம்தான் இது. அடுத்து முனி 4 என தொடரும் போட்டிருக்கிறார். அதில் முற்றிலும் வித்தியாசமான காஞ்சனாவுக்காக காத்திருக்கிறோம் ராகவா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிரச்சினை முடிந்தது அதே கம்பனியின் படத்தில் ஒரு பாடலுக்கு ஸ்ருதிஹாசன் நடனம்

பிவிபி நிறுவனம் தயாரிக்கும் படத்தில் கார்த்திக்கு ஜோடியாக ஸ்ருதிஹாசன் நடிக்க ஒப்பந்தமாகி திடீரென விலகினார்.

இதனால் பிவிபி நிறுவனம் ஸ்ருதிஹாசன் எந்த படத்திலும் நடிக்கக்கூடாது என வழக்கு தொடர்ந்தது. பின்னர் படத்தில் இருந்து விலகியதற்கு ஸ்ருதிஹாசன் காரணம் கூறி மனு ஒன்றை அளிக்க பட நிறுவனமும் ஸ்ருதிஹாசனும் சமரசம் பேசி வழக்கை வாபஸ் பெற்றனர்.

தற்போது பிவிபி நிறுவனம் தயாரித்து வரும் மற்றொரு படமான 'இஞ்சி இடுப்பழகி' படத்தில் ஸ்ருதிஹாசன் ஒரு பாடலுக்கு நடனம் ஆட இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆர்யா, அனுஷ்கா ஜோடியாக நடிக்கும் இப்படத்தை கே.எஸ்.பிரகாஷ் இயக்கிவருகிறார்.

இப்படத்தில் முக்கியத்துவம் வாய்ந்த பாடல் ஒன்று இருக்கிறதாம். இந்த பாடலுக்கு ஒரு முன்னணி நடிகையை ஆட வைக்க முயற்சி நடந்தது.

தற்போது ஸ்ருதிஹாசனே இந்த பாடலுக்கு நடனம் ஆட இருப்பதாக கூறப்படுகிறது.

பிரச்சினை ஏற்பட்ட நிறுவனத்துடனே மீண்டும் சமரசம் ஆகி ஒரு பாடலுக்கு நடனம் ஆட ஒப்பந்தமாகியிருப்பது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.



## சச்சின் பொண்ணு நடிக்க வருகிறார்..?



கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரின் மகள் சாரா பாலிவுட் சினிமாவில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தற்போது 18 வயதாகும் சாரா நடிக்கவுள்ள பாலிவுட் படத்தில், சாகித் கபூர் ஜோடியாக நடிக்க போகிறார்.

திருபாய் அம்பானி சர்வதேச பள்ளியில் படித்து வரும் சாரா, சினிமாவில் நடிக்க சச்சின் பச்சைக் கொடி காட்டி விட்டதாகவும் கூறப்படுகிறது.

பல கிரிக்கெட் போட்டிகளின் போது சாராவை சச்சினுடன் பார்க்க முடியும். சச்சின் ஓய்வு பெற்ற பிறகுதான் சாராவை அவ்வளவாக கிரிக்கெட் மைதானங்களில் காண முடிவதில்லை.
சுமார் 5'2" இஞ்ச் உயரமுள்ள சாரா பாலிவுட் படங்களை விரும்பி பார்ப்பவரும் கூட. தற்போது படிப்பில் கவனம் செலுத்தி வரும் சாரா, பாலிவுட்டில் கால் பதித்தால் நிச்சயம் வெற்றிகரமான நடிகையாக வலம் வருவார் என்று எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

சச்சின் - அஞ்சலி தம்பதியினரின் மூத்த மகள் சாரா. கடந்த 1997ஆம் ஆண்டு பிறந்த அவருக்கு, அர்ஜுன் என்ற சகோதரனும் உள்ளார்.

தந்தையை போல சாரா அமைதியான ஆள் கிடையாது. துறுதுறுவென வலம் வருபவர். எல்லோரிடமும் சகஜமாக பழகுபவர்.


ஒரு முறை "டெல்லி பெல்லி" என்ற சினிமாவை பார்க்க சாரா மற்றும் அஞ்சலிக்கு நடிகர் அமீர் கான் அழைப்பு விடுத்திருந்தார். அப்படிதான் சாராவுக்கு சினிமா ஆசை வந்திருக்கும் என்று கூறப்படுகிறது.

# சுடுவதும் சும்மாவா...!

நகைச் சுவைகள் வெறுமனவே திரைப் படங்களில் மட்டும் வருபவையல்ல. அவை நம் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்ட ஒன்று. இலங்கை அரசியலிலும் நகைச் சுவைக்குப் பஞ்சமில்லை.

மக்களுக்கு தேர்தல் காலத்தில் அள்ளி விடும் வாக்குறுதிகளைத்தான் வெற்றியின் பின் நகைச்சுவையாக மாற்றிவிடுகின்றனர் என்றால் பிறரின் உயிரைப் பறிப்பதிலும் நகைச் சுவையை கொண்டுவந்து செருகிவிட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றனர். (எல்லை தாண்டும் இந்திய மீனவர்கள் சுடப்படுவர் என்ற ரணிலின் கூற்று நகைச் சுவைக்காச் சொல்லப்பட்டது என்று சந்திரிகா அம்மையார் தெரிவித்திருந்தார்)

இது எப்படியிருக்கிறது என்றால் பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்கு சீவன் போகிறது என்பதற்கு ஒப்பானதாகவு ள்ளது.





இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை, இனப்பிரச்சினை போன்று தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கையினைக்கூட எட்டிப் பார்க்காத தூரத்தில் உள்ளது. இதை இலங்கை - இந்திய அரசாங்கங்கள் நன்கு அறிந்திருந்தும் தீர்வுகாண் பதில் ஏனோ தயக்கம் காட்டி வருகின்றன.

இருநாட்டு மீனவர்களுக் கும் வாழ்வாதாரம், வாழ்க்கைப் பிரச்சினையாக வகுக்கப்படாத எல்லைக் கோடுள்ளது.

கடலில் எல்லை என்ற பிரச்சினையைப் புகுத்திவிட்டு. இருநாட்டு மீனவர்களையும் வஞ்சிக்கும் நடவடிக்கைகளைத்தான் கடற்படையைக் கொண்டு இலங்கை - இந்திய நாடுகள் மேற் கொண்டு வருகின்றன. மீனவர்கள் பிரச்சினைக்கு அரசு மட்டத்தில் தீர்வு காண்பது நிரந்தரத் தீர்வாக அமையாது என்று இரு நாட்டு அரசாங்கங்களும் கருதினாலும் கூட தமது தலையீடு இன்றி இருநாட்டு மீனவர்களும் பிரச்சினைக்கான தீர்வு நோக்கி முன்னேறக்கூடாது என்பதில் குறியாகவுள்ளன.

பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்வதில் இழுபறி. அவ்வாறு பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிட்டால் மத்தியமா, மாநிலமா என்ற முதன்மைப்படுத்தலில் சிக்கல். அது ஒருபடியாக முடிவுக்குகொண்டுவரப்பட்டால் கட்சி அரசியலில் முரண்பாடு. இவ்வாறு கட்றொழில் அமைப்புக்களின் பிச்சுப்புடுங்கல்கள் எல்லாம் ஓய்ந்து, பேச்சு வார்த்தையை ஆரம்பித்தால் முடிவெடுப்பதிலும் நடைமுறைகளைப் பின்பற்றுவதிலும் முரண்பாடு என்று பிரச்சினைகள் மேலும் அதிகரிக்கப்பட்டு செல்கின்றனவே தவிர தீர்க்கப்பட்டபாடாகவில்லை.

மீனவர்கள் பிரச்சினை இவ்வாறு தீர்க்கப்படாத பிரச்சினையாகவுள்ள நிலையில் மீனவர்களைத் தீர்த்துக்கட்டும் முயற்சிகளை அரசாங்க உயர்மட்டப்பீடத்தினர் எடுத்துவிட்டனரோ என்ற சந்தேகத்தை பிரதமர ரணில்போன்றவர்களின் கருத்துக்கள் ஏற்படுத்தியுள்ளன.

மகிந்த ஆட்சிக்காலத்தில் மீனவர்கள் பிரச்சினை இருநாட்டு அரசாங்கங்களுக்கும் பெரும் பிரச்சினையாக் உருவெடுக்க இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகள் முக்கிய காரணமாக அமைந்திருந்தது. அதேவேளை இலங்கைக் கடற்படையின் நடவடிக்கைகள் தமிழ் நாட்டுஅரசியல்வாதிகளுக்கு நீண்டகாலமாக அதிகளவு பயன் அளித்திருந்தது எனலாம். ஏனெனில் அங்குள்ள சில அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளுக்கு மகிந்தவின் நடவடிக்கைகள் தூண்டுகோலாக அமைந்திருந்தன.

இந்நிலையில், இலங்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்திய ஜனாதிபதித் தேர்தல் இந்திய அரசாங்கத்திற்கு மகிழ்ச்சியை அதிகளவில் ஏற்படுத்தியுள்ளது என்பதற்கு முக்கியமாக இரண்டு காரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும். ஒன்று மகிந்த ஆட்சியில் சீனா மற்றும் பாகிஸ்தானுக்கு அவர் அளித்து வந்த அதிகளவான முன்னுரிமை. அதாவது திறந்த வீட்டுக்குள் நாய்கள் நுழைவது போன்ற வெளிவிவகாரக் கொள்கை, மற்றையது தனது நட்பு நாடுகளுடன் இலங்கையும் தறபோது நட்பு பாராட்டி வருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுடன் இலங்கை அரசியலில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்த அதேவேளை மகிந்தவுக்கு எதிராக உருவாக்கப்பட்ட பொது எதிரணியில் முக்கியமானதும் அதேவேளை பெரும் கட்சியாக ஐக்கிய தேசியக்கட்சி இருந்த தால் அக்கட்சிக்கு ஆட்சி அமைக்கும் அதிகாரம் இலகுவாகக் கிட்டியது. ஆனால் ஆதரவு வழங்கினாலும் அதனால் எந்தவிதப் பயனையும் பெறமுடி யாத நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகள் உள்ளன.

இதே வேளை எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்குவதற்குகூட இந்திய மத்திய அரசு பேதம் பார்க்கின்றது. இருப பினும் மைத்திரி அரசுடன் இணக்கமாகச் செல்வதால் எதிர்ப்பினை அதிகளவில் வெளிக்காட்ட முடியாத நிலையில் தமிழர் தரப்பினர் உள்ளனர்.

தமிழர் தரப்புடன் இணக்கமாகச் செல்ல விரும்பும் மைத்திரி தலைமையிலான அணியி னர் ஒருதிசையிலும் பிரதமர் ரணில் தலைமையிலானஅணியினர் வேறொரு திசையிலும் செல்வதோடு தமிழ் நாட்டில் உள்ள ஈழ உணர்வாளர்களின் நாடியைச் சோதிக்கும் நடவடிக்கையை அரச தரப்பினர் மேற்கொண்டும் வருகின்றனர்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் போதும் அதற்குப் பின்னரான கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியிலும் தமிழ் நாட்டில் ஈழம் சார்ந்த ஆதரவு குறைந்ததாகக் கூறிவிட முடியாது.

ஈழ உணர்வாளர்களை அடக்கும் முயற்சிகளை மகிந்த ஆட்சியில் இருந்தபோது எவ்வாறு முன்னெடுத்திருந்தாரோ அதேபோன்றுதான் புதிய அரசின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன எனலாம். மகிந்த ராஜபக்ஷ தமிழக மீனவர்கள் ஐவருக்குத் தூக்குத் தண்டனை விதித்து ஈழ உணர்வாளர்களுக்கு கடிவாளமிட முற்பட்டார். அதேபாணியில்தான் தற்போதைய அரசும் தனது கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்ட மகிந்தவுக்கு கொஞ்சம் மேலாகச் சென்று சட்டத்தை மீறினால் அதாவது கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பரப்பிற்குள் இந்திய மீனவர்கள் நுழைந்தால் சுடப்படுவார்கள் என்றும் அதற்கு ஒருவிளக்கத்தையும் ரணில் வழங்கியிருந்தார்.

என் வீட்டுக்குள் ஒருவர் அத்துமீறி நுழைந்தால் அவரைச் சுடுவதற்கு எனது நாட்டுச் சட்டத்தில் இடமுள்ளது என்று சுட்டிக்காட்டிய அதே வேளை தூக்குத்தண்டனை விதித்த மகிந்த அரசாங்கத்தைவிட மீனவர்கள் விவகாரத்தில் கடும்போக்கான நடவடிக்கையை மைத்திரி அரசு மேற்கொள்ளும் என்று உயிர் அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

இந்நிலையில் தேர்தலுக்கு முன்னர் இந்தியாவிலுள்ள இந்து ஆலயங்களுக்கு விசேட வழிபாடுகளில் பங்குகொள்வதற்கென சிங்களபௌத்த அரசியல்வாதிகள் செல்வது வழக்கமானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் கடந்த வாரம் குருவாயூரப்பர் ஆலயத்திற்கு ரணில் சென்றிருந்த வேளை சிங்கப்பூருக்குச் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்ககுமார துங்க, மீனவர்கள் விவகாரம் குறித்து ரணில் கூறியது நகைச் சுவை என்று கூறியுள்ளார்.

எல்லை தாண்டும் மீனவர்கள் சுடப்படுவார்கள் என்று பிரதமர் ரணில் சர்ச்சைக்குரிய கருத்தை முன்வைத்த போது எவ்வாறு தமிழக த்தல் எதிர்ப்பலைகள் உருவானதோ அதேபோன்று மீனவர்களின் உயிருடன் விளையாடும் சிங்கள ஆட்சியாளர்கள் என்று சந்திரிகாஅளித்த விளக்கத்திற்கும் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

தேர்தலுக்குப் பின்னரான காலப் பகுதியில் சந்திரிகாவின் கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திக் கொண்டு இருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இலட்சக்கணக்கில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட போது அதனைத் தடுத்து நிறுத்த வக்கத்தவர்களாகயிருந்தவர்களில் ஒருவரான சந்திரிகா, தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால் அது இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்றும் அதனை ஒட்டுமொத்த மக் களும் எதிர்க்கின்றனர் என்றும் தெரிவித்திருந்தார்.

தனது நாட்டு மக்கள் கொல்லப்பட்டது அவருக்கு அபகீர்த்தியாகப்படவில்லை. ஆனால் மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக விசா ரணை நடத்த சர்வதேச நாடுகள் முனைப்புக் காட்டுவது அபகீர்த்தியாகவுள்ளது. இவர்களை எல்லாம் வைத்துக்கொண்டு போரில் மண்ணுக்குள் புதைக்கப்பட்ட உண்மைகளை எவ்வாறு வெளிக் கொணர்வது? போர் ஏற்படக் காரணமானது தொடர்பாக எவ்வாறு ஆராய்வது? நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப எப்படி முடியும்? அது சாத்தியப்படுமா? சாத்தியப் பட விட்டுவிடுவார்களா? என்ற கேள்வி கள் எழுவது நியாயமானதே.

இது ஒருபுறம் இருக்க ஆட்சி மாற்றத் திற்கும் தனது சுதந்திரத்திற்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவுக்கரம் நீட்டி மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுபப உதவியதற்கு நன்றிக்கடன் செலுத்தும் நோக்குடன் ரணிலைக் காப்பாற்ற சந்திரிகா, முற்பட்டுள்ளார் என்றுதான் கூற வேண்டும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இராஜதந்திர நடவடிக்கைகள் இன்று நேற்று ஆரம்ப மானதொன்றல்ல அது நீண்டகாலமாக இலங்கையில் நிலைத்திருக்கும் சகுனித்தனம். அதை அகற்ற மகிந்தவினால் கூட முடியவில்லை. இதுவும் ஒரு காரணமாக மகிந்தவின்தோல்வி க்கு கூறிவிட முடியும். ஆக தெனனிந்தியாவுடன் முறுகல் நிலையைத் தக்கவைத்துக் கொள்வதன் ஊடாக விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவர்களுக்கு, தான் எதிரானவர் என் பதைக் காட்ட முற்படுகின்றாரோ என்று சநதேகப்படத் தேவையில்லை உறுதிப்பாடாகவே கூறிவிட முடியும் காரணம் அதுதான் உண்மை. இந்த உண்மைகளை அடிக்கடி ரணில் வெளிப்படுத்தி வருகின்றார். ஆனால் சந்திரிகா போன்றவர்கள் ஏனோ அவரைக் காப்பாற்ற முற்படுகின்றனர்.

ஈழத்தமிழரின் நியாயமான கோரிக்கைகளை ஏற்க மறுக்கும் மத்திய அரசாங்கம் சொல்லிலும் செயலிலும் தமிழ் மக்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகவே கருதி தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது .ஆனால் இந்த நாட்டில் தமிழர்கள் இரண்டாம் தரப்பிரஜைகள் இல்லை. அவ்வாறு அவர்கள் பார்க்கப்படவில்லை. சகல உரிமைகளுடனும் வாழ்ந்து வருகின்றனர் என்று சர்வதேச நாடுகளை நம்பவைத்துக் கொண்டிருக்கின்றது.

இதற்கென தமிழர் தரப்பில் தனக்கு சாதகமானவர்களை இணைத்துக் கொண்டு பயணிப்பதில் மத்திய அரசாங்கம் உறுதியாகவுள்ளது. இது மகிந்த ஆட்சிக் காலத்திலும் இடம்பெற்றது. தற்போதைய மைத்திரி அரசாங்கத்திலும் தொடர்கின்றது. இந்நிலை மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் நிறுத்தப்படாமல் தமிழர் தரப்பால தொடர்ந்து முன்வைக்கப்பட்டுக் கொண்டேவருகின்றன.

ஆனால் ஈழத்தமிழருக்கு ஆதரவான, ஆதாரமாகவுள்ள தமிழ் நாட்டிலுள்ள ஈழ ஆதரவாளர்களை அடக்கும் வகையில் மகிந்தவுக்குப் பன்னர் மைத்திரி ஆட்சியிலும் ரணில்போன்றவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு மீனவர்கள் விவகாரத்தை ரணில் கையில் எடுத்துள்ளார். அவருக்கு சிக்கல் ஏற்பட்டால் காப்பாற்ற சந்திரிகா போன்றவர்கள் உள்ளனர். உயிர் பறிக்கும் விவகாரத்தைக் கூட நகைச்சுவையாக மாற்றி எல்லாம் சும்மா என்று கதையை முடிக்க முற்படுகின்றனர். இவர்களிடம் உண்மையை எதிர்பார்ப்பதும் நிரந்தரத் தீர்வை எதிர்பார்ப்பதும் சும்மா காலத்தைக் கடத்தும் வேலைதானே என்று கூறுவதில் எந்தத் தவறுமில்லை.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாடியோ...



ஆபீஸ் ல கம்ப்யூட்டர் மானிட்டர்ல பிரச்சினை...

அத சரி பண்ண வந்த சர்விஸ் என்ஜின்யர்.. அத கொஞ்ச நேரம் சரி பண்ண ட்ரை பண்ணிருக்கார்... ஆனா சரி ஆகல.. உடனே...என்ஜினியர் ...சார் மானிடர் இங்க சரி பண்ண முடியாது.. நாங்க மானிட்டர எடுத்துட்டு போய் சரி பண்ணி கொண்டு வர்றோம்...

ஆபீசர்: நோ நோ..... நான் எல்லா முக்கியமான பைல்ஸ் எல்லாத்தையும் டெஸ்க் டாப் ல ஸ்டோர் பண்ணிருக்கேன்.... மானிடர் ல எடுத்துட்டு போக கூடாது......

என்ஜினீயர்: சார் உங்களுக்கு இது புரியல.. உங்க உயரதிகாரிய கூப்டுங்க. நான் சொல்லிட்டு மானிட்டர் எடுத்துட்டு போறேன்...


உயரதிகாரி வந்தார்...

வந்ததும். ஆபீசர பாத்து.... யோவ் ஏன்யா அந்த ஆள் கூட பிரச்சினை பண்ணிட்டு இருக்க...

இதுக்கு தான் சொன்னேன்.. எல்லாத்தையும் டெஸ்க் டாப் ல ஸ்டோர் பண்ணாதய்யான்னு......

# facebook

## முஜே மாலும் நஹி



ஒரு வெளிநாட்டுக்காரர் இந்தியா வந்தார்., தாஜ்மகாலை பார்த்து அதிசயப்பட்டு பக்கத்தில் இருந்த ஒரு ஹிந்திகார்ரரிடம் இதை யார் கட்டியது என்று கேட்டார்.

அந்த ஹிந்திகாரர் "எனக்கு தெரியாது" என்பதை "முஜே மாலும் நஹி" என்று கூறினார். வெளிநாட்டுகாரர் "இந்த முஜே மாலும் நஹி என்பவர் பெரிய ஆள் போல் தெரிகிறது" என்று நினைத்துக் கொண்டே ... குதுப்மினாரை பார்க்கச் சென்றார்.

அங்கே நின்ற ஹிந்தி காரரை பார்த்து "இதை கட்டியது யார்" என்றார். அவரோ "முஜே மாலும் நஹி" என சொன்னார்.


அங்கிருந்த ஒரு இருபது மாடி கட்டடத்தை காட்டி அதைப் பற்றி கேட்டாலும் அதே "முஜே மாலும் நஹி" வியந்துபோன வெளிநாட்டுக்காரரோ, "முஜே மாலும் நஹி" என்பவர் பெரிய பணக்கார்ரர் போல் தெரிகிறது என்று அவருடைய டயரியில் எழுதினார்.

பிறிதொரு நாளில் ஒரு இறுதி ஊர்வலம் போனது "இறந்தது யார் என்று அந்த வெளி நாட்டுக்காரர் கேட்க, மீண்டும் "முஜே மாலும் நஹி". அட... இவ்வளவு பெரிய ஆள் இறந்த போதும் கூட்டமே இல்லையே என்று வியந்த படியே தானும் ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 352

Search for people, places and things Nagendram Home

சத்தியா துவாரகன்




ரஞ்சித் குமார்





லக்சி மோகன்




சக்தி வேல்




நிஷா விஸ்வா




பாலா துரைசிங்கம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# சுப்பர் கிங்சின் வெற்றிக்கு டோனி மட்டும் காரணம் அல்ல...

சென்னை சுப்பர்கிங்ஸ்அணி தான் ஐ.பி.எல். வரலாற் றில் மிகவும் சக்சஸ் அணி. கடந்த 7 சீசன்களில் சென்னை அணி இரு முறை கோப்பையை வென் றுள்ளது. 3 முறை இறுதிப் போட் டியில் தோல்வி கண்டுள்ளது. 7 முறை அரையிறுதி வரை முன்னேறியுள்ளது. சென்னை அணியின் மகத்தான வெற்றிக் கான காரண ங்கள் என்ன?

**8 சீசன்களிலும் ஒரே கப்டன்**

இதுவரை 8 சீசன்களிலும் சென்னை அணிக்கு டோனி தான் கப்டனாக இருந்துள்ளார். டோனி காயம் காரணமாக விளையாடாத சில போட்டிக ளுக்கு சுரேஷ் ரெய்னாவும் கப்டனாக இருந்துள்ளார். அதே வேளையில் டோனி கப்டனாக இல்லையென்றாலும் பிரென் டென் மக்கல்லம், டுப்லெசிஸ், பிராவோ என அணியை வழி நடத்தும் திறன் வாய்ந்த பல வீரர்கள் அணியில் உள்ளனர். சன்ரைசர்ஸ், டெல்லி போன்ற அணிகள் ஒவ்வொரு சீசனுக் கும் ஒரு கப்டனை தேர்வு செய்து தலையில் மண் வாரி போட்டுக் கொள்கின்றன. அணி ஒரே சீரான ஆட்டத்தை வெளிப்படுத்துவத ற்கு நிரந்தர கப்டனும் அவசி யம். அப்போது தான் கப்ட னுடன் சக வீரர்களுக்குள்ள உ ற வு வலுப்படும். ஒரே அணியில் பல கப்டன்கள் இருந்தால், அவருக்கு பிடித்தவர் இவரு க்கு பிடித்தவர் என்ற பிரச்சி னைகள் எழும். சென் னையை பொறுத்த வரை அந்த பிரச்சினை இல்லை. அதேபோல் ஸ்டீ பன் ஃபிளமிங்கும் நீண்ட கால மாக சென்னை அணிக்கு பயிற்சியாளராக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**நட்சத்திர வீரர்களை தக்க வைக்கும் நிர்வாகம்**

சென்னை அணியை பொறுத்தவரை முக்கிய மான வீரர்களை எப்பாடுபட் டாவது தக்கவைத்துக் கொள் கிறது. டோனி, சுரேஷ்ரெய்னா, அஸ்வின் , மைக்ஹஸ்சி போன்றவர்கள் சென்னை அணியின் அடையாளங் கள். இவர்கள் முதல் சீசனில் இருந்து இப்போது வரை சென்னை அணிக்காக மட் டுமே ஆடி வருகின்றனர்.

இதில் மைக்ஹஸ்சி மும் பைக்கு விளையாடி இருந்தா லும், மீண்டும் சென்னையில் வந்து இணைந்து கொண்டார். இதனால் வீரர்களுக்கும் நமது அணி என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடுகிறது. இதன் மூலம் ஒவ்வொரு வீரர்களுக்கும் உள்ள ரசிகர் களையும் சென்னை அணி நிரந்தர மாக தக்கவைத்துக் கொள்கிறது.



**சேப்பாக்கத்தில் விசில் போடும் ரசிகர்கள்**

ரசிகர் பட்டாளங்கள் பார்சி லோனாவின் நியூகேம்ப் மைதா னத்தை நினைவு படுத்துகின்றன. எங்கு நோக் கிலும் மஞ்சள் பட்டா ளங்கள். வீரர்களை அசராமல் உற்சாகப்ப டுத்தும் ரசிகர்கள் தான் சென்னை அணிக்கு பின்புலமாக வுள்ளனர். சான்பிரான் சிஸ்கோ முதல் டுமீல் குப்பம் வரை சென்னை அணியின் "விசில் போடு" மிக பிர பலம். கடந்த 2011 ஆம் ஆண்டு சீசனில் சென்னை சேப்பாக்கத்தில் நடந்த அனைத்து போட்டிகளிலும் சென்னை அணி வெற்றி பெற்றது. இறுதிப் போட்டி யிலும் ராயல் சேலஞ் சர்ஸ் அணியை வீழ்த்தி கோப்பையை வென்றதும் சென்னை அணியின் வெற்றிகளுக்கு சென்னை சேப்பாக்கம் மைதானமும் அடிப்படையான கார ணமாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.



**ஓல்ரவுண்டர்களை வாங்கும் திறமை**

ஓல்ரவுண்டர்களை குறி வைத்து வாங்குவதிலும்சென்னை அணியை மிஞ்ச முடியாது. தற்போதுள்ள சென்னை அணி யில் ஒன்று முதல் 8 வரை உள்ள வீரர்கள், பட்டிங்கில் அச த்தக் கூடியவர்கள். தொடக்க காலத்தில் மோர் கல், ஜேக்ப் ஓரம் ஆகியோர் சென்னை அணி யில் ஓல் ரவுண்டர்க ளாக திகழ் ந்தனர். அந்த சமயத்தில் ஆன் ட்ரூ ஃபிளின்டாப், ஜஸ்டின் கெம்ப், ஸ்டைரிஸ், திசெபெரைரா ஆகி யோரையும் கூடுதலாக வாங்கி வைத்துக் கொண்டது. ஒரு கட்டத்தில் மும்பை இந்திய ன்ஸ் அணி பிராவோவை விடு வித்தது. அவரையும் சென்னை அணி வாங்கிக் கொண்டது. தற் போது சென்னை அணிக்கு பிராவோ மிகப்பெரிய பலம் என் பதை யாரும் மறுக்க முடியாது.

**பீல்டிங்கில் அசத்தும் அணி**

ஐ.பி.எல். அணிகளிலே, பீல்டிங்கில் சிறப்பு கவனம் செலுத்துவதில் சென்னை அணி முதலிடத்தில் உள்ளது என் றால் அது மிகையல்ல. அவுஸ் திரேலிய அணியின் முன்னாள் பீல்டிங் பயிற்சியாளர் ஸ்டீவ் ரிக் சன் சென்னை அணிக்கு பீல் டிங் பயிற்சியாளராகவுள்ளார்.

இவரது தலைமையில் தான் சென்னை அணி வீரர்கள் பீல்டிங்கில் அசத்துகின்றனர். சுரேஷ் ரெய்னா, மக்கல்லம், பிராவோ,டுப்லெசிஸ்,ரவீந்தர ஜடேஜா ஆகியோர் பீல்டிங்கில் சிறப்பாக செயற்பட்டு எதிரணி பட்ஸ்மேன்களின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்தி விடுகின்றனர். அது போல் கட்ச் பிடிப்பதிலும் இந்த வீரர்கள் அசத்துகின்றனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org